★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 3 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 210 | Tuesday 03, September, 2024 | 20 பக்கங்கள் | 50/-




## மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அரச சொத்துக்களை உள்ளடக்கி புதிய முதலீட்டு நிறுவனம்

## நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கும்போது மக்கள்

# கஷ்டங்களை பொறுத்திராவிடின் நாடு பங்களாதேஷ் போலாகியிருக்கும்

### சனச காப்புறுதி நிறுவன நிகழ்வில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



நெருக்கடி நிலையிலிருந்து மீள நாட்டைக் கட்டியெழுப்பும்போது மேற்கொள்ளப்பட்ட கடினமான முடிவுகளை மக்கள் பொறுத்துக் கொண்டிருக்காவிட்டால் எமது நாடும் இன்று பங்களாதேஷாக மாறியிருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு மானிய வட்டியில் வீட்டுக் கடன்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி, மலையக மக்களுக்கு தோட்டக் கிராமங்களுடன் காணி உரிமையை பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். சனச இயக்கத்தின் முதியோர் ஓய்வூதிய காப்புறுதி முறையை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றதுடன் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் அரச சொத்துக்களை உள்ளடக்கி புதிய முதலீட்டு நிறுவனம் ஒன்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் என்றும் அதற்காக புதிய சட்டங்கள் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து ஸ்திரமற்ற நிலையில் இருந்த வேளையில் தான் நாட்டைப் பொறுப்பேற்று கடினமாக முடிவுகளை எடுத்து நாட்டை மீட்டதாக கூறிய ஜனாதிபதி, மக்கள் பொறுமையாக செயற்பட்டிருக்காவிட்டால் இன்று பங்களாதேஷைப்போன்று எமது நாடும் மாறியிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

06

## ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு

# ரணிலை தவிர வேறு எந்த வேட்பாளரும் தீர்வை முன்வைக்கவில்லை

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



ஆசிரியர் தொழிற்சங்கத்தினரை கொழும்புக்கு அழைத்து சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி வேட்பாளர்கள் கூறினாலும் அவர்களது கொள்கை விளக்கத்தில் அது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எந்த வேட்பாளரும் தமது கொள்கை விளக்கத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை முன்வைக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழு வொன்றை நியமித்து அந்த குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் மட்டுமன்றி அனைத்து அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அதனை நடைமுறைப்படுத்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' ஊடக சந்திப்பில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து விளக்கமளித்த அமைச்சர்;

பிரதான வேட்பாளர்கள் தமது கொள்கை விளக்கத்தை முன் வைத்துள்ளனர். நாம் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 55,000 ஆக அதிகரிப்பது தொடர்பில் தெரிவிக்கும் போது ஐக்கிய மக்கள் சக்தியினர் அதனை 57,000 ரூபாவாக வழங்கப் போவதாக கூறுகின்றனர். எனினும் அவர்கள் அவர்களது

06

## "உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு"

# நாமலின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டது



சர்வமத வழிபாடுகளுடன் " நாமல் இலக்கு உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு " என்ற தொனிப்பொருளின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல்

06

# பாராளுமன்றம் இன்றும் நாளையும் கூடவுள்ளது



பாராளுமன்றம் அமர்வு இன்றும் (03), நாளையும் (04) இடம்பெறவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (02) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது..

இன்று மு.ப 9.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல

06

# அரச வைத்தியசாலை மருந்துகளை அச்சமின்றி பயன்படுத்தவும்

### மக்களிடம் சுகாதார அமைச்சர் ரமேஷ் கோரிக்கை



அரசாங்க வைத்தியசாலைகளில் தரமற்ற மருந்துகள் இல்லை என்றும், அச்சமின்றி மருந்துகளை பயன்படுத்துமாறும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன அறிவுறுத்தியுள்ளார்.

மருந்துகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் இருந்து தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு இடமில்லை எனவும், அரச வைத்தியசாலையில் வழங்கப்படும்

06

# தமிழரசுக்கட்சியின் தீர்மானம்; இரண்டொரு தினங்களில் பதில்

### கட்சியின் தலைவர் சிறீதரன் MP தெரிவிப்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கான எதிர்வினையை எதிர்வரும் நாட்களில் வெளிப்படுத்தவிருப்பதாக அதன் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தற்போது லண்டன் சென்றுள்ள அவர் கருத்து வெளியிடும் போது இந்த விடயத்தைக் கூறினார். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று

06

# யாழ். - சென்னை மற்றுமொரு தினசரி விமான சேவை ஆரம்பம்



சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு (செப்டம்பர் 01) முதல் சேவையை ஆரம்பித்த IndiGo விமானம் சென்னை விமான நிலையத்தில் இருந்து 1.55 மணிக்கு புறப்பட்டு பி.ப 3.10 மணியளவில் தரையிறங்கியது. இதன் போது விமானத்திற்கு நீர் விசிறி அடித்து வரவேற்பளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையில் alliance air, Indigo என இரண்டு விமான சேவைகள் தினசரி இடம்பெறவுள்ளன.





## 03 தேர்தலில் போட்டியிடும் 23 வேட்பாளர்கள் மாயம்

### எந்தவித தகவலும் இல்லை - தேர்தல்கள் ஆணைக்குழு

# நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

### ஜனாதிபதியானதும் நடத்துவேன் என்கிறார் சஜித்



வடக்கு மாகாண மக்கள் யுத்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். யுத்தம் இடம்பெற்ற நாடுகளில் யுத்தத்தின் பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாடு கூட்டப்படுகின்றது. என்றாலும் எமது நாட்டில் யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் நிறைவடைந்த போதும், எந்த ஒரு தலைவரும் அவ்வாறான நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுவதற்கு

06

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப்டெம்பர் 15 இல்

### பரீட்சை திணைக்களம்



2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அட்டவணையை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.45 மணி வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டாவது வினாத்தாள் நடைபெறும். அன்று காலை 11.15 மணி முதல்

06

# சஜித் ஆதரவு பிரசாரங்களில் ஈடுபடப்போவதில்லை

### தமிழரசுக்கட்சி மூத்த தலைவர் CVK



யாழ். மத்திய நிருபர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்திருந்தாலும், சஜித்தை ஆதரித்து எந்த பிரசாரக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளப்போவது

06

# சுமந்திரன், சாணக்கியனுக்கு திகாம்பரம் MP பாராட்டு

### துணிச்சலான முடிவு என அறிக்கை



ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோரின் துணிச்சலான முடிவும் தீர்க்க தரிசனமும் வரவேற்கத்தக்கது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின்

06

## சில்லறைக்காசு, சொகுசுகளால் முடியாது

# சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதே எமது இலக்கு



அதிகாரப்பகிர்வு, சமூகங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை, ஆட்சியைக் கைப்பற்றிய அடுத்த கணமே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். மன்னாரில் இடம்பெற்ற ஊடகவியலாளர்

06

# நீதிமன்றை அவமதித்ததாக மைத்திரிக்கு எதிராக மனு

### செப். 27இல் பரிசீலனைக்கு உத்தரவு



நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பரிசீலிப்பதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி கூடுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று (02) மேன்முறையீட்டு நீதிமன்ற

06

## 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

# செய்மதி தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் புரட்சி இலங்கையில் விரைவுபடுத்தப்படும்

## தேர்தல் விஞ்ஞாபனம்

*(நேற்றைய தொடர்)*

எதிர்வரும் சில ஆண்டுகளுக்குள் வலுசக்திக்காக மக்கள் செலவு செய்ய நேரிடும் செலவினைக் குறைத்து மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியன எந்தவித பற்றாக்குறையோ அல்லது தடைகளோ இல்லாமல் வழங்குதல் உறுதி செய்யப்படும்.

திருகோணமலை வலுசக்தி கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கை அறிவு மற்றும் தானியங்கி எதிர்கால உலகினை வடிவமைக்கும் புதியதொருபோக்காக அமையும். அது சுகாதாரம், கல்வி, நிதி, பொருளாதாரம் போன்ற சகல துறைகளினதும் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமையும்.

இலங்கையை டிஜிட்டல் பரிமாற்றத்திற்கு உட்படுத்துவதற்கான தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டம் எம்மால் 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்படும். இதன் மூலம் டிஜிட்டல் பரிமாற்ற முகவர் நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க சபை தாபிக்கப்படும். அதற்கான பின்னணியினை வழங்கி ஏற்கனவே இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தில் நாம் திருத்தம் மேற்கொண்டுள்ளோம்.

செய்மதி தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட இணைய சேவைகளை அறிமுகம் செய்வதன் மூலம் டிஜிட்டல் புரட்சி விரைவுபடுத்தப்படும்.

எமது நாட்டையும் எதிர்கால சந்ததியினரையும் இந்த நவீன போக்குடன் ஒன்றிணைப்பதற்காக நாம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வோம்.இளைஞர், யுவதிகளை டிஜிட்டல் அறிவுரீதியாக பலப்படுத்துவோம்.

மேலும் மூன்று ஆண்டுகளுக்குள் ஒட்டுமொத்த அரச சேவையினையும் செயற்கை அறிவு மற்றும் தானியங்கி முறையின் கீழ் கொண்டு வருவதற்கான திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம். முழுமையான ஈ அரச சேவை(eGovernment ) உருவாக்கப்படும்.

தற்போது எமது நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்கு 5 பில்லியன் டொடர்களாகும். எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் அதனை 15 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிப்பதற்குத் தேவையான பலம் மிக்க அஸ்திவாரம் இடப்படும்.

செயற்கை அறிவின் மூலம் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதனைத் தடுக்கின்ற,அவ்வாறே குரல், உருவம் போன்றவற்றின் மூலம் தனிநபர் அடையாளம் மற்றும் புலமைச் சொத்து உரிமையை பாதுகாக்கும் சட்ட ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படும். மெட்ரிட் புரோட்டொகோல் கணக்கு (Madrid Protocol) மூலம் வர்த்தக மதிப்பெண் பற்றிய புலமைசார் உரிமை பாதுகாக்கப்படும்.

டிஜிட்டல் பிரசைகள் அடையாள அட்டை வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் தேர்தலுக்காக இலத்திரனியல் வாக்களிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்.

***அறிவு ரீதியாக பலம் மிக்க ஒரு சமூகம்:***

எதிர்காலத்தில் நம் எதிரே உள்ள தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான சவால்களை நாம் வெற்றிகொள்ள வேண்டுமாயின் அறிவு மற்றும் தொழில்சார் திறமை கொண்ட ஒரு சமூகம் உருவாக்கப்படல் வேண்டும்.

தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியவற்றை ஒன்றிணைத்து வொகேஷனல் ஸ்கில்ஸ் ஸ்ரீலங்கா( VSSL) என்ற பெயரில் புதியதொரு நிறுவனம் 2025இல் தாபிக்கப்படும். அனைத்து தொழிற்பயிற்சி கல்லூரிகள் மற்றும் நிலையங்கள் அதன் கீழ் கொண்டுவரப்படும்.

பாடசாலைக் கல்விக்குப் பின்னரான கல்வி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும். பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் மாணவர்கள் தொழிற்கல்வி பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்கப்படும். இதன் முன்னோடிக் கருத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு 50000 மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்குத் தேவையான நிதி அரசாங்கத்தால் வழங்கப்படும். இம்முன்னோடிக் கருத்திட்டத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மிகவும் பரந்துபட்ட அளவில் நிதி வழங்குதல் இடம்பெறும்.

2026 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் 9 மாகாண தொழிற்கல்வி சபைகள் தாபிக்கப்படும். மாகாணங்களில் உள்ள சகல தொழிற்பயிற்சி நிலையங்களும் தொழிற் கல்லூரி மட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்டு மாகாண தொழிற்கல்வி சபை சபையின் கீழ் கொண்டு வரப்படும்.

தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பல்கலைக்கழக கல்வி நிறுவனங்கள் அனைத்து மாகாணங்களிலும் தாபிக்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் அதன் கீழ் பீடங்கள் தாபிக்கப்படும். கல்வி ரீதியாக வளர்ச்சியடைந்த வெளிநாடுகளில் நடைமுறையில் உள்ளவாறு இரண்டு வருட கல்வியின் பின்னர் பல்கலைக்கழக கல்வி நிறுவனங்கள்மூலம் ஏற்புடைய பட்டங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பல்கலைக்கழக முறைமையில் தொழில்நுட்பம் எனும் தலைப்பு மீது மிகவும் குறைவான அளவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக Chennai IIT (சென்னை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்) இன் அனுசரணையுடன் கண்டி–கலஹா பிரதேசத்தில் புதியதொரு பல்கலைக்கழகம் தாபிக்கப்படும். ஹேவாகம கோரளை, சியெனாகோரளை மற்றும் சத்கோரளை ஆகிய பிரதேசங்களில் மேலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும். 2025 மற்றும் 2028 காலப்பகுதியில் இப்பணிகள்ஆரம்பிக்கப்படும்.



2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை 2026 இல் மறுசீரமைத்து விமலசுரேந்திர தொழில்நுட்ப பல்கலைக்கழகமாகபெயரிடப்படும்.

2029 ஆம் ஆண்டளவில் இலங்கை பல்கலைக்கழக முறைமைக்கு மேலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் சேர்க்கப்படும்.

★ காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச பல்கலைக்கழகம்

★ விவசாய தொழில்நுட்பம் பற்றிய பல்கலைக்கழகம்

கல்வி அறிவினால் அகிலத்தை வெல்வோம்:

பல வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட நிலைமைகளைக் கவனத்திற் கொண்டே தற்போதைய பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் உருவாகியது. அவை இப்போது பின்னடைந்து விட்டன. அதன் காரணமாக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் கட்டமைப்பு 2040 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப யுகத்துக்கு பொருந்தக்கூடிய வகையில் நவீனமயமாக்கப்படும். அரசு அதற்குத் தேவையான அனைத்து நிதி ஏற்பாடுகளையும் வழங்கும்.

## வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்திகள்; மலையகப் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கும் திட்டங்கள்

ஆசிரியர்கள் அனைவருக்கும் புதிய அறிவுசார் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும்.

2025 ஆம் ஆண்டு மற்றும் 2027 ஆம் ஆண்டிற்குள் பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்துடன் பாடசாலை சபையொன்றை அமைப்பது நிறைவு செய்யப்படும்.

17 வயதாகும்போது பல்கலைக்கழகத்துக்கு செல்லக் கூடியவாறு மென்திறமைகள், வாழ்க்கைத் திறமைகள், பண்பாட்டு விழுமியங்களுடன் நவீன பாடசாலைக் கல்வியைப் போலவே பரீட்சை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது நெறிப்படுத்தப்படும்.

எதிர்வரும் பத்தாண்டு காலத்திற்குள் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் English for All அனைவருக்கும் ஆங்கிலம் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படும். நாடு முழுவதும் காணப்படும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு குறுகிய கால நிகழ்ச்சித்திட்டமாக புதிதாக 2500 ஆசிரிய ஆசிரியைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். ஓய்வுபெற்றோர்1000 பேர், கல்விக் கல்லூரிகளிலிருந்து 400 பேர் மற்றும் போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பட்டதாரிகள் 1100 பேர் ஆவர். இப்பட்டதாரிகளுக்கு 3 மாத கால விசேட பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

பிள்ளைகளின் மனதை ஈர்க்கும் விடயத்துடன் தொடர்புடைய கல்வியை வழங்கக் கூடியவாறு பாடசாலை பாடநூல்கள் முறையை மாற்றியமைப்பதற்கும், பாடவிதானங்களைத் திருத்துவதற்கும் எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளைகளிடம் புதிய அறிவு மற்றும் திறமைகளை மேலோங்கச் செய்தல், ரசனையுணர்வுடன், ஆக்கவுணர்வுடன் மற்றும் சுயமுயற்சியால் எழக்கூடிய ஆளுமை விருத்திசெய்யப்படும். எதிர்கால தலைமுறையினர் உருவாக்கப்படுவது முன்பள்ளிகளிலாகும். எனவே முன்பள்ளி முறைகளை அபிவிருத்தி செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் முன்பள்ளி ஆசிரிய ஆசிரியைகளுக்கு தரம் மிக்க பயிற்சிகளை அளிப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்:

இலங்கையில் இலவச சுகாதார சேவையே காணப்படுகிறது. ஆனாலும் உண்மையாகவே சுகாதார சேவை இலவசமானதா? சிலவேளைகளில் வசதியற்ற ஒருவருக்கு இருதய சத்திர சிகிச்சை போன்ற அத்தியாவசிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட பல வருடங்கள் காத்திருப்பு பட்டியலில் காலம்வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அதனால் எமது சுகாதார சேவைகளைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கி, மக்களுக்கு உயர்ந்தபட்ச சேவைகளை வழங்கக்கூடிய பின்புலமொன்றை உருவாக்குதல் வேண்டும்.

வைத்தியர்கள்,தாதியர்கள், உதவியாளர்கள் மற்றும் வைத்திய தொழிலுடன் தொடர்புடைய துணை சேவையாளர்கள், துணை பணியாட்தொகுதியினர் போன்ற வைத்திய பணியாட்தொகுதியினர் ஆகியோர் மிகவும் சிறப்பாக கடமைகளை ஆற்றுவதற்குரிய சூழலை உருவாக்கி மூளைசாளிகள் வெளியேற்றம் குறைக்கப்படும்.

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாட்டொகுதியினருக்கானஉள்நாட்டுமற்றும்வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படும்.

வைத்தியர்களுக்கு நாட்டிற்குள்ளேயே பட்டப்பின் படிப்பைப் பெற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எமது நாடு முழுவதும் திறமையான மற்றும் புகழ்பெற்ற வைத்தியர்கள் இருக்கின்றனர். அனுபவமிக்க உதவி பணியாட்டொகுதியினர் எமது சுகாதாரத் துறையில் நிறைந்துள்ளனர். அதனால் வெளிநாட்டவர்க்கும்கூட வைத்திய சிகிச்சையினைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய உயர்ந்த மட்டத்தில் அதனை உருவாக்குதல் வேண்டும். அப்போது ஒருவகையில் அந்நிய செலாவணி கிடைக்கும். அந்தப் பணத்தினைப் பயன்படுத்தி மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் சுகாதார வசதிகளை அதிகரிப்பதற்குரிய பின்புலம் உருவாகும்.

அந்த நோக்கத்தினையும் முன்னெடுக்கும் வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலை புதிய திட்டத்திற்கமைய, சர்வதேச வசதிகளைக் கொண்ட நவீன வைத்தியசாலையொன்றாக மீளவும் நிர்மாணிக்கப்படும். அது தென் ஆசியாவிலேயே பிரதான வைத்தியசாலையொன்றாக மாற்றப்படும்.

நாடு முழுவதிலுமுள்ள அரசு வைத்தியசாலைகளின் தரம் உயர்த்தப்படும். இன விகிதாசாரத்துக்கு இணைவான வகையில் அரச மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டு அடுத்த 15 வருட இறுதிக்குள் சுகாதார சேவை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவரப்படும்.

வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தை நவீன தொழில்நுட்பம் நிறைந்ததொன்றாக மாற்றி, வலயத்தில் உயர்ந்த மற்றும் தரமுடைய ஆராய்ச்சி நிறுவனமொன்றாக மாற்றப்படும்.

மருந்து வகைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், சர்வதேச தரநிர்ணய நிறுவனங்கள் ஏற்றுக்கொண்ட ஔடத தர உறுதிப்படுத்தும் நிறுவனமொன்று நிறுவப்படும்.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் தன்னியக்கமுறைகளைப் பயன்படுத்தி இலகு சுகாதார சேவையூடாக வீண்விரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சுதேச மற்றும் பாரம்பரிய வைத்திய முறை மேம்படுத்தப்படும். இச்சம்பிரதாய வைத்திய முறையினை பாதுகாப்பதற்கும் எதிர்கால சந்ததியினருக்கு அதனை ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் வைத்தியசாலைகள் அனைத்தையும் முறையான ஒழுங்குமுறைக்குட்படுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஓன்பது மாகாணங்கள் முழுவதும் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிக்கப்படும்.

நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் தாம் விரும்பும் வைத்தியசாலையில் சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உறுதியான சுகாதார காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

***குறுகிய வட்டத்திலிருந்து வெளி உலகத்திற்கு:***

எமது நாடு ஆகாய மற்றும் கடல் மார்க்க போக்குவரத்தில் மாத்திரமல்ல, தரை வழியாகவும் உலகத்துடன் இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2026 ஆம் ஆண்டாகும் போது பலாலி சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்குவதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்படும்.

ஹிங்குரக்கொட சர்வதேச விமான நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

கொழும்புத் துறைமுகம் மென்மேலும் விரிவாக்கப்பட்டு சர்வதேசத்தில் முன்னேற்றமடைந்த துறைமுகங்களுடன் சரிசமமாக போட்டி போடும் மட்டத்திற்கு கொண்டு வரப்படும்.

திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் 2026 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும்.

நாடு முழுவதுமுள்ள முழுத் துறைமுகக் கட்டமைப்பும் படிப்படியாக நவீனமயப்படுத்தப்படும்.

***அழகிய நகரம்:***

களுத்துறை தொடக்கம் நீர்கொழும்பு வரையிலான பகுதி தனியான பாரிய நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். அதற்கான திட்டம் சிங்கப்பூரின் சுபானா ஜுரொங் ( Surbana Jurong) நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்படவுள்ளது.

காலி, கண்டி,நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்கள் சகல வசதிகளுடன் கூடிய பாரிய நகரங்களாக அபிவிருத்தி செய்யப்படும்.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்தினதும் தலைநகரங்களுக்கு மேலதிகமாக துணை நகரமொன்றை பிரதான வசதிகளுடன் நிர்மாணிக்கவுள்ளோம்.

இந்த அனைத்து நகரங்களையும் சர்வதேச தரத்துக்கமைய சகல நவீன வசதிகளுடன் நிர்மாணிக்க இருக்கின்றோம்.

நாடு முழுவதிலுமுள்ள பெரும்பாலான நகரங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. கொழும்பு நகரில் கூட குறைந்தபட்சம் போதுமான சுகாதார வசதிகள் கூட கிடைப்பதில்லை. அவ்வாறான குறைபாடுகளை நாம் இனங்கண்டுள்ளோம். அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளை 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க இருக்கின்றோம். பெரும்பாலான நகரங்களில் பயன்படுத்தப்படுவது காலம் கடந்து சென்ற மலக்கழிவகற்றல் முறைமை ஆகும். நகர மலக்கழிவகற்றல் முறைமையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

> **தனியார் வைத்தியசாலைகள் அனைத்தையும் முறையான ஒழுங்கு - முறைக்குட்படுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்**

நகரங்களுக்காக வழங்கப்படும் நீர்வழங்கலானது முறைமைப்படுத்தப்படும் என்பதுடன் உலர்வலயம், மலையகம், கரையோரம் போன்ற நீர்ப்பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களுக்கு குழாய்நீர் வழங்கப்படும்.

***போக்குவரத்து:***

நிலைபேறான பசுமை போக்குவரத்து Nவை எனும் இலக்குடன் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் துறையின் எதிர்காலம் பற்றிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பமானது வாகனங்களை வழிநடத்துதல் தொடக்கம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் வரை விரிவுபடுத்தப்படும்.

மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவித்து மின்னேற்றம் செய்யும் நிலையங்கள் நாடு முழுவதும் தாபிக்கப்படும். பொதுப் போக்குவரத்து சேவைகள் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படும்.

தற்போதுள்ள வீதி அபிவிருத்தி செய்தலை தொடர்ச்சியாக மேற்கொண்டு எதிர்காலத்திற்குப் பொருந்தும் வகையில் முழுமையான பெருந்தெருக்கள் திட்டமென்று தயாரிக்கப்படும். கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இப்பணிகள் 2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும்.

***வடக்கிற்கொரு திறவுகோல்:***

ஆரம்ப காலந்தொட்டு இலங்கைப் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் திறவுகோலாக அமைந்தது வடக்கு பிரதேசம் ஆகும். எனினும் யுத்தத்தின் பாதகமான விளைவின் பிரதிபலனாக வடக்கின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. நாம் இப்போது அந்த சக்திமிக்க பொருளாதாரத்தை வடக்கில் மீள மலரச் செய்வதற்குரிய பலத்தை வடக்கிற்கு வழங்குவதற்குரிய திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். மேல்மாகாணத்தைப் போலவே எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கும் திறவுகோலாக வடக்கினை மாற்றுவதே எமது நோக்கமாகும்.

நீண்ட காலமாக வடக்கு எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினை நீர்ப்பற்றாக்குறையாகும். தற்போது கடல்நீரைச் சுத்திகரிக்கும் கருத்திட்டமொன்றை நாம் ஆரம்பித்துள்ளதுடன், மேலும் அவ்வாறான கருத்திட்டங்கள் சில எமது வேலைப்பட்டியலில் காணப்படுகின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நீர் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்திருப்பது 'வடக்கிற்கொரு கங்கை' கருத்திட்டமாகும். 2027 ஆம் ஆண்டளவில் இது ஆரம்பிக்கப்படும். 2026 ஆம் ஆண்டில் வடக்கு முழுவதும் காணப்படும் சிறு குளங்கள் மறுசீரமைக்கப்படும். புளியங்குளத்திலிருந்து ஆரம்பித்து, மன்னாரில் கடலுடன் கலக்கும் பாலியாறு கங்கையினை மறித்து நீர்த்தேக்கமொன்று நிர்மாணிக்கப்படும்.

மீள்புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி பொருளாதார கேந்திர நிலையமாக பூநகரிபுதியதொரு நகரமாக மாற்றப்படும்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்வி மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி மஹால் தமிழ் கலை மற்றும் கலாசார மத்திய நிலையமாக மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பும் பெற்றுக்கொடுக்கப்படும்.

சர்வதேசபுகழ்பெற்ற காலி சாஹித்திய விழாவைப் போலவே தமிழ் சாகித்திய விழாவொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும். விமானம், கப்பல் மற்றும் தரைப் போக்குவரத்துப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு தென்னிந்தியா மற்றும் வடக்குக்கிற்கு இடையில் பொருளாதார, சமூக, கலாசார உறவுகள் வலுவாக்கப்படும்.

***கிழக்கின் உதயம்:***

வலுச்சக்தி, போக்குவரத்து, துறைமுகம், கப்பல், விமானம், கைத்தொழில் போன்ற துறைகளால் நிறைந்த பிரதான பொருளாதார மத்திய நிலையமாக திருகோணமலை மாற்றப்படும். இப்பணிகளுக்காக இந்திய உதவி பெற்றுக்கொள்ளப்படும்.

வெருகல் ஆறு தொடக்கம் பாணமை – குமண கடற்கரைசுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்படும்.

***ஹெடஓயா நீர்க்கருத்திட்டம் 2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும்***

***பெருந்தோட்டத்தின் சூரியோதயம்:***

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை நாம் தற்போது வெளியிட்டிருக்கின்றோம். அதற்கு மேலதிகமாக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பல விசேட வழிமுறைகள் எம்மால் எடுக்கப்படும்.

லயன் அறை வாழ்க்கைக்குப் பதிலாக மிகவும் சிறந்த வாழ்க்கையொன்றை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குவதற்காக வீட்டு உரிமை மற்றும் காணி உறுதிகள் அவர்களுக்கும் உரிமையாக்கப்படும். அதற்கமைய லயன்களுக்குப் பதிலாக கிராமமொன்றை அவர்களுக்கு வழங்குவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படும். 2025 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

பெருந்தோட்ட மக்களுக்கு வேறு பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான காணிகள் போன்ற வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் ஏற்புடைய முறைமைகள் ஆரம்பிக்கப்படும். பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை இல்லாதொழிப்பதற்காகப் பெருந்தோட்டத்திலேயே உருவாகின்ற திறமையான இளைஞர் யுவதிகளை அதில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் ஸ்ரீபாத கல்வியிற் கல்லூரி பீடத்தை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*(12 ஆம் பக்கம் பார்க்க)*

2024 செப்டெம்பர் 3 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.28

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 18
ராகுகாலம் : மாலை : 3.05 - 4.35வரை
சுபநேரம் : காலை : 10.35 - 12.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# 5 வருடத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்படும்

## ரூபாவின் பெறுமதியை அதிகரித்து மேலும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**சிலாபத்திலிருந்து லோரன்ஸ் செல்வ நாயகம்**

'இயலும் ஸ்ரீலங்கா' 5 வருட தேசிய வேலைத்திட்டத்திற்கு நாட்டின் அனைத்து பிரதேச மக்களினதும் ஆதரவு கிடைத்திருப்பதாகவும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார நிலை ஸ்திரப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிலாபத்தில் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் எதிர்காலம் மற்றும் நாட்டு மக்களின் சுபீட்சமான வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு மக்கள் ஆணையைப் பெற்று ஆரம்பித்துள்ள வேலைத் திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்..

நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மையை பாதுகாக்கும் வகையில் அந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.



'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் சிலாபம் நகரில் நடைபெற்றது. அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி:

நாட்டு மக்களின் எதிர்காலத்தை சுபிட்சமாக்கும் வகையில் அரசாங்கத்திடம் பல்வேறு வேலைத்திட்டங்கள் உள்ளன. அந்த வகையில் நாட்டின் அனைத்து பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்படும்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் சிலாபத்தில் தெங்கு செய்கையை அபிவிருத்தி செய்யவும்

06

சர்வதேசத்துடன் ஜனாதிபதி ரணில் மேற்கொண்ட

# ஒப்பந்தங்களை மாற்றினால் நாடு பெரும் சீரழிவுக்குள்ளாகும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை





பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு மீண்டு, கடன் சுமையிலிருந்து விடுபட்டு அபிவிருத்தியடைந்த வளமிக்க நாடாக மேம்பட்டுள்ள நம்நாடு, குறுகிய கால மற்றும் நீண்ட கால சர்வதேச உடன்படிக்கை பலவற்றில் கைச்சாத்திட்டிருப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதில் முதலாவதாக சர்வதேச நாணய நிதியத்துடனான நான்கு வருட கடன் ஒப்பந்தம் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர், இந்த உடன்படிக்கையை மாற்றினால் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியாத நிலை ஏற்படும் என்றும் கூறினார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்து வெல்வோம் என்ற தொனிப்பொருளில், கெஸ்பேவ தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இந்த விபரங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு

06

# தேர்தலில் போட்டியிடும் 23 வேட்பாளர்கள் மாயம்

## எந்தவித தகவலும் இல்லை தேர்தல்கள் ஆணைக்குழு

இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றில் முதன் முறையாக 39 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ள வேட்பாளர்களுள் 23 பேரின் தற்போதைய நிலை தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என கொழும்பிலிருந்து வெளியாகும்



சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொது மக்களுக்கான கூட்டங்களை நடத்தி தேர்தல் வியாபாரங்களை நடத்தி செல்வது சுமார் 15 வேட்பாளர்கள் மாத்திரமே எனவும் அறியக் கிடைத்துள்ளது.

06

# ரணிலுடன் மேலும் பல SJB உறுப்பினர்கள் இணைவர்

## எஸ்.பி. திஸாநாயக்க MP தெரிவிப்பு




ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து வருவதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் (01) ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சுமார் 95 வீதமான உறுப்பினர்கள் தற்போது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து

06

# மனைவியை தாக்கி கொலை செய்தவருக்கு மரண தண்டனை



தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்ததாகக் கூறப்படும் கணவருக்கு மரண தண்டனை விதித்து ஊவா மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

35 வயதுடைய மனைவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பதுளை, கெந்தகொல்ல பிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி தனது மனைவியை இரும்பு கம்பியால் தாக்கி கொலை செய்த கணவருக்கு எதிராக பதுளை பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.


குடும்ப தகராறு காரணமாக இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

06



இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியை நல்லெண்ண சந்திப்பாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் , உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர் ஷெய்க் எம்.எம்.எம். முப்தி முர்ஸி ஆகியோர் தூதுவரின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்தபோது எடுத்த படம். **(படம் அஷ்ரப் ஏ சமத்)**

கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்படும் விளம்பரமாகும்




பெருமைமிக்க ஓர் அரச சேவைக்காக

நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நான் நடவடிக்கை மேற்கொள்வேன்.

- அடிப்படை சம்பளத்தில் குறைந்தபட்சம் 24% அதிகரிப்பு
- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ.25,000 வரை உயர்த்துதல்
- குறைந்தபட்ச சம்பளத்தை ரூ.57,500 ஆக உயர்த்துதல்
- நிரந்தர வதிவிடத்திற்கு அமைவாக பணியிடத்தை வழங்குதல்
- தொழில்சார் கண்ணியத்தை ஏற்படுத்தும் திட்டம்
- அந்தந்த தொழிலின் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையிலான சம்பளத் திட்டம்
- வருடாந்தம் சம்பள படிமுறைகளை உயர்த்துதல்
- வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகள்
- குறைந்த வட்டியில் வீடுகள் அல்லது வீடமைப்புக் கடன்கள்
- வெளிமாவட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு ஊக்கத்தொகை
- சம்பளத்தின் பத்து மடங்கை ஐந்து நாட்களில் கடனாகக் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அவசர கடன் திட்டம்
- அக்ரஹார காப்புறுதித் தொகையை ஆண்டுதோறும் அதிகரித்தல்
- பிள்ளைகளின் உயர் கல்விக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் சலுகைக் கடன் திட்டம்
- அரசியல் செல்வாக்கு இல்லாமல் சுதந்திரமாக தனது கடமைகளைச் செய்யக்கூடிய ஒரு கண்ணியமான அரச சேவை

இது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான தேர்தலாகும். நாட்டை கட்டியெழுப்பக்கூடிய மதிப்பிற்குரிய மற்றும் வினைத்திறன்மிக்க அரச சேவைக்காக என்னுடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

சஜித் பிரேமதாச
ஐக்கிய மக்கள் கூட்டணி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa
X

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
குரோதி வருடம் ஆவணி மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று

அளவுகடந்து செய்யப்பட்ட தீங்கைப் பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும், அந்தத் தீங்கை அறவே மறந்து விடுவதே சிறந்த பண்பாகும்.

# நடைமுறைச்சாத்தியமான திட்டங்களே அவசியம்

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் பிரசாரக் களம் சூடு பிடித்திருக்கிறது. வாக்களிப்புக்கு இன்னும் சுமார் 20 நாட்கள் உள்ளன. ஒவ்வொரு அபேட்சகரும் நாடளவிய ரீதியில் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர். அத்தோடு இத்தேர்தலின் நிமித்தம் முன்னணி அபேட்சகர்கள் அனைவரும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களை மக்கள் முன்வைத்திருக்கின்றனர்.

தாங்கள் பதவிக்கு வந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றும் பணிகள், சேவைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விஞ்ஞாபனங்களை அபேட்சகர்கள் தயாரித்துள்ளனர். அந்த விஞ்ஞாபனங்களில் முன்வைக்கப்பட்டுள்ள ஓரிரு திட்டங்களும் யோசனைகளும் மக்கள் மத்தியில் கலந்துரையாடப்படும் நிலையையும் அடைந்துள்ளன.

அதேநேரம் ஓரிரு அபேட்சகரர்களின் விஞ்ஞாபனங்கள் உள்ளடக்கியுள்ள திட்டங்களில் பெரும்பாலானவை நடைமுறைச் சாத்தியமற்றவையாகவும் பொருத்தமற்றவையாகவும் காணப்படுகின்றன.

அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு மக்களின் ஆணையைக் கோரும் அபேட்சகர்கள் நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டங்களை முன்வைப்பது அவசியம். ஜனநாயக நாடொன்றில் மக்களின் ஆணை அளப்பரிய முக்கியத்துவத்தைப் பெற்றதாகும். அந்த ஆணையைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறைச் சாத்தியமான திட்டங்களையும் யோசனைகளையும் முன்வைப்பது அவசியம். கடந்த காலங்களைப் போன்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வகையிலான நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களை முன்வைத்து மக்கள் ஆணையைப் பெறக் கூடிய காலம் இதுவல்ல.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாடு முன்னொரு போதும் முகம்கொடுக்காத பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதன் விளைவாக மக்கள் பலவிதமான நெருக்கடிகளையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டனர். அதன் ஊடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் இலகுவில் மறந்து, மறைந்து விடக்கூடியவை அல்ல.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்காலத்திலும் தவிர்ப்பதற்கு நாட்டின் பொருளாதாரம் பலமாகவும் வலுவாகவும் இருக்க வேண்டும். வளர்முக நாடாகவும் மூன்றாம் மண்டல நாடாகவும் இருந்து கொண்டு பொருளாதாரத்தின் நிலைத்தன்மையைப் பேணுவது இலகுவான காரியமல்ல.

2022 இல் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை கடும் அர்ப்பணிப்பு மிக்க வேலைத்திட்டங்களின் ஊடாகவே நம்பிக்கை அளிக்கும் வகையில் மீளக்கட்டியெழுப்ப முடிந்தது. அதற்கு சர்வதேச நிதியுதவி வழங்கும் நிறுவனங்களும் நிதியுதவி வழங்கும் நாடுகளும் உதவி ஒத்துழைப்புக்களை வழங்குகின்றன.

நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான நடைமுறைச் சாத்தியம் மிக்க பொருளாதாரத் திட்டங்கள் அடித்தளமாக அமைந்துள்ளன. அத்தகைய திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் ஊடாகவே நாட்டின் பொருளாதாரத்தை வலுவானதாகவும் பலமானதாகவும் கட்டியெழுப்ப வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அது இன்றியமையாத தேவையாக விளங்குகிறது.

அதேநேரம் 2022 இல் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானதைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் பலமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற தேவை பரவலாக உணரப்பட்டிருக்கிறது. நாடு மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவும் இருப்பது ஆரோக்கியமானதல்ல என்ற அபிப்பிராயம் பலர் மத்தியில் காணப்படுகிறது. ஏனெனில் ஏற்கனவே நாடு அத்தகைய நிலையில் இருந்த நிலையில்தான் இப்பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதனால் எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட இடமளிக்கக்கூடாது. அதுவே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

அதன் காரணத்தினால் நாட்டின் பொருளாதாரம் உறுதியானதாகவும் பலமானதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்காக நடைமுறைச்சாத்தியமான திட்டங்களையே தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். இதைவிடுத்து தற்போதைய பொருளாதாரத் திட்டங்களை இடைநடுவில் கைவிட்டு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் போது அதனை ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டிய நிலை ஏற்படும். அது எந்த திசையில் செல்லுமென முன்கூட்டியே சொல்ல முடியாது. அதனால் மீண்டுமொரு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு 2019 இல் 69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று பாரிய எதிர்பார்ப்புடன் பதவியேற்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிமுகப்படுத்திய பொருளாதாரத் திட்டங்களின் விளைவு நல்ல எடுத்துக்காட்டாகும்'.

அதனால் இது மிகவும் பொறுப்பு மிக்க காலகட்டம். கட்சி அரசியல் நலன்கள் பார்க்கக்கூடிய காலமல்ல. பொதுவாக பொருளாதாரம் பலவீனமடையுமாயின் அதன் விளைவு அரசியல் பேதங்கள் பார்க்கக்கூடியதாக இருக்காது. 2022 இல் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்கள் எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிக்கூடியவை அல்ல.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி தீர்மானம் எடுப்பது ஒவ்வொரு வாக்காளரினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# அரச ஊழியர் சம்பளம், சலுகைகள் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அக்கறை செலுத்தாதது ஏன்?

மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரச ஊழியர்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டில் மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில், அரச ஊழியர்கள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களின் அணுகுமுறைகளை இனங்கண்டு கொள்வது மிகவும் அவசியமானதாகும். அதற்குக் காரணம் என்ன முடிவெடுப்பது என்பதைத் தீர்மானிப்பதில் அந்தத் தகவல் அவர்களுக்கு முக்கியமானது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க அரச ஊழியர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தொடர்பில் தனது கொள்கைகளில் மிகக்குறைந்த இடத்தையே வழங்கியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரச ஊழியர்களின் சம்பளம் மாதம் ஒருமுறை உயர்த்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து குறிப்பிடப்படவில்லை. அரச ஊழியர்களின் விஷயத்திலும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை விலைச்சூத்திரம் அமுல்படுத்தப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இருப்பினும், ஒன்று தெளிவாக உள்ளது. அதாவது அரச ஊழியர்களுக்கு போதியளவு சம்பள உயர்வை வழங்குவதில்லை. சம்பளத்தை அதிகரிப்பதற்கு பாரிய தொகை செலவாகும் என்பதால் இவ்வாறான அதிகரிப்பு நடைமுறைக்கு மாறானது என அனுரகுமார திசாநாயக்க பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். இதிலிருந்து தேசிய மக்கள் சக்தியின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கம் ஊதியத்தை உயர்த்தாது என்பது தெளிவாகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, பல்வேறு துறைகளில் உள்ள அரச ஊழியர்கள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களை ஆரம்பித்தனர். இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரச துறையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழுவொன்றை நியமித்தார். குழுவை நியமித்த ஜனாதிபதி, குழுவின் பரிந்துரைகளின்படி, 2025 வரவு செலவுத் திட்டத்தில் ஊதிய முரண்பாடுகள் களையப்பட்டு ஊதியங்கள் அதிகரிக்கப்படும் என அறிவித்தார்.

அந்தக் குழு ஒரு மாதத்தில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அனைத்து அரச ஊழியர்களுக்கும் ரூ.25,0000 மற்றும் குறைந்தபட்ச ஊதியம் ரூ.33,000 ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைத்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அடுத்த வருடம் ஜனவரி 01 ஆம் திகதி முதல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதன்படி, அன்று முதல் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியம் ரூ.53,000 ஆகவும், அனைத்து அரசு ஊழியர்களின் சம்பளம் 24% முதல் 35% ஆகவும் உயரும்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சஜித் பிரேமதாசவும் தனது ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புகளில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சம்பள உயர்வை அமுல்படுத்துவதாக பிரசுரங்களிலும் விளம்பரங்களிலும் பெரும் விளம்பரம் செய்துள்ளார். வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை ரூ.25,000 ஆகவும், அடிப்படைச் சம்பளத்தை ரூ.33,000 இனால் அதிகரிக்கவும், அரச சேவையின் அடிப்படை குறைந்தபட்ச சம்பளத்தை ரூ.55,000 வரை அதிகரிக்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இதேபோன்ற புள்ளிவிபரங்களை முன்வைத்து சஜித் பிரேமதாசவும் அவ்வாறே சம்பள அதிகரிப்பை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடி காரணமாக அரச உத்தியோகத்தர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தார்கள் என்பது இரகசியமல்ல. பொருட்களின் விலை உயர்வு, போக்குவரத்துக் கட்டணம் போன்றவற்றால், இவர்களைப் போல் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை. எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், அவர்களது வாழ்க்கை குறித்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டால், அது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எனினும் வரலாறு முழுவதும் அரச ஊழியர்கள் மாத்திரமன்றி பொதுமக்களும் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுள்ளனர், மீண்டும் ஒருமுறை ஏமாறாதவாறு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அரச ஊழியர்களின் சம்பளம் ரூபா 10,000 இனால் அதிகரிக்கப்படும் என ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். இது இன்னும் ஒரு தேர்தல் வாக்குறுதி என்று பலர் நினைத்தனர். இருந்தும், அரச ஊழியர் ரணில் விக்கிரமசிங்கவை நம்பினர். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரச உத்தியோகத்தர்களுக்கு மகிந்த ராஜபக்ஷ மோட்டார் சைக்கிள்களை வழங்கினார். சம்பளத்துடன் இடைக்கால கொடுப்பனவு சேர்க்கப்பட்டது. 50,000 பட்டதாரிகளுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இருந்தும் அந்த அரச ஊழியர்கள் சொன்னதை மீறாத மனிதர் என்பதால்தான் ரணில் விக்கிரமசிங்கவை அப்போது நம்பினார்கள்.



மறுபுறம், அவர்கள் சம்பள உயர்வை இழந்தால், அது அவர்களின் முழு வாழ்க்கையையும் பாதிக்கும். அதுவரை அரசாங்க ஊழியர்கள் தமது பெரும்பான்மையான வாக்குகளை மகிந்த ராஜபக்ஷவுக்கே வழங்கினர், ஆனால் அது 2015 இல்

## அரச ஊழியர் சம்பள உயர்வில் எக்காலமும் அக்கறை செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

மாறியது. ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதிகளை நிறைவேற்றினார். அரச ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு ரூ.10,000 சம்பள உயர்வு கிடைத்து 2016 ஆம் ஆண்டு முதல் பல படிகளின் கீழ் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க வழங்கிய சம்பள அதிகரிப்பினால் இன்று அரச ஊழியர் சம்பளத்தில் 60% இற்கும் அதிகமான தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க நாடு வங்குரோத்து நிலையில் இருந்த வேளையில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரச உத்தியோகத்தரை கருத்தில் கொள்வதில் ஆர்வம் காட்டினார். 2024 ஆம் ஆண்டு சம்பளம் ரூ.10,000 உயர்த்தப்பட்டு இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் சம்பள அதிகரிப்புக்கு அமைவாக ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், ஏறக்குறைய ஒவ்வொரு அரச உத்தியோகத்தரும் உயர் வருமானத்திற்கு உரித்துடையவர்களாக இருப்பார்கள். பல்வேறு அரசு ஊழியர்களுக்கான சம்பள உயர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் ஒவ்வொரு தரத்தினதும் ஆரம்ப சம்பளம் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பல கட்டங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அலுவலக பணி உதவியாளர்/தரம் III ரூ.5450 அதிகரிக்கும்.

இரண்டாம் தரத்திற்கு 8760 ரூபாவும் முதலாம் தரத்திற்கு 10950 ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்படும். விசேட தர சம்பளம் 13980 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாரதியின் மூன்றாம் தர சம்பளம் 6960 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் தர சம்பளம் 9990 ரூபாவும் முதலாம் தரத்தில் 13020 ரூபாவும் அதிகரிப்பு.

விசேட தரத்திற்கு 16340 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மூன்றாம் நிலை சம்பளம் 8340 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

இரண்டாம் தரம் 11690 ரூபாவும் முதலாம் தரம் 15685 ரூபாவும் சம்பளமாகப் பெறுகின்றன.

## சம்பள உயர்வு வழங்குவது நடைமுறைக்கு மாறானதென்ற எண்ணமா? தேர்தல் விஞ்ஞாபனம் தந்துள்ள ஏமாற்றம்!

முகாமைத்துவ உதவியாளர் மூன்றாம் தரத்திற்கு 10140 ரூபாவாலும் இரண்டாம் தரத்திற்கு 13490 ரூபாவாலும் சம்பளம் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தரம் I சம்பளம் ரூ.17550 அதிகரிக்கும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்றில் 12710 ரூபா சம்பள அதிகரிப்பு கிடைக்கும். இரண்டாம் தரத்திற்கு 17820 ரூபாவும் முதலாம் தரத்திற்கு 25150 ரூபாவும் அதிகரிக்கப்படும்.

மூன்றாம் தரத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர்களுக்கு 12885 ரூபாவும் இரண்டாம் தரத்திற்கு 17945 ரூபாவும் முதலாம் தரத்திற்கு 25275 ரூபாவும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

கதிரியக்க நிபுணர் மற்றும் மருந்தாளர்கள் மூன்றாம் தரத்திற்கு 13280 ரூபா சம்பள அதிகரிப்பு.

இரண்டாம் தரத்திற்கு 18310 ரூபாவும் முதலாம் தரத்திற்கு 25720 ரூபாவும் சம்பளத்தை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தாதிய உத்தியோகத்தர் தரம் III இன் சம்பளத்தை ரூ.13725 ஆகவும், தரம் IIக்கு ரூ.18835 ஆகவும், தரம் Iக்கு ரூ.26165 ஆகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் தர அதிபருக்கு 23425 ரூபாவினால் சம்பளத்தை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

இரண்டாம் தரத்திற்கு 29935 ரூபாவாலும் மூன்றாம் தரத்திற்கு 39595 ரூபாவாலும் சம்பளம் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவையில் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்கு 17480 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும்.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு 19055 ரூபா சம்பள அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ளது.

இரண்டாம் தர அதிகரிப்பில் 20425. முதலாம் தரத்திற்கான சம்பளம் 38020 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சம்பளத்தை 10704 ரூபாவினால் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கான தொகை 13210 ரூபா. சப்இன்ஸ்பெக்டர்களின் சம்பளம் 14050 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் 18290 ரூபாவினாலும், பிரதான பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் 23685 ரூபாவினாலும் உயரும். கிராம உத்தியோகத்தர் முதலாம் தரத்திற்கு 11340 ரூபா சம்பளத்தை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

இரண்டாம் தரத்திற்கு 14690 ரூபாவும் முதலாம் தரத்திற்கு 18750 ரூபாவும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. நிர்வாக கிராம அலுவலரின் சம்பளம் ரூ.23575 உயர்த்தப்படும்.

உதவி செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவி பிரதேச செயலாளர் மற்றும் உதவி ஆணையாளர்கள் ஆகியோரின் சம்பளம் ரூ.28885 உயர்த்தப்படும். பிரதி பணிப்பாளர் மற்றும் பிரதி ஆணையாளர்களின் ஆரம்ப சம்பளம் 43865 ரூபாவால் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பணிப்பாளர், ஆணையாளர் மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர்களின் சம்பளம் 57545 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஆரம்ப வைத்தியர்களின் சம்பளம் 35560 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. இரண்டாம் தர வைத்தியர்களின் சம்பளத்தை அதிகரிக்க 39575 முன்மொழியப்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்கான சம்பளத்தில் 53075 ரூபா அதிகரிப்பு.

மேலதிக செயலாளர் மற்றும் விசேட வைத்தியர்களின் சம்பளத்தை 70200 ரூபாவினால் அதிகரிக்க முன்மொழிவு.

அதேசமயம், அனைத்து சம்பள உயர்வு மதிப்புகளையும் இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இருந்து அரச கூட்டுத்தாபனங்கள்/ சபைகள் மற்றும் சட்டப்பூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆயுதப்படைகளின் சம்பளம் அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரச ஊழியர்களுக்கு பல தெரிவுகள் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவினால் சம்பள அதிகரிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணையை எந்த வகையிலும் நடைமுறைப்படுத்த முடியாது என அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். சஜித் பிரேமதாச அந்த முன்மொழிவை நகலெடுத்து தனது கொள்கைகளில் சேர்த்துள்ளார். 76 ஆண்டுகால தோல்வியடைந்த அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும் என சில வேட்பாளர்கள் கூறுகின்றனர். அதற்காகப் போராடிய இளைஞர்கள் போராட்டத்திற்குப் பிறகு எதிர்பாராத முடிவுகளை எப்படி அனுபவிக்க நேர்ந்தது என்பதை நினைவில் வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

கோஷங்கள் அல்லது இனிமையான கதைகளுக்கு வாக்களிப்பது எந்த விளைவையும் ஏற்படுத்தாது. ஆனால், அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், ஒவ்வொரு ஊழியரின் மொத்த சம்பளமும் குறைந்தபட்சம் ரூ. 5000 மாதாந்தம் அதிகரிக்கும், அது அவர்களின் குடும்ப வாழ்க்கைக்கு குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளிக்கும். கோஷங்களுக்காக அதை இழக்க வேண்டுமா என்பதை ஒப்பிடுவது மிகவும் முக்கியம்

சம்பள உயர்வால் பயனடைவது தனி நபர் மட்டுமல்ல. அடிப்படை ஊதியம் அதிகரிக்க, அவரது ஓய்வூதியமும் அதிகரிக்கிறது. அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் குளிர்காலத்தை கழிப்பதற்கான கொடுப்பனவு அது. மேலும், அரசு ஊழியர்களின் விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் அரசு ஊழியருக்குப் பிறகு பெறும் உதவித்தொகையும் அதிகரிக்கும். ஆகவே குடும்ப நலனுக்காக சிந்தித்து வாக்களிப்பதே உகந்ததாகும்.

**மக்கள் நேசன்**

# குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணிக்க ஏற்பாடுகள்

## சவூதி நிதியம் நிதியுதவி

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா - குறிஞ்சாக்கேணி வீதியின் பாலத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள அண்மையில் அமைச்சரவை அனுமதி வழஙகியுள்ளதையடுத்து சவூதி அரேபியாவின் சவூதி நிதியத்தினால் இப்பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறிஞ்சாக்கேணி மக்களினதும் கிண்ணியா மக்களினதும் மிக நீண்டகாலத் தேவையாகவும் கோரிக்கையாகவுமிருந்த இப்பாலம் புனரமைக்கப்படாமையால் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி இடம்பெற்ற படகு விபத்தில் 4 பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. குறிஞ்சாக்கேணி பின்தங்கிய கிராமமாகும். இங்கு அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். கூலித் தொழிலாளர்களே அதிகம் வாழ்ந்து வருகின்றனர். குறிஞ்சாக்கேணியையும் கிண்ணியாவையும் இணைக்கும் பாலமாகவே இப்பாலம் உள்ளது. இக்கிராம மக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள கிண்ணியாவுக்கே செல்ல வேண்டியுள்ளது. எனவே இப்பாலம் அவர்களுக்கு இன்றியமையாததாகும்.

இம்மக்கள் அடிப்படை போக்குவரத்து வசதிகள் இல்லாமலேயே நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர். உரிய முறையில் பாலம் நிர்மாணிக்கப்படாமையினால் இவர்கள் பணம் கொடுத்து படகு சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்காகப் பயன்படுத்தப்பட்ட படகு தரமற்று இருந்ததாலேயே செய்யப் படாமையினாலேயே மேற்படி படகுவிபத்து இடம்பெற்றது.

2021 ஆம் ஆண்டு அன்றைய வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சராகவிருந்த நிமில் லன்ஸாவினால் இதன் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டாலும், இப்பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன.



இப்போது இதற்கான நிதியை வழங்க சவூதி அரேபியா முன்வந்ததையடுத்து இதற்கான புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தத்திற்கான அனுமதியை அமைச்சரவை அண்மையில் வழங்கி இருந்தது.

இதற்கான நிதியை சவூதி அரசாங்கத்திடமிருது பெற்றுத்தருமாறு அரசாங்கமும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் பொதுஅமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கான சவூதி அரேபியத்தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி மேற்கொண்டமுயற்சியையடுத்துபாலம்நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன் காரணமாக இப்போது இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தங்களது நீண்டகாலத் தேவையான இப்பாலத்தை நிர்மாணிக்க ஒத்துழைப்புகளை வழங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் அமைச்சருக்கும், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கிற்கும், சவூதி தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானிக்கும் இம்மாவட்ட மக்கள் மற்றும் கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பொதுஅமைப்புக்களால் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அஸ்ஹர் ஆதம்**
கல்முனை குறூப் நிருபர்

# கத்தோலிக்கத் திருச்சபை செப்டம்பர் 8ல் சிறப்பிக்கும் அன்னை மரியாளின் பிறப்புப் பெருவிழா

கத்தோலிக்கத் திருச்சபையானது செப்டம்பர் 8ஆம் திகதி அன்னை மரியாளின் பிறப்புத் திருவிழாவை கொண்டாடுகிறது.

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடுவது போன்று திருச்சபையின் மாபெரும் சிறப்பு திருவிழாவாக அன்னையின் திருவிழாவும் சிறப்பிக்கப்பட்டு வருகின்றது.

கருவின்போதே கறையொன்றும்
படியாத இறைமகளாய்
அழைப்பு பெற்றவளே மாமரி.
அருள் நிறைந்த மரியே! என்று
அன்று வானதூதரால் வாழ்த்துப்
பெற்ற அழகின் முழுமையானவள்
நம் அன்னை மரியாள்.

அனைத்து அருள் வரங்களோடு அழகில் மிளிர்பவள்! ஆதவனை ஆடையாய் அணிந்த சுடரொளி அவள். படைப்புகளிலே ஜென்மப் பாவம் அறியாதவள்.

சாலமோனின் எழினிகளைப் போல்அழகு வாய்ந்தவள் அன்னை மாமரி. காண்போரை கவர்ந்திழுக்கும் காந்தசக்தி அவரிடம் உண்டு.மரகதம் சூடிய வானவில் போன்ற அரியணை அவளது.

சுவக்கின் அன்னம்மாள் கருவறையில் வரையப்பட்ட வண்ண ஓவியம் மரியாள்.

அன்று வான தூதரின் வார்த்தைகளை "அப்படியே ஆகட்டும்" என்று தாழ்ந்து ஏற்றவள் நற்செய்தியின் முதல் சீடராக யூதேயா மலைநாட்டிற்கு கடந்து சென்றவள்.மனிதநேயம் அங்கே நிரம்பி வழிந்தது.மரியாள் அருள் ஊற்றாகி முழுமையானாள்.

அன்னை அன்பின் நிறைகுடம் பிறர் குறை நீக்கும் மணிமகுடம்! கருணையின் ஊற்று! மீட்பின் அருள்கொடை அவர்.

இறைவனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாள்;

அன்னை மரியாளைத் தவிர்த்து விட்டு இறைவனின் திட்டத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது. இறைவனின் மீட்புத் திட்டத்தின் துவக்கமும், முடிவுமாய் அவர் இருக்கிறார்.

பாவத்தில் விழுந்து கிடந்த மனுக்குலத்தை மீட்பதற்காக இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மனுக்குலத்தின் பாவங்களுக்கு விலையாக தனது உயிரையே சிலுவையில் கையளித்தார். பின் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து தந்தையிடம் மீண்டும் இணைந்திருக்கிறார். அவரை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, பாவங்களை அறிக்கையிட்டு அவரிடம் சரணடைபவர்களுக்கு மீட்பை அவர் வழங்குகிறார். இதுவே இறைவனுடைய மீட்பின் திட்டம்.

இந்த மீட்புத் திட்டத்தின் முதல் படியான "மனித அவதாரம்" அன்னை மரியாளிடம் தான் துவங்குகிறது. உலகம் முழுவதையும் தனது கண்களால் ஊடுருவிப் பார்த்த தந்தையின் கண்களுக்குப் புனிதமும், இறைத் தன்மையும் நிறைந்த ஒரே ஒரு இளம் பெண் தான் தென் பட்டார். அவர் த ான்



மரியாள்.

இறைவனின் மீட்புத் திட்டத்தின் துவக்கப் புள்ளி அன்னை மரியாளிடம் கபிரியேல் தூதர் உரைத்த "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" எனும் இறைவார்த்தையில் துவங்கியது.

அவமானங்களும், அசௌகரியங்களும் புறந்தள்ளி இறைமகன் இயேசுவை ஈன்றெடுத்தார் அன்னை மரியாள். மண்ணிற்கு மனுமகனாய், தனக்குத் தலைமகனாய் தொழுவத்தின் முன்னணையில் இயேசு பாலனை கிடத்தியபோது மீட்பின் விடியல் தனது முதல் வெளிச்சக் கீற்றுகளை வெளியிட்டது. தொழுவம் தொழுகை பெற்ற நிகழ்வின் பின்னணியில் அன்னை மரியாளின் அர்ப்பணிப்பும், தியாகமும் நிலைத்திருந்தன.

பன்னிரண்டு வயதில் காணாமற்போன மகனை ஆலயத்தில் கண்டுபிடித்தார் அன்னை மரியாள். இயேசுவின் ஆன்மீகப் பயணத்தின் வழியை புரிந்து கொண்ட அன்னை அமைதிகாத்தார். 'அறிவிலும் ஞானத்திலும்' இயேசுவை வளர்த்த அன்னை மரியாள் இயேசுவின் மீட்புத் திட்டத்தின் பயணத்தில் தொடர்ந்து பயணிக்கின்றார்.

'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என இயேசுவை நோக்கி கையை நீட்டிய அன்னை மரியாள் புதுமையின் முதல் சுவடுக்கு காரணமாகிறார். மனுமகனை இறைமகனாய் அடையாளம் காட்டியவை அற்புதச் செயல்களும், அடையாளச் செயல்களுமே. அவற்றின் முதல் புள்ளி அன்னை மரியாளினால் துவங்கி வைக்கப்பட்டது இறைசித்தமன்றி வேறில்லை. இயேசுவின் மீட்பின் பயணத்துக்கான வழியில் அன்னையின் பங்களிப்பு தொடர்ந்தது.






**திருமதி அருள்சீலி அந்தோனி**

# மஹாவத்தை புனித அந்தோனியார் ஆலய முதல் நன்மை திருப்பலி



கொழும்பு மஹாவத்தை புனித அந்தோனியார் ஆலயத்தில் சிறுவர்களுக்கான முதல் நன்மை வழங்கும் நிகழ்வு ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி ஜுட்ராஜ் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. உதவிப் பங்குத்தந்தை அருட்பணி சுதர்ஷன் செபஸ்டியன் அடிகளாரும் இணைந்து முதல் நன்மை திருப்பலி பூசையை ஒப்புக் கொடுத்தனர்.

படங்கள் உதவி: மத்தியூ ஜேசுதாசன்

மட்டக்களப்பு ஆயித்தியமலை

# புனித சதா சகாயமாதா திருத்தலத்தல திருவிழா



மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க ஆலயங்களுள் வரலாற்றுப் புகழ்பெற்ற ஆயித்தியமலை புனித சதா சகாயமாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஆகஸ்ட் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கரடியனாறு சந்தியிலிருந்து அன்னையின் திருச்சொருப பவனி ஆரம்பித்து ஆலயத்தை வந்தடைந்து, அருட்தந்தை ஜெரிஸ்டன் வின்சன் தலைமையில் அன்றுமாலை கொடியேற்றம் இடம் பெற்று முதலாம் நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தினமும் நவநாள் ஆராதனைகள் இடம் பெற்று எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை திருச்சுரூப பவனிமணிக்கு இடம் பெற உள்ளது. வழமைபோன்று மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திலிருந்து ஆரம்பமாகி வவுணதீவு ஊடாகவும், மற்றுமொரு திருச்சுரூப பவனி செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்திலிருந்தும் ஆரம்பமாகி கரடியனாறு ஊடாகவும் இரு வழிப் பாதயாத்திரையாக ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா ஆலயத்தை வந்தடையும்.

திருத்தலத்தின் பெருவிழா கூட்டுத்திருப்பலி மட்டக்களப்பு மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் எதிர்வரும் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவு பெறும்.

**படங்கள், தகவல்: கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மறைமாவட்ட புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக

# ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை பணி ஏற்பு திருப்பலி மரியாள் பேராலயத்தில்



மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகராக பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகை பரிசுத்த பாப்பரசரால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர் தமது பணிகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 16 வருடங்களாக குருவாகவும் உதவி ஆயராகவும் அதனைத் தொடர்ந்து ஆயராகவும் மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணி வாழ்வை முன்னெடுத்து வந்த ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை தமது பணியிலிருந்து ஓய்வு பெறும் நிலையில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தினை பரிபாலிப்பதற்காக பரிசுத்த பாப்பரசரினால் கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக கடந்த ஆகஸ்ட் 19ஆம் திகதி நியமிக்கப்பட்டு செப்டம்பர் முதலாம் திகதி தமது பணிகளை பொறுப்பேற்றுள்ளார்.

ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை மட்டக்களப்பு ஆயரில்லத்தில் ஓய்வு நிலை ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து பேண்ட் வாத்திய அணிவகுப்புடன் புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து புனித மரியாள் பேராலயத்தில் பதவியேற்பு விசேட திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந் நிகழ்வுகளில் மட்டக்களப்பு மறைமாவட்ட குரு முதல்வர் ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார்,சர்வ மதத் தலைவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், பொது நிலையினர். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஐஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், விமானப்படை உயரதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

விசேட திருப்பலியின் நிறைவில் புதுப்பொலிவு பெற்றுள்ள சாள்ஸ் மண்டபத்தினை ஓய்வு நிலை ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்ட புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகர் கலாநிதி அன்டன் ரஞ்சித் ஆண்டகை ஆகிய இருவரும் இணைந்து உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**படங்கள் தகவல்:கல்லடி குறூப் நிருபர் உதயகாந்த்**



## ரணிலை தவிர வேறு எந்த வேட்பாளரும்...

தோல்வியைக் காட்டவில்லை. எமது வேலைத் திட்டம் அவர்களது வேலைத் திட்டம் போல் எந்த வழிகாட்டலும் இல்லாத வேலைத் திட்டமல்ல. சம்பள முரண்பாட்டு தீர்வு தொடர்பில் எந்த கொள்கை விளக்கத்திலும் தீர்வு முன்வைக்கப்படவில்லை நாம் புதிதாக அதைத் தெரிவிக்க வேண்டிய அவசியமும் கிடையாது. ஏனெனில் கொள்கை விளக்கம் வெளியிடுவதற்கு முன்னரே நாம் சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொண்டுள்ளோம். அதனால் நாம் கொள்கை விளக்கத்தில் மீண்டும் அதனை உட்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. நெருக்கடியிலிருந்த நாட்டை நாம் இரண்டு வருடங்களில் இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். கல்வியமைச்சர் என்ற வகையில் நான் கல்வித்துறையினரிடம் தெரிவிப்பது அந்த நம்பிக்கையை எதிர்காலத்திலும் முன்னெடுத்துச் செல்லுங்கள் என்பதே. ஆசிரியர்களுக்கு மொடியூலர் முறைமையின் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு ஆகியவற்றை வழங்குவதற்குப் பதிலாக இலகுவான முறைமையை அறிமுகம் செய்யும் வரை 2025 ஜூலை மாதம் வரை மொடியூலர் முறைமையை நிறுத்தி வைப்பதற்கு ஆணைக் குழுவுடன் இணைக்கப்பாடு காணப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தரம் 5 புலமைப்பரிசில்...

மதியம் 12.15 மணி வரை முதலாவது வினாத்தாள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பரீட்சைக்காக விண்ணப்பித்தவர்களின் அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை ஆவணங்கள் கிடைக்காத அதிபர்கள் www.doenets.lk அல்லது https://onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்திற்குச் சென்று ஆவணத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகவல்கள் திருத்தப்பட வேண்டுமானால், 02 ஆம் திகதி முதல் செப்டம்பர் 9 ஆம் திகதி வரை ஒன்லைனில் திருத்தம் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி இலக்கங்கள் – 0112 784 208/ 278 4537 / 2784537 / 2786616 /2785413, அவசர இலக்கம் – 1911, தொலைநகல் – 0112 784422

## தமிழரசுக்கட்சியின் தீர்மானம்;...

முன்தினம் தீர்மானித்தது. எனினும் கடந்த காலங்களில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வந்த சிறீதரன், இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் மாவட்ட ரீதியாகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளாத நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக நல்லூர் உற்சவ நாளில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்தக் கூட்டத்தில் சுகவீனம் காரணமாகக் கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்திருந்ததாகவும், சிறீதரன் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கூட்டத்துக்கு தெரியப்படுத்தி இருந்ததாகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். எனவே சிறீதரனின் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டே தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன் கட்சித் தலைவர் இல்லாமல் மத்திய செயற்குழு தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்று கட்சி யாப்பில் இல்லை என்றும், தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான கோரத்தை விட அதிகமான உறுப்பினர்கள் பங்குபற்றி இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நாட்டின் அபிவிருத்திக்கு சர்வதேச...

நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த மாநாட்டின் ஊடாக கிடைக்கின்ற உதவிகளை வட,கிழக்கு மாத்திரமல்லாமல் முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்வதற்கு பயன்படுத்த முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடாத்துவதோடு, அதன் ஊடாக வட,கிழக்கு மாகாணங்கள் மாத்திரமல்லாமல் முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேசத்தில் தேர்தல் காரியாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேபோன்று ஒரே நாட்டிற்குள் உச்சபட்ச அதிகாரத்தை பகிர்ந்து, அரசியல் ரீதியாக வளப்படுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.

மாகாண சபைகளின் அதிகாரங்களை அரசாங்கம் பறித்திருக்கின்றது. அது இடம்பெறக் கூடாது. மத்திய அரசாங்கத்தினாலும், மாகாண சபைகளின் ஊடாகவும், உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவும் இடம்பெற வேண்டிய அபிவிருத்திகளை முன்னெடுக்க தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றின் அதிகாரங்களை பறிக்கக் கூடாது. வட மாகாண சபை இல்லாமல் இருக்கின்றது. அதனால் வட, கிழக்கு பிரதேசங்கள் உட்பட நாட்டின் ஏனைய அனைத்து பிரதேசங்களுக்கும் குறுகிய காலத்துக்குள் மாகாண சபை தேர்தலை நடத்தி அதன் ஊடாக அபிவிருத்தி வேலை திட்டங்களை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்று தருவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## கஷ்டங்களை பொறுத்திராவிடின்...

1977 இல் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டது. அதன் படி, புதிய நிறுவனங்கள் மற்றும் புதிய வணிகங்களை உருவாக்க ஒவ்வொரு குழுவும் முன்வந்தன.

அப்போது சனச இயக்கத்தை ஆரம்பிக்க பி.ஏ.கிரிவந்தெனிய முன்வந்தார். அதன்படி, இந்தத் திட்டத்தை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் உற்பத்தி மற்றும் விநியோகம் பிரிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை 1962 இல் டட்லி சேனாநாயக்க மற்றும் ஜே. ஆர். ஜெயவர்தன ஆகியோரால் கொண்டு வரப்பட்டன. உரிமைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான முன்மொழிவாக இது அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி, சனச இயக்கங்கள் போன்ற அமைப்புகள் ஊக்குவிக்கப்பட்டன. இது இலங்கையின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, நாடு ஸ்திரமற்ற நிலையில் இருந்த நேரத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். அன்று மக்கள் பொறுமை காக்கவில்லை என்றால் இன்று இந்த நாட்டில் பெரும் அராஜக நிலை உருவாகியிருக்கும்.

மக்கள் வீதியில் இருந்து கொண்டு நாட்டை நிர்வகிக்க முயன்றால் இன்று பங்களாதேஷுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் கடினமான மற்றும் பிரபலமற்ற முடிவுகளை எடுக்க நேரிட்டது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வாகனம், வீடு, நவீன மின்சாதனங்கள் வாங்குவது மக்களின் கனவாக இருந்தது. நாம் கடினமான காலத்தை கடந்துவிட்டோம். பொருளாதாரம் தற்போது ஸ்திர நிலையை அடைந்துள்ளதால், மக்களின் கொள்வனவு செய்யும் சக்தியும் அதிகரித்துள்ளது. மக்களுக்கு காணி உரிமைவழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நாட்டு மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இருபது இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன.கொழும்பு நகர அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு அவர்களின் வீட்டின் உரிமைகளை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்தோம். மலையக மக்களுக்கான தோட்ட கிராமங்களை உருவாக்கி ஒரு குடும்பத்திற்கு ஏழு பேர்ச்சஸ் காணியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பொறிமுறையின்படி மக்களுக்கு "உரிமைகள்" வழங்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. மேலும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலகு வட்டியில் வீட்டுக்கடன் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் நிதி, பிணைமுறிப் பத்திரங்களை வாங்க பயன்படுத்தப்பட்டது. இப்போது நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின்படி அரச செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

## பாராளுமன்றம் இன்றும்...

விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை வெளிநாட்டுத் தீர்ப்புக்களை பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை(திருத்தச்)சட்டமூலம்(இரண்டாம் மதிப்பீடு), வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

நாளை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இறக்குமதி ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான இரு ஒழுங்குவிதிகள், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான இரு கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதி என்பன விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படவுள்ளன.

பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சுமந்திரன், சாணக்கியனுக்கு...

பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகம்பரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் உட்பட சிறுபான்மை மக்களின் நலன் கருதி தீர்க்கமான முடிவை எடுத்துள்ளமை பாராட்டத்தக்கது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளரை ஆதரித்து அவருக்கு வாக்களிப்பதன் ஊடாகவே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற தீர்க்கதரிசனம் மிகுந்த செயற்பாடு அவர்களின் அரசியல் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மலையகம் உட்பட தமிழ் மக்களோடு, முஸ்லிம் மக்களும் இணைந்து சஜித்துக்கு பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர்.

அவரின் வெற்றியில் பங்காளர்களாக இருந்து எமது மக்களின் கோரிக்கைகளை முன்வைத்து பிரச்னைகளுக்குத் தீர்வு காண முன்வந்துள்ள சுமந்திரனும் சாணக்கியனும் எடுத்துள்ள சாதுரியமான முடிவை பாராட்டுகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிமன்றை அவமதித்ததாக...

நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தனது கட்சிக்காரராக கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்ததையடுத்து அவர் கட்சியின் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி அவர் தொடர்ந்தும் தலைவராக செயற்படவில்லை எனவும் நீதிமன்ற உத்தரவை மீறி அவதூறு செய்யவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அப்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாந்த ஜெயவர்தன, நீதிமன்றில் கோரிக்கை விடுத்து, இந்த மனுவின் உண்மைகளை உறுதிப்படுத்தும் திகதியை கோரினார்.

அதன்படி, மனுவை பரிசீலிக்க இம்மாதம் 27ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சரத் சந்திரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த ஏப்ரல் மாதம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்ததாக மனுதாரர் கோரியுள்ளார். இவ்வாறான இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

## சஜித் ஆதரவு பிரசாரங்களில்...

இல்லையென அந்த கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் (1) நடந்த கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் இதனை அவர் அறிவித்திருந்தார். நேற்றைய மத்தியகுழு கூட்டத்தில், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் அந்த தீர்மானத்தை ஆதரித்தனர். இதேபோல, பொதுவேட்பாளர் ஆதரவு நிலைப்பாட்டை கிளிநொச்சி கிளை சார்பில் த. குருகுலராஜா சமர்ப்பித்தார். என்றாலும், கூட்டத்தில் கலந்து கொண்ட 26 பேரில் பலர் சஜித்தை ஆதரித்தனர்.

ஜனாதிபதி தேர்தல் நிலைப்பாடு தொடர்பில் கட்சிக்குள் நடந்த கலந்துரையாடல்களில், யாரையும் ஆதரிக்காமல் மக்கள் விருப்பமானவர்களுக்கு வாக்களிக்கலாமென அறிவிக்கலாமென சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்திருந்தார்.

அதுவே அவரது நிலைப்பாடாகவும் இருந்தது. எனினும், மேற்படி கூட்டத்தில் சஜித் ஆதரவு நிலைப்பாடு எடுக்கப்பட்டது. நேற்றைய கூட்டத்திற்கு சீ.வீ.கே.சிவஞானமே தலைமைதாங்கினார். உடல்நல குறைவினால் மாவை கலந்து கொள்ளாத நிலையில், சீ.வீ.கே தலைமைதாங்கினார். கூட்டத்தின் போது தனது நிலைப்பாட்டை அவர் அறிவித்தார்.

சஜித்தை ஆதரிப்பதாக கட்சி அறிவித்தாலும், நான் சஜித் ஆதரவு பிரசாரங்களில் ஈடுபடமாட்டேன். சஜித்தை ஆதரித்து மேடைகளில் பேசமாட்டேன் என்றார்.

## சமூகப் பிரச்சினைகளை...

சந்திப்பில் விளக்கமளித்த அவர் தெரிவித்ததாவது, "சிறுபான்மைச் சமூகங்களின் ஆதரவுடன் சஜித் பிரேமதாசவை வெல்லவைக்க வேண்டும்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நாளாந்த தொழிலாளர்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் பல பிரச்சினைகள் உள்ளன.

அயல்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களால் அதிகம் பாதிக்கப்படுவது மன்னார் மாவட்டமே. இது குறித்து, எமது வேட்பாளர் சஜித்திடம் விளக்கியுள்ளோம். அவரது ஆட்சியில் இதற்கு தீர்வு கிடைக்கும். சமூகப் பிரச்சினைகளை சில்லறைக்காசுச் சொகுசுகளால் தீர்க்கவே முடியாது. வாக்குகளில்லாத சிலர் அவரவர் வாய்ப்புகளுக்காகவே ரணிலை ஆதரிக்கின்றனர். விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் எஞ்சிய கால ஆட்சியை, எச்சில் ஆசைகளுக்காகப் பயன்படுத்துவோரை ஆட்சியிலிருந்து விரட்டுவோம்.

பரந்தும் விரிந்தும் கிடக்கும் வடமாகாண பூமியில், சுற்றுலாத் தளங்களை உருவாக்கி, வாழ்வாதரத்தைப் பலப்படுத்த சஜித் பிரேமதாசவைப் பலப்படுத்துங்கள்" என்று குறிப்பிட்டார்.

## நாமலின் தேர்தல் விஞ்ஞாபனம்...

விஞ்ஞாபனம் நேற்று திங்கட்கிழமை (2) காலை 10.00 மணியளவில் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை தனது விஞ்ஞாபனத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க, திலித் ஜயவீர ஆகியோர் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தாக்கது.

உங்கள் நலனில் அக்கறைக்கொண்ட ஒருங்கிணைந்த வளர்ச்சியை நோக்கிய தசாப்தம் என்ற தொலைநோக்கு பார்வையை கொண்டு இந்த விஞ்ஞாபனம் வெளியாகியுள்ளது.

## தேர்தலில் போட்டியிடும் ...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல், குறித்த வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள தொலைபேசி இலக்கங்கள் கூட போலியானவை என தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது பிரதான நான்கு கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

## ரணிலுடன் மேலும் ...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர் என்று தெரிவித்த அவர்,

எதிர்வரும் நாட்களில் ஏனைய கட்சிகளைச்சேர்ந்த பலர் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டார். ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் கூறினார்.

## ஒப்பந்தங்களை மாற்றினால்...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும். வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதற்காக, கூட்டு நிதி உதவிக்குழு மற்றும் சீனா மற்றும் பிற இருதரப்புக் கடனாளிகளுடன் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறைக்கு அமைவாக அரசாங்கம் செயல்படவில்லை என்றால், உலகெங்கிலும் உள்ள நீதிமன்றங்களில் இலங்கைக்கு எதிரான வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமைச்சர் தெரிவித்தார். இந்த சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க இலங்கை பாராளுமன்றம் 05 முக்கிய கட்டளைகளை நிறைவேற்றியுள்ளது. அதாவது, பணமோசடியைத் தடுக்கும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம், அரசாங்கம் விரும்பியபடி கடன் வாங்குவதைத் தடுக்கும் பொதுக் கடன் முகாமைத்துவச் சட்டம், அரசியல் வாக்குறுதிகளுடன் வரவு செலவுத் திட்டத்தைத் தடுக்கும் பொது நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார மாற்றம். நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியக் கொள்கையின் போக்கைக் குறிப்பிடும் சட்டமும், மோசடி மற்றும் ஊழலைக் கையாளும் ஊழல் தடுப்புச் சட்டம் ஆகியன இதில் அடங்கும் என்று குறிப்பிட்ட அமைச்சர் இதனால், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மிகத் தெளிவான திட்டவட்டமான வேலைத்திட்டத்தை சட்டமாக்கி இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்வந்துள்ள ஒரே ஜனாதிபதி வேட்பாளர் திரு.ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்றும் கூறினார்.

ஏமாற்றும் மற்றும் மோசடி விசித்திரக் கதைகள் போன்ற தேர்தல் வாக்குறுதிகளை வழங்கும் எந்தவொரு வேட்பாளருக்கும் அரசியல் செய்யலாம், ஆனால் நாட்டை நிருவகிக்க முடியாது. கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச உடன்படிக்கைகளில் இருந்து இலங்கை விலகிச் செல்லுமாயின், இன்னும் பல தசாப்தகாலங்களுக்கு நாடு மீட்க முடியாத பயங்கரமான பொருளாதார விழ்ச்சிக்கு உள்ளாவதை எவராலும் தடுக்க முடியாது என்றும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். நமது நாடு கிரீஸ், வெனிசுலா, ஸிம்பாபே, ஆப்கானிஸ்தான், கானா, கோஸ்டாரிகா போன்ற நாடாக மாறுவதை தடுக்க சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தால் மட்டுமே முடியும் என்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் கூறினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே ,ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்ட பலர் கலந்துகொண்டனர்.

## இன்றைய பலன்கள்

### (03.09.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.



**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.



**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.



**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.



**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.



**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.




**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.



**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.



**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.



**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.



**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.



## அரச வைத்தியசாலை மருந்துகளை...

மருந்துகளை நோயாளர்கள் அச்சமின்றி பாதுகாப்பாக பயன்படுத்த முடியும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். மேலும், சுகாதார அமைச்சு தரமற்ற மருந்துகளை கொள்வனவு செய்யாது எனவும், தான் சுகாதார அமைச்சராகப் பணியாற்றும் வரையிலும், இந்த அதிகாரிகள் பணிபுரியும் வரையிலும், சட்ட விரோதமான அல்லது பாரம்பரியத்துக்கு விரோதமான செயல்களில் ஈடுபடமாட்டேன் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## 5 வருடத் திட்டம் நடை...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம்பே பொருளாதார வலயத்தை உருவாக்கவும் சிலாபம் துறைமுகத்தை பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நாடு நெருக்கடியை எதிர்நோக்கியபோது ஆட்சியமைக்க அழைப்பு விடுத்தும் முதற் தடவையாக எதிர்கட்சித் தலைவர் ஒருவர் அதனை நிராகரித்தார். இந்த நிராகரிப்பு கின்னஸ் சாதனையாகும்.

போராட்டத்தின் போது பாராளுமன்றத்தைக் கைப்பற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்ற போது அங்கிருந்த இன்று தலைமைத்துவம் கோரும் அனைவரும் பயந்து ஓடினார்கள்.

நான் உடனடியாக செயலில் ஈடுபட்டு நிலைமையை கட்டுப்படுத்தியிருக்காவிட்டால் பங்களாதேஷைப் போன்று எம்.பிகள் கொல்லப்படும் நிலை ஏற்பட்டிருக்கும்.

பிரதமர் பதவியை ஏற்று என்னுடன் இணைந்து பணியாற்ற வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு நான் அழைப்பு விடுத்தேன். ஆனால் டளஸை போட்டிக்கு நிறுத்தி விட்டு அந்த வாய்ப்பையும் நழுவ விட்டார்.

என்னை ரணில் ராஜபக்ஷ என்று விமர்சித்தவர்கள் இன்று விலகிச் சென்றுள்ளனர்.

நாடு தற்போது இயல்பு நிலைக்குத் திரும்புவதுடன் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைவடைந்துள்ளன. மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட உலக நாடுகளினதும் அமைப்புகளினதும் உதவி, ஒத்துழைப்புக்கள் எமக்கு கிடைத்ததால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்துள்ளது.

கடந்த ஏப்ரலில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம்.அரச ஊழியர்களின் சம்பளத்தைப் போன்றே ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது

பங்களாதேஷில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டும் தேர்தல் நடத்த முடியாத நிலை அங்கு தற்போது உருவாகியுள்ளது. எம்.பிகள் கொல்லப்பட்டுள்ளனர். சபாநாயகரை காணவில்லை. பிரதம நீதியரசர் துரத்தப்பட்டுள்ளார்.

எனினும் எமது நாட்டில் நாம் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தேர்தல் நடத்த முடிந்துள்ளது.. ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியாலேயே அதனை செய்ய முடிந்தது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள் ஆணையைப் பெற்று நாம் ஆரம்பித்த திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம். மக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பொருளாதாரம் எனும் வீடு உடைந்த நிலையில் இருந்த போது அதனை கட்டியெழுப்ப பலமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.எனது 5 அம்சத் திட்டத்தை 5 வருட காலத்தில் நடைமுறைப்படுத்தி நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எதிர்பார்த்து ள்ளேன்.

மாதம்பேயில் முதலீட்டு வலயம் உருவாக்கப்படும்.. சிலாபம் துறைமுகத்தை பிரதான மீன்பிடித்துறைமுகமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மீனவர்களின் உற்பத்திகளை கட்டுநாயக்கவிற்கு இலகுவாக கொண்டு செல்லும் வகையில் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபத்துடன் இணைக்க தீர்மானித்துள்ளோம்.

கற்பிட்டியில் துறைமுகம் மற்றும் சுற்றுலா வலயம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.. இரணவிலயிலும் சுற்றுலா வலயம் ஏற்படுத்தப்படும். சகல தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

எமது அணியினர் பிரிந்து சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியினால் ஒருபோதும் இம்முறை தேர்தலில் வெற்றி பெற முடியாது. சஜித் பிரேமதாசவுக்கு வழங்கும் வாக்குகள் அநுர குமார திசாநாயக்கவிற்கு வழங்கும் வாக்குகளைப் போன்றதாகும். எனவே ஐ.தேக. ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து கேஸ் சிலிண்டரின் வெற்றிக்காக செயற்பட வேண்டும்" அது தொடர்பில் அனைவருக்கும் அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மனைவியை தாக்கி... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபரான கணவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து ஊவா மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ்ஸினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# மாணவப் பருவத்தினர் மத்தியில் பாலியல் ஒழுக்கக்கேட்டை தவிர்க்கும் கல்விமுறை அவசியம்



இன்றைய நவீன உலகில் பல்வேறுபட்ட விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் மனிதரிடையே பல்வேறுபட்ட முரணான சிந்தனைகள் பாலியல் சார்ந்து நிலவுவதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை.

பாலியல் தொடர்பான சிந்தனைகள் பல சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்களின் எண்ணக்கரு மற்றும் நூல்கள் பாலியல் தொடர்பான அறிவையும், பாலியல் தொடர்பான வெவ்வேறு கோணங்களிலான விளக்கத்தையும் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

அந்த வகையில் பிரான்ஸ் தத்துவ மேதை, எழுத்தாளர் ஆகிய மிஷேல் பூக்கோவின் பாலியல் தொடர்பான கண்ணோட்டத்தில் பாலியல் பற்றிய அவரது கருத்துக்கள் பாரம்பரிய கதைகளுக்கும் பாலியல் தொடர்பான பாரம்பரிய மரபுகளுக்கும் சவால் விடுகின்றன. பூக்கோ பாலியல் குறித்து 'வைத்தியமும் நாகரீகமும்', 'பாலியல் வரலாற்றின் ஈடுபாடு', ' *The history of sexuality*' என பல நூல்கள் எழுதியுள்ளார். அதிலும் முக்கியமாக இந்நூல், பாலியல் தொடர்பாக பல முக்கிய கருத்துக்களை முன்வைக்கின்றது.

இப்புத்தகத்தில் பாலியல் சம்பந்தமாக அடக்குமுறை, எவ்வாறு சக்தி/அறிவுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதையும், உயிர் சக்தி இதில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதையும் பற்றி அவர் ஆழமாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவரது வாதம் மூலம் பாலியல் சார்ந்த மாற்றுக் கருத்துகளை உடையவர்களுக்கான தளர்வு வழங்கப்படும் இடத்து ஐரோப்பிய நாடுகளில் ஒருபால் திருமணத்திற்கான சட்ட அமுலாக்கமும் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த சட்டம் இன்றும் மனிதர்களிடையே சர்ச்சையாக பேசப்படும் பேசுபொருளாக திகழ்கிறது.

மூன்றாம் பாலினத்தவர்கள் பலரை அவர்களது வீட்டார் கூட ஏற்றுக் கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் இருப்பதால் அவர்கள் வீட்டை விட்டு வெளியேறுகின்ற சூழலும் காணப்படுகின்றது.

கல்வியில் கூட இவர்களுக்கு ஆதரவாக எவ்வித ஏற்பாடுகளும் இல்லை. கல்வியை தொடர பாடசாலைக்கு சென்றால் உலகின் பெரும்பாலான பாடசாலைகள் இன்றும் மூன்றாம் பாலினத்தவர்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் தயாராக இல்லை. இதனால் மாணவர்கள் தனிமைப்பட்டு புறக்கணிக்கப்பட்டு கேலி செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவர்கள் ஆசிரியர்களாலும் சக பாடிகளாலும் உடல் ரீதியாக, மனரீதியான துன்புறுத்தப்படும் சம்பவங்கள் நடக்கின்றன. மேலும் பாடசாலைகள் மூன்றாம் பாலினத்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறுகின்றன.

இதனடிப்படையில் பாலியல் தொடர்பாக நன்மை, தீமை மற்றும் முரண்பாடுகள் தொடர்ந்து காணப்படுவதால் இதைப்பற்றிய விழிப்புணர்வும் கல்வி அறிவும் முக்கிய தேவையாகும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது போன்று பாலியல் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் பாடசாலைகளில் புகட்டாமல் வயது வந்த பிற்பாடு புரிய வைத்தல் மிகவும் கடினமாகும். ஏனெனில் சிலர் தவறான புரிதல்களையும் முன்னுதாரணங்களையும் கொண்டு வளர்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

ஆகவே பாடசாலையில் பாலியல் கல்வி எவ்விதத்தில் முக்கிய பங்குவகிக்கின்றது என்பது பற்றி ஆராய்கையில், மாணவர்களுக்கிடையிலான உடல் மற்றும் உளவியல் மாற்றம் என்பதைக் கற்றுக் கொடுத்தல், ஆண் மாணவர்கள் பக்குவப்படுதல், பெண் மாணவிகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தல், ஆண்_ பெண் சமத்துவம் பற்றி புரிய வைத்தல், மாணவர்களின் பார்வை, அணுகுமுறை எவ்வாறு நல்ல விதத்தில் அமைய வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தல் போன்றவை குறிப்பிடத்தக்கன.

எமது நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்கொடுமைகளை நாளுக்கு நாள் செய்திகளினூடாகவும் இணையத் தளங்களின் ஊடாகவும் நாம் செவிமடுக்க கூடியதாக இருக்கின்றது. சரியான கல்வி புகட்டப்படாவிட்டால் இக்கொடுமைகளை நிறுத்த முடியாது.

பாலியல் கல்வியானது அவசியமானதென்று கல்விமான்கள் குறிப்பிடுகின்றனர். இன்றைய சூழலில் இது வெறும் விவாதம் அல்ல, மாறாக ஒரு அவசியமான தேவையாகும். சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு இந்த விடயம் புகட்டப்படுமானால், அவர்கள் தங்களது வாழ்நாளில் சரியான முடிவுகளை எடுக்கவும், பாதுகாப்பாக இருக்கவும் வழிவகுக்கும். .

**தாஸிம் றிஜினா**
இரண்டாம் வருட சிறப்புக்கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

# நல்லூர் கந்தன் உற்சவம் நிறைவடையும்வரை அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திய நாமல்!

## இந்து மக்களின் கலாசாரத்துக்கு மதிப்பளிப்பதாகக் கூறுகிறார்



இந்து மக்களின் கலாசாரத்திற்கு மதிப்பளித்து நல்லூர்க் கந்தன் திருவிழா முடியும் வரை யாழ்ப்பாணத்தில் அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்தியதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நல்லூர் திருவிழா முடியும்வரை யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்தமை யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் ஆலயத்தின் கலாசார முக்கியத்துவத்தை மதித்து எடுக்கப்பட்ட முடிவாகும். இத்தகைய புனிதமான காலத்தில் இந்த மரபுகளை மதிப்பதும் பாதுகாப்பதும் முக்கியம் என்றும் அவர் கூறினார்.

தாம் முன்னெடுக்கவுள்ள பொருளாதாரத் திட்டம் குறித்து தினகரனுக்கு விபரித்த அவர், "நாம் செயல்படுத்தும் பொருளாதாரக் கொள்கையில் தொழில்முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கப்படும் அதே சலுகைகள் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்படும். நாட்டின் இளம் தொழில்முனைவோர் மற்றும் வர்த்தகர்களை வலுப்படுத்த தேவையான அரச கொள்கை மற்றும் நிதிக் கொள்கைகள் உள்ளிட்ட தேசிய கொள்கையொன்று அமுல்படுத்தப்படும்" என்று தெரிவித்தார்.

கேள்வி: நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இளம் அரசியல் வேட்பாளர் என்ற ரீதியில் இளைஞர்களின் தொழில் பிரச்சினைக்கு முன்வைக்கும் தீர்வு என்ன?

பதில்: மேலே குறிப்பிட்டபடி நாட்டில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டால், வேலைவாய்ப்புகள் உருவாகும். அடுத்த 10 ஆண்டுகளில் 20 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க தேவையான கொள்கைகளை தெளிவாக செயல்படுத்துவோம்.

கேள்வி: வடக்கு, கிழக்கு இளைஞர்கள் குறித்து நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். இதேபோன்று அப்பிரதேசம் குறித்த பிரச்சினையில் உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: தேர்தல் காலத்தில் வடக்கிலுள்ள தாய், தந்தை மற்றும் சகோதர இளைஞர்களை ஏமாற்றுவதில் அர்த்தமில்லை. நம்மால் முடிந்ததைச் சொல்ல வேண்டும். முடியாதது என்று சொல்லப்பட்டதை சாத்தியமற்றது என்றே சொல்ல வேண்டும். தமிழ் பேசுவோரின் கலாசாரத்தை பாதுகாத்து, மொழியை காப்போம். ஆனால் நாங்கள் வடக்கு மற்றும் கிழக்கை இணைக்கவில்லை. முடியாதது என்று சொல்வதை முடியாது என்றே சொல்கிறோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்தவர். தாய்நாட்டில் நடைமுறையில் இருந்த எல்லைக் கிராமங்கள் என்ற சொல்லை நீக்கியவர் அவர்.

கேள்வி: ஆனால் 2015 ஆம் ஆண்டில் உங்கள் கட்சி தோல்வி கண்டதே?

பதில்: ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்ட வளமான நாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்கவில்லை. மிக மோசமான பொருளாதார நிலையில் அவர் நாட்டைப் பொறுப்பேற்றார். கொவிட் 19 தொற்றினால் நாடு பொருளாதார ரீதியாக மேலும் வீழ்ச்சியடைந்தது. தடுப்பூசிகளைக் கொண்டுவரச் சொன்னபோது, நாங்கள் அவற்றைக் கொண்டு வந்தோம். நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்று உயிரைக் காப்பாற்றினார் கோட்டாபய. நாங்கள் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை பற்றி பேசினோம். கோட்டாபய ராஜபக்ஷவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று முடிவு செய்தனர். நம் நாட்டில் இளைஞர்கள் ஒன்றுகூடி பத்தாயிரம் படுக்கைகளை கட்டிய நாள் உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த நாட்டின் இளம் தலைமுறையினர் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு உதவினார்கள்.

கேள்வி: உங்கள் தந்தை மகிந்த ராஜபக்ச விட்டுச் சென்ற இடத்திலிருந்து இந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என குறிப்பிடுகின்றீர்கள். அதற்கான நடைமுறை என்ன?

பதில்: பொருளாதாரம் ஸ்திரத்தன்மை குறுகிய காலத்தில் எட்டப்பட வேண்டும். வரம்பற்ற வரிகளுக்கு பதிலாக தளர்வான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும். இன்று பல வகையான வரிகள் உள்ளன. வரிகள் இல்லாத நாடுகளும் உள்ளன. உலகில் வளரும் நாடுகள் குறைந்த வரிகளை வசூலிக்கும் நாடுகளாகவும், மக்கள் எளிதில் தொழில் செய்து வாழக்கூடிய நாடுகளாகவும் உள்ளன. அந்த நிலையை நாம் விரைவில் அடைய வேண்டும் என்பதே எனது நோக்கம்.

கேள்வி: இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள் ?

பதில்: எமது தரப்பிலிருந்து ராஜபக்ஷ அல்லாத ஒருவரை வேட்பாளராக நிறுத்துவது குறித்து நாம் கவனம் செலுத்தினோம். அதற்காக எங்களால் முடிந்தவரை முயற்சி செய்தோம். ஜனாதிபதியுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம். வேறு வேட்பாளரை அழைத்து வரவும் முயற்சி செய்தோம். வெளிப்படையாக அந்த நபருக்கு முன்வருவதில் தனிப்பட்ட பிரச்சனை இருந்தது.

பிளவுபட்ட அந்தச் சூழ்நிலையில் அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய மற்ற நபர் யார் என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. அதற்கு நான்தான் பொருத்தமானவன் என்று எங்கள் கட்சி அப்போது முடிவு செய்தது. அதேபோன்று இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, ஒரு தீவிரமான மாற்றம் நேர்மையாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

**(தினகரன் விசேட நிருபர்)**

# அரச ஊழியர்கள் பொறுப்புடன் வாக்களிக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில், அரச ஊழியர்கள் தமது வாக்குகளைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். போலி வாக்குறுதிகளைக்கண்டு ஏமாறக்கூடாது.

நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்வைத்துள்ளார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து (02) அன்று டயகம பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரனின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

"இரு வருடங்களுக்கு முன்னர் நாடு எப்படி இருந்தது? வரிசை யுகம் தோற்றம் பெற்றது. நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பெரும் துயரங்களை எதிர்கொண்டனர்.சிலர் பட்டினியில்கூட வாடினார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் வரிசை யுகத்துக்கு முடிவுகட்டி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவந்துள்ளார்.



மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார். அதற்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. வீட்டுப் பிரச்சினைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. கல்வி சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால்தான் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒரு வருட காலப் பகுதிக்குள் அவர் பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளார். எனவே, அவருக்கு இன்னும் ஐந்தாண்டுகள் வழங்கினால் நாடும், மக்களும் நிச்சயம் முன்னேறுவார்கள்.

ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கிலேயே சிலர் போலியான, நடைமுறைக்கு சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கிவருகின்றனர்.இதற்கு மக்கள் ஏமாறக்கூடாது. கல்வி வளர்ச்சியில்தான் எமது சமூகத்தின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

எனவே, அரச ஊழியர்கள் தமது வாக்கை சரிவர பயன்படுத்த வேண்டும். அரச ஊழியர்களின் கோரிக்கைகளையும் ஜனாதிபதி நிறைவேற்றி வருகின்றார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. எனவே, அரச ஊழியர்கள் பொறுப்புடன் வாக்களிக்க வேண்டும். போலி வாக்குறுதிகளை நம்பி வாக்களித்தால், நாடு இருக்காது என்றார்.

# இலங்கை தேசத்திற்காக பரிந்து பேசும் ஜெபம்

## முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தில் 17ம் திகதி



இலங்கை தேசத்திற்காக முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தில் எதிர்வரும் 17ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 12.30 மணிவரை தேசத்திற்கும் தேசத் தலைவர்களுக்குமாக இறைவனிடம் பரிந்து பேசும் ஜெபம் நடைபெறும்.

மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமை போதகரும் பிரபல சுவிஷேசகருமான வண.ஜெயம் சாரங்கபாணி இதற்குத் தலைமை வகிப்பார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் உண்மையான வெளிப்பாடு கிடைப்பதற்கு மக்கள் மத்தியில் கலவரமின்றி சமாதானமாக வழிநடத்தப்பட தேவசித்தம் நிறைவேற இலங்கையில் அனைத்து திருச்சபைகளாக ஒன்றுகூடி பிரார்த்திப்பதற்கு தேசிய போதகர் ஐக்கிய குழு இன, மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இச்சிறப்பு பிரார்த்தனையில் தேசிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள், விசேட பிரமுகர்கள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாட்டின் செழிப்புக்காகவும் மக்களின் ஐக்கியத்திற்காகவும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்.

தொடர்புகளுக்கு தேசிய போதகர் ஐக்கிய குழு, தொலைபேசி 0112528355 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என அதன் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சங்கத்தின் 89ம் வருடாந்த மாபெரும் மாநாடு 2024.09.10ம் திகதி மு.ப. 9.00 இற்கு மஹரகம தேசிய இளைஞர் அரங்கில் நடைபெறும்.

சகோதர பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வருகையை கௌரவமாக எதிர்பார்க்கிறோம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.09.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5583 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,581,992.00
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 1 7 1 7 0 3

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 158 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 1 7 0 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3825 — சீட்டிழுப்பு திகதி 2024.09.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,738,827.60
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 09 23 43 80 — விசேட எழுத்து T — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46481

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1931 — 2024.09.01 — 99229 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 444,648,986.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 05 — வெற்றி இலக்கங்கள் 16 27 33 36
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.09.01 — சீட்டிழுப்பு இலக்கம் 409
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 3 3 4 1 0 5 — L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,988,898.88

ராசி சுப பலன் — திகதி 2024.09.01 — சீட்டிழுப்பு இலக்கம் 892 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,128,312.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 05 22 35 41 — தனயோக இலக்கம் 45618 — நாளுக்கான விதி எண் 30

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1613 — 2024.09.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,760,591.44
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 10 54 65 73 — விசேட எழுத்து R — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16378

சீனன்கோட்டை, பிட்டவளை...

# மிர்அதுஷ் சாதுலிய்யா ஸாவியாவில் 92ஆவது வருட புஹாரி பாராயணம்

**பேருவளை விசேட நிருபர்**

வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை சீனன்கோட்டை பிட்டவளை மிர்அதுஷ் சாதுலிய்யா ஸாவியாவில் 92ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஸுபஹ் தொழுகையின் பின்னர் கலீபதுஷ் ஷாதுலி அஷ்செய்க் இஹ்ஸானுதீன் அபுல் ஹசன் (நளீமி) இன் வழிகாட்டலின் கீழ் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும்.

7ஆம் திகதி அதிகாலை வலீபா யாகூதிய்யா மற்றும் ஹழரா (திக்ர்) மஜ்லிஸுடன் ஆரம்பிக்கப்படும் இம்மஜ்லிஸ் தொடர்ந்து 29 நாட்கள் இடம்பெற்று ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் தமாம் செய்யப்படும்.

ஒக்டோபர் 5ஆம் திகதி அஸர் தொழுகையின் பின்னர் சுப்ஹான மௌலூத் தமாம் மஜ்லிஸும், மஃரிப் தொழுகையின் பின்னர் வழீபா யாகூதிய்யாவும் இஷாத் தொழுகையின் பின்னர் ஹழரா திக்ர் மஜ்லிஸும் அதனைத் தொடர்ந்து விஷேட மார்க்கச் சொற்பொழிவும் இடம் பெறும். 29 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் இம்மஜ்லிஸில் வெளிநாட்டு, உள்நாட்டு மார்க்க அறிஞர்களினால் விசேட மார்க்கச் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச். எம் முக்தார் ஹாஜியார் தலைமையிலான பள்ளிச் சங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் தெரிவித்தார்.



சீனன் கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள், மிர்அதுஷ் சாதுலிய்யா ஸாவியா உறுப்பினர்கள் உலமாக்கள், இஹ்வான்கள், நிர்வாகிகள் ஆரம்ப மஜ்லிஸ் நிகழ்வில் பங்குபற்றுவர்.

# கிழக்கின் குரல்



# அனர்த்த முன்னெச்சரிக்கைகள் துரிதமாக மக்களை சென்றடைய விசேட நடவடிக்கை

## Google படிவம் ஊடாக தகவல்கள் திரட்டல்

(ஒலுவில் விசேட நிருபர்)

அனர்த்த முன்னெச்சரிக்கைகள் துரிதமாக பொதுமக்களை சென்றடைவதற்கு Google படிவம் ஊடாக தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

நாடளாவியரீதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் அனர்த்த அபாய குறைப்பு செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் ஓர் அங்கமாக முன்னெச்சரிக்கைப் பொறிமுறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். காலநிலை மாற்றத்தினால் உலகளாவியரீதியில் ஏற்பட்டு வருகின்ற தாக்கம் மற்றும் முன்னெச்சரிக்கைப் பொறிமுறையிலுள்ள சவால்களை முறியடித்து அனர்த்த பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.

அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவம் தொடர்பான செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்காக 30 ஆயிரம் மிக முக்கியமான அரச உத்தியோகத்தர்கள், சமூகமட்ட அமைப்புகளின் நிர்வாகிகள், பொலிஸார், முப்படையினர் மற்றும் துறைசார் அமைப்புகளின் அபாயங்களை Google படிவம் ஊடாக தகவல்களை திரட்டுவதன் மூலமாக அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல்கள் உரியவர்களுக்கு உடனுக்குடன் வழங்கப்படும்.

இதனூடாக பொதுமக்கள் அனர்த்தங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அத்துடன்,நிலையான அபிவிருத்தியுடன் அனர்த்த குறைப்பு செயற்றிட்டத்தை முன்கொண்டு செல்ல கிராமங்கள் தோறும் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களை வழிப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் துரிதமாக பெற்று பொதுமக்களை பாதுகாக்க Google படிவத்தின் ஊடாக தகவல்களை பதிவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான, மேலதிக விபரங்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸிடம் 0773957883 அல்லது 0632222218 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

# அக்கரைப்பற்றில் ஸ்ரீ இராமகிருஷ்ணா அரங்கு கோலாகலமாக திறந்து வைப்பு



(காரைதீவு குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா தேசிய கல்லூரியில் 1983 க.பொ.த சாதாரண தரம் பயின்ற மாணவர்களின் அமைப்பான, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கத்தினரால் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா தேசிய கல்லூரியில் 'ஸ்ரீ இராமகிருஷ்ணா அரங்கு' நேற்று (02) காலை ஒன்று கூடலின்போது திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க.ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதன் தலைவர் உறுப்பினர்கள் கலந்துகொண்டு திறந்து வைத்தனர்.

அமைப்பின் தலைவர் சுந்தரம் சிவபாலன்,செயலாளர் சிவலிங்கம் கனகரெட்ணம், பொருளாளர் சின்னத்தம்பி மணிமாறன், மற்றும் உறுப்பினர்களுக்கு பாடசாலை சார்பில் நன்றி கூறும் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் 107ஆவது வருடாந்த ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோணமலை பிராந்திய சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்துக்கு தோமஸ் அமரசூரிய விருது கிடைத்துள்ளது. சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துசார உப்புல்தெனிய, திருகோணமலை சிறைச்சாலை புனர்வாழ்வு அதிகாரிகளான டபிள்யூ.ஏ.பி. சாந்த மற்றும் எப்.முபாரக் ஆகியோரிடம் விருதினை வழங்குவதையும், அருகில் சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கத்தில் தலைவர் ஒஸ்றின் பெர்னாண்டோவையும் படத்தில் காணலாம். (படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் 04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள உற்சவத்தில் 03 ஆம் திகதி மாலை சாந்திக் கருமங்கள் நிறைவுற்றதும் 04 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு திருக்கொடியேற்றமும், தொடர்ந்து சந்தியாவாகனமும் நடைபெற்று நிறைவுறும்.

பிற்பகல் 4 மணி தொடக்கம் யாகபூசை, தம்பபூசை, திக்குப்பலி, வசந்தமண்டப பூசை, சுவாமி உள் வீதி உலா என்பன நடைபெறும். இதனைத் தொடர்ந்து 10 ஆம் திகதி வரை வழமையான காலை, மாலை பூசையுடன் யாகபூசை, தம்பபூசை, திக்குப்பலி, வசந்த மண்டப பூசை, சுவாமி உள் வீதி உலா நடைபெற்று நிறைவுறும்.

அதனைத் தொடர்ந்து 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஸ்நபனா அபிஷேகம், தொடர்ந்து பூசை, யாகபூசை, தம்பபூசை, திக்குப்பலி, வசந்த மண்டப பூசை, சுவாமி உள் வீதி, வெளி வீதி உலா என்பன 21 ஆம் திகதி வரை தினமும் நடைபெறும்.

22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேரோட்டப் பெருவிழா நடைபெறும். இரவு 8 மணிக்கு முனைக்காடு வீரபத்திர சுவாமி ஆலய முன்றலில் திருவேட்டை திருவிழா நடைபெற்று தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். 23ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் திருப்பொற்சுண்ணம், தீர்த்தம், யாக கும்பாபிஷேகம், பூசை முதலியன, மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம், பொன்னூஞ்சல், கொடியிறக்கம் சந்தி விசர்ச்சனம், சண்டேஸ்வர உற்சவம், ஆசிர்வாதம், ஆசாரியோற்சவம் முதலியன நடைபெறும். 24 ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு ஏர் பூட்டு விழா நடைபெறும்.

# ஓந்தாச்சிமடத்தில் பாரிய விபத்து

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் ஓந்தாச்சிமடத்தில் நேற்றுமுன்தினம் மாலை இ.போ. சபைக்குச் சொந்தமான பஸ், முச்சக்கரவண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் குறித்த விபத்தில் முச்சக்கர வண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பஸ்ஸின் முன் பகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து இளைஞர்களை தூண்டி விடுவதை நிறுத்த வேண்டும்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து இளைஞர்களை தூண்டி விடுவதை அநுர குமார நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

மூதூரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அண்மையில் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் அநுரகுமார சஜித் பிரேமதாச தொடர்பாக சிறு பிள்ளைத்தனமான விமர்சனங்களை முன்வைத்தார்.

திகன, மினுவாங்கொடை கலவரங்களின் போது சஜித் பிரேமதாச என்ன செய்தார் என கேட்டிருந்தார். எனினும் அவர் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போது சஜித் இந்நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ, எதிர்கட்சி தலைவரோ அல்லது உங்களை போன்று ஒரு கட்சியின் தலைவரோ அல்ல. அவர் வீடமைப்பு அமைச்சர் மட்டுமே.



அந்த கலவரங்களில் பாதிக்கப்பட்ட மினுவாங்கொடை, குருநாகல் பிரதேசங்களைச் சேர்ந்த 21 பள்ளிவாசல்களின் புனர்நிர்மாணத்துக்கு சஜித் பிரேமதாச அவர்களே நிதியுதவி செய்திருந்தார். அந்த நிகழ்வுகளில் சஜித் பிரேமதாசவுடன் நானும் முஜிபுர் ரஹ்மானும் கலந்துகொண்டிருந்தோம். அதன்பின்னர் பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இதுதொடர்பாக குரல் எழுப்பியிருந்தோம்.

தெற்காசியாவின் செல்வந்த கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுர குமார கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ரூபா வழங்கி இருப்பாரா? ஜனாஸா எரிப்பின் போது முழு முஸ்லிம் சமூகமும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கி போராடியது. எம்முடன் தமிழ், சிங்கள சகோதரர்கள் இணைந்து போராடினார்கள். அப்போது எங்கே சென்றார் இந்த அநுர குமார? ஆனால் முஸ்லிம்களோடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒன்றாக இருந்தவர் சஜித் பிரேமதாச.

யாரையும் விமர்சனம் செய்யலாம். ஆனால் அதில் சிறிதளவாவது உண்மை இருக்க வேண்டும். விமர்சனம் செய்ய முன்னர் உங்களையும் சுய விமர்சனம் செய்துவிட்டு விமர்சிக்க வேண்டும். ஆகவே முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து பொய்களை கூறி முஸ்லிம் இளைஞர்களை தூண்டி விடுவதை அநுர குமார நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# மாவடிவேம்பு வீதி விபத்து; வயோதிபப் பெண் மரணம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதான வீதியில் கடந்த 30 ஆம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டி பகுதியை சேர்ந்த 66 வயதுடைய கனகசபை துளசிமணி எனும் வயோதிபப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சித்தாண்டி, சிறுவர் இல்லத்தில் சமையல் வேலை செய்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாவடிவேம்பு, மணிவாசகர் வீதியிலிருக்கும் தனது பேத்தியின் வீட்டுக்கு சென்று, தனது வீட்டுக்கு செல்ல பிரதான வீதியை கடக்கையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. செங்கலடியிலிருந்து வாழைச்சேனை நோக்கி பயணித்த சிறிய ரக லொறி மோதியதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற மரண விசாரணை அதிகாரி எம் எஸ்.எம்.நஸீர், விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கிழக்கு மாகாணத்தில் 4,49,686 பேர் வாக்களிக்கத் தகுதி

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து 22 இலட்சத்து 20311 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதற்கமைய கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49686 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 5 இலட்சத்து 55432 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 3 இலட்சத்து 15925 பேரும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

# யஸ்டோ அமைப்பின் முப்பெரும் நிகழ்வு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



காத்தான்குடி இளைஞர் வலுவூட்டலுக்கும் சமூக அபிவிருத்திக்குமான அமைப்பான YESDO (யஸ்டோ) அமைப்பின் முப்பெரும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காத்தானாகுடி அல் மனார் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வசதி குறைந்த பார்வை குறைபாடுடைய பாடசாலை மற்றும் மத்ரஸா மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டதுடன் அமைப்பின் கல்விப் பிரிவின் கீழ் கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இதன் போது நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.ஏ.நௌஸாத் அலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் காத்தான்குடி தள வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் அலிமா ரஹ்மான் விஷேட அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் உலமாக்கள் முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், யஸ்டோ அமைப்பின் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சுமார் நாற்பதுக்கும் அதிகமான மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# விவசாயிகளுக்கு உரம் வழங்கி அமோக விளைச்சலுக்கு வழிவகுத்தவர் ஜனாதிபதி

## பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தெரிவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



ஆலையடிவேம்பு விவசாயிகளுக்கு உரம் வழங்கி அமோக விளைச்சலைக்கு வழிவகுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் மக்களோடு 'இயலும் ஸ்ரீலங்கா' கலந்துரையாடல் அண்மையில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதாரத்தில் ஸ்திரமற்றிருந்த போதிலும் விவசாயிகளுக்கு உரம் வழங்கி அமோக விளைச்சலை தர வழிவகுத்த ஜனாதிபதிக்கு இப்பிராந்திய மக்கள் அணிதிரண்டு வாக்களிக்க கடமைப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் போதியளவு உரங்களை வழங்கிய போது, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமான அறுவடையை வழங்கி இப்பிராந்திய விவசாயிகளின் வாழ்வில் வெளிச்சத்தை ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார். அன்று, கேஸ் சிலிண்டருக்கும் எரிபொருள் பெறுவதற்கும் மற்றும் அன்றாட உணவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் மக்கள் அடைந்த துன்பங்களை துயரங்களை ஒரு கணம் நினைத்து பார்த்தால் உங்கள் மனச்சாட்சி உங்களுக்கு ஆதாரமாக இருக்கும். நாம் அனைவரும் ஒருமித்த குரலில் நமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு வாக்களித்து நமது நன்றிக்கடனை தீர்க்க வேண்டும்.

எனவே, எமது எதிர்கால சந்ததி உட்பட நாம் எதிர்காலத்தில் நிம்மதியாக பொருளாதாரத்திலும் விவசாயத்திலும் அபிவிருத்தியிலும் நல்ல பயனை அடைய வேண்டும். என்றால் பொய் வாக்குறுதிகளை வழங்கும் ஏமாற்று வேட்பாளர்களை புறந்தள்ளி விட்டு நமது விடியலுக்கு உதவி செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவோம் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல்

# வாக்காளர் அட்டைகள் செப்டெம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் விநியோகம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள், செப்டெம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


குறிப்பாக செப்டெம்பர் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணி நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் 14ஆம் திகதி வரை உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாத வாக்காளர்கள், 2024 தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட முகவரிக்குரிய அஞ்சல் அலுவலகத்துக்கு சென்று தனது ஆள் அடையாளத்தை வெளிப்படுத்திய பின்னர் பெற்றுக்கொள்ள முடியுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இதேவேளை, அஞ்சல் வாக்காளர்களான அரச சேவையாளர்களின் வாக்குகளைப்பெற்றுக் கொள்ளும் தீவிர முயற்சியில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# நகர்வலம்



## வான் – ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து; ஒருவர் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பகுதியில் புஹுல்திவ சந்திக்கு அருகில் வான் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய வட்டரெக்னவ பகுதியைச் சேர்ந்த ஏ.ஆரியரத்ன என்ற (65) வயதுடைய முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த அரநாயக்க பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 56 வயதுடைய இருவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரத்தில் இருந்து கஹட்டகஸ்திகிலிய நோக்கி பயணித்த வான் வேக கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி வீதியை விட்டு விலகிச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

### ஜனாதிபதியாக

## மீண்டும் ரணில் தெரிவாகாவிட்டால் நாடு பெரும் நெருக்கடிக்குள்ளாகும்

### ஹம்பாந்தோட்டையில் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் எமது நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யாவிட்டால் நாம் அனைவரும் மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்ப வேண்டிவரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து உரையாற்றிய மனுஷ நாணயக்கார, மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயங்களிலிருந்து நாடு பூராவும் நடைபெறுகின்ற கூட்டங்களுக்கு மக்களை பஸ்களினூடாகவே அழைத்து வருகிறார்கள். ஒருநாளைக்கு பஸ்களுக்கு மாத்திரம் பாரியதொரு தொகை பணத்தினை செலவு செய்து வருகிறார்கள். இவர்களுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து கிடைக்கிறது? இந்த நாட்டை நெருக்கடி நிலைக்கு உள்ளாக்க முற்படுபவர்களே அவர்களுக்கு இவ்வாறு செலவு செய்கிறார்கள். இவர்கள் எமது நாடு முன்னேறுவதை விரும்புவது இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சி எமது நாட்டின் வரலாற்றில் பாரிய சேவைகளை செய்துள்ளது. அன்று நெருக்கடிக்குள்ளாகி இருந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று நாட்டையும் மக்களையும் காப்பாற்றினார். தற்பொழுது இந்த நெருக்கடி நிலைமைக்கு இடைவேளை வழங்கப்பட்டுள்ளது. இந்தகாலப் பகுதியில் இதிலிருந்து முற்றாக மீள்வதா அல்லது நாட்டை மீண்டும் நெருக்கடி நிலைமைக்கு இட்டுச்செல்வதா என்பதனை நாம் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

### பேருவளை நகர சபை பகுதியில்

## ஹஸன் பாஸி தலைமையில் ஐ.ம.ச வீடு வீடாக பிரசாரம்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து பேருவளை நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட ஹெட்டியாகந்த பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பேருவளை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி தலைமையிலான குழுவினர் பிரதேச பகுதிகளில் வீடு வீடாகச்சென்று சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஹஸன் பாஸி, இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் நாட்டின் தலைவரை தெரிவு செய்யும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இத்தேர்தலில் பல கட்சிகளைச் சேர்ந்தோர் வேட்பாளராக களமிறங்கியுள்ளனர்.

இருந்தபோதிலும் நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் ஆட்சிமாற்றமொன்றை எதிர்பார்த்து இம்முறை சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இன்றைய பிரசாரத்தின்போதும் மக்கள் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க விரும்புவதை அவதானிக்க முடிந்ததாகவும் ஹஸன் பாஸி மேலும் தெரிவித்தார்.

## சட்டத்தரணி அபுல்கலாமின் நூல் கொழும்பில் வெளியீடு




**(அஷ்ரப் ஏ சமத்)**

சிரேஷ்ட சட்டத்தரணி எம். எம். அபுல்கலாம் 'நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு வைபவம் (31) கொழும்பு , வை.எம்.எம்.ஏ கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் எம்.எஸ்.எம் ஜலால்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச். எம்.டி நவாஸ், கௌரவ அதிதியாக எம். ஸுஹைர் (ஜனாதிபதி சட்டத்தரணி), சிறப்பு பேச்சாளராக பாயிஸ் முஸ்தபா, (ஜனாதிபதி சட்டத்தரணி) கலந்து சிறப்பித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பி.ஏ ஹுஸைன் மியா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி நியாஸ் சம்சுதீன் (ஓய்வுபெற்ற மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம்) ஆகியோர் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

## ரூ. 11கோடி பெறுமதியான 03 K 610g கொகேய்னுடன் மலேஷிய பெண் கைது

### 06 சொக்லேட் டின்களுக்குள்ளிருந்து கண்டுபிடிப்பு

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 06 சொக்லேட் டின்களுக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 11கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் மலேஷிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெல்லன்வில ஹோட்டலில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மலேஷிய பெண்ணிடமிருந்து 03 கிலோ 610 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருள், கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக் காலத்தில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான கொக்கேய்ன் தொகை இதுவென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், பெல்லன்வில ஹோட்டலை சுற்றிவளைத்து சோதனைசெய்த போது மலேஷிய பெண் கைது செய்யப்பட்டதாகவும், இந்த சோதனையின் போது, கொக்கெய்ன்

போதைப்பொருளை சந் தே க நபர் வைத்திருந்த கறு ப்பு நிறத்திலான பயணப் பையில் வைத்திருந்த 06 சொக்லேட் டாப்பாக்களுக்குள் சிறிய சொக்லேட் உருண்டைகள் வடிவில் 172 கொக்கெய்ன் உருண்டைகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இப்பெண், மலேஷியாவிலிருந்து டுபாய் சென்றுள்ளார். அங்கு கறுப்பின நபர் ஒருவர் வழங்கிய கொக்கைன் கையிருப்புடன் 29 ஆம் திகதி இலங்கை வந்து நான்கு நாட்கள் பெல்லன்விலையில் தங்கி கொக்கையினை வழங்க திட்டமிட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.



கைது செய்யப்பட்ட பெண்தடுப்புக் காவல் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகளுக்காக நுகேகொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ரன்மல் கொடிதுவக்குவின் அறிவுறுத்தலின் பேரில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரசாந்த தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## தொடர் பயிலரங்குகள் அக்டோபரில் ஆரம்பம்

தலைநகரில் இளம் கலை, இலக்கிய ஆர்வலர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு கடந்த 44 ஆண்டுகளாக கலை இலக்கியப் பணியாற்றிவரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் பயிலரங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடிப்பு பயிலரங்கம் மற்றும் மேடை, தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்க விரும்பும் ஆர்வலர்களை தேர்வு செய்யும் நிகழ்வை நடத்த உள்ளது.

இந்த ஒரு நாள் கருத்தரங்கில் பங்கு கொண்டு தமது நடிப்பு திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் நடிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெறவும் விரும்புவோர் உடன் இல.075 4880172 என்ற வட்சப் இலக்கத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கற்பிட்டி, கப்பலடி பகுதி களப்பிலிருந்து ஒருதொகை பீடி இலைகள் மீட்பு

### கடற்படையினர் அதிரடி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் எரம்புகொடல்ல மற்றும் கற்பிட்டி , கப்பலடி ஆகிய பகுதிகளில் இருந்து ஒருதொகை பீடி இலைகள் (31) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கட்டளையின் விஜய கடற்படையினர் புத்தளம் எரம்புகொடல்ல களப்பு பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த களப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் மிதந்து கொண்டிருந்த 4 உரமூடைகளை கைப்பற்றிய கடற்படையினர், அதனை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த 4 உர மூடைகளில் இருந்து 169 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை, கற்பிட்டி கப்பலடி களப்பு பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட மற்றுமொரு சோதனை நடவடிக்கையில் களப்பு பகுதியில் மிதந்துகொண்டிருந்த 5 உரமூடைகளை கைப்பற்றிய கடற்படையினர், அதனை சோதனைக்கு உட்படுத்தினர்.

குறித்த 5 உர மூடைகளில் இருந்து 176 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இரண்டு பிரதேசங்களிலும் ஒரே நாளில் கடற்படையினர் மேற்கொண்ட விஷேட சோதனை நடவடிக்கையின் போது 5 உர மூடைகளிலும் 345 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

## புத்தளம் ஜனாஸா நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் அல்ஹசனாத் ஜனாஸா நலன் புரிச்சங்கம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் அல்ஹசனாத் மஸ்ஜிதில் கடந்த சில மாதங்களாக இந்த ஜனாஸா நலன்புரிச்சங்கம் தொடராக இயங்கி வந்தது.

எனினும், இதனை ஒரு உத்தியோகபூர்வ அமைப்பாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற பலரது வேண்டுகோளுக்கு இணங்க இதன் பொதுக்கூட்டம் அண்மையில் புத்தளம் கெனல் வீதியில் அமைந்துள்ள அல்ஹனா மகளிர் சங்க கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

50 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இக்கூட்டத்தில் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர். ஜனாஸா நலன் புரிச் சங்கத்தின் அங்கத்தவர் அப்துர் ரஷீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம் இயத்துல் உலமாவின் புத்தளம் நகரக் கிளை தலைவர் அஷ்ஷெய்க் ஏ.பீ.ஜிப்னாஸ் (அல் மிஸ்பாஹி), புத்தளம் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் சார்பாக ஆசிரியர் எம்.ஒ.ஜே. நிஜாம் ஆகியோர் கலந்து கொண்டு மேலதிக தெளிவுகளை வழங்கினர்.

இதன்போது அல்ஹசனாத் ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் யாப்பும் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு புதிய நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## அநுராதபுரம் மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்க திட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தியானது 2024 ஆகஸ்ட் மாதத்திற்குள் 10,369 மெற்றிக் தொன் என விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள நீர் தேக்கங்களில் இதுவரை 1,952,980 மீன் குஞ்சுகள் பெரிய அளவிலான நீர்த்தேக்கங்களுக்கு விடப்பட்டுள்ளதோடு, 538,210 மீன்குஞ்சுகள் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களுக்கும்,சிறிய அளவிலான நீர்த்தேக்கங்களுக்கும் விடுவிக்கப்பட்டுள்ள நன்னீர் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை 1,619,249 என தெரிவிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 1,095,724 நன்னீர் மீன் குஞ்சுகள் தற்காலிக நீர்த்தேக்கங்களுக்கும் விடப்பட்டுள்ளன.

திலாபியா, கெட்லோ, மெடிக்கல் போன்ற மீன் இனங்களின் குஞ்சுகளே இந் நீர் தேக்கங்களில் விடப்பட்டுள்ளன. இவ்வாறு விடப்படும் மீன் குஞ்சுகளை வளர செய்வதற்காக அவற்றைப் பாதுகாக்கும் வகையில் மீனவர்கள் தங்கூசு வலைகளை பாவித்து மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சந்தியா அபேசேகர, உதவி மாவட்ட செயலாளர் பிரசன்ன யசரத்ன, அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் "இயலும் ஸ்ரீ லங்கா" புத்தளம், அக்கரைப்பற்று பிரதேச அலுவலகம் மதுரங்குளி கணமூலையில் (01) மிக விமர்சையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (படம்: கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

## அதிபர் முஹ்சி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் மன்பவுஸ் ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரி நிர்வாக சபை உறுப்பினரான சமூகவியலாளர் எஸ். ஆர்.எம்.முஹ்ஸி புத்தளம் ஸாஹிறா ஆரம்ப பாடசாலை அதிபராக நியமனம் பெற்று கடமையாற்றி வருவதைப் பாராட்டி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிர்வாக சபையினரால் பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு அண்மையில் மன்பவுஸ்ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க், அல் ஹாபிழ் ஏ.எம்.எம்.ரியாஸ் (தேவ்பந்தி) தலைமையில் கல்லூரியில் இடம்பெற்றது.

அதேவேளை கல்லூரியின் உப தலைவராக நீண்ட காலமாக செயற்பட்ட மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஏ. தாஹிரின் மறைவுக்குப் பிறகு ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அதிபர் எஸ். ஆர்.எம். முஹ்ஸி உப தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

## புத்தளத்தில் பாரம்பரிய விளையாட்டு போட்டிகள்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ரெக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாட்டு வண்டில் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் வெள்ளிக்கிழமை மாலை (06) புத்தளம் இஜ்திமா மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தளத்தில் பாரம்பரியமான இந்த விளையாட்டுப் போட்டிகள் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகின்றன.

மாட்டு வண்டிகளின் உரிமையாளர்கள், மாட்டுரிமையாளர்கள் மற்றும் இதர வாலிபர்களை உள்ளடக்கிய ரெக்லா என்கின்ற இந்த விளையாட்டு கழகத்தினர், ரசிகர்களுடைய எதிர்பார்ப்பை தீர்த்து வைக்கும் நோக்கத்தில் 04 மாதங்களுக்கு ஒரு முறை இவ்வாறான போட்டிகளை ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றார்கள்.

கடந்த ஒரு மாத காலமாக தொடர்ந்து தெரிவு போட்டிகள் நடைபெற்று இறுதிப்போட்டிகளே வெள்ளியன்று நடைபெறவுள்ளன. அரை கரத்தை, ரேஸ் கரத்தை, குதிரை ஓட்டம் மற்றும் மாட்டு வண்டிகளின் திறந்த போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், வெற்றிக்கிண்ணங்களும், வழங்கி வைக்கப்படவுள்ளன. புத்தளம் ரெக்லா விளையாட்டு கழக தலைவர் ஏ.டபில்யூ.அப்துல் வாரிஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல விஷேட அதிதிகள் கலந்து கொள்ள உள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தீர்த்தத் திருவிழா









(யாழ். விசேட நிருபர்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தீர்த்த திருவிழா நேற்றையதினம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. காலை ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்றது. நேற்றைய தீர்த்த திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும், நூறுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருக பெருமானை வழிபட்டனர். நேற்றைய தினம், மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளதுடன் இன்று செவ்வாய்க்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

# வடக்கின் உதயம்

## வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா

(கரவெட்டி தினகரன் நிருபர்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா இன்று மு.ப.9.00 மணிக்கு மருதங்கேணி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளரும், பிரதேச கலாசார பேரவையின் தலைவருமான குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதி பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஓய்வுநிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ் . மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுனாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான கலைச்சாகரம் செல்லையா பரமானந்தம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

நிகழ்வின் கலைச்சாகரம் விருதை மரியாம்பிள்ளை பிரான்சிஸ் (நாட்டுக்கூத்து) பயிலோன் தேவராஜா, கலைமருது விருதை மு.முரளிதரன் (மரசிற்பம்) மரியாம்பிள்ளை யா.கோப்பு செல்வக்குமார் (நாட்டுக்கூத்து) கலைக் கதிர் இளம் கலைஞர் விருதை ஜெயரத்தினம் ஜெனுசுதன் (சிந்துநடைக்கூத்து) பொன்சென் ரெயினோல்ட் ராஜ் (நாட்டுக்கூத்து) ஆகியோர் பெறுகின்றனர்.

## மருந்தகத்தை உடைத்து பணம் திருட்டு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகமொன்றை உடைத்த கொள்ளையர்கள் அங்கிருந்த நான்கரை இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 31 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மருந்தக உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பகல் வேளையில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்தது.

# இலங்கைக்கு கடத்த முயன்ற பலகோடி ரூபா மதிப்பிலான போதைப்பொருள் மீட்பு

(மன்னார் குறூப் நிருபர்)



தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த 58 கிலோ சாரஸ் என்ற அதிபோதை பொருள் கியூ பிரிவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன் சர்வதேச மதிப்பு ரூ.29 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக கஞ்சா, பீடி இலைகள், களைக்கொல்லி மருந்து, வலி நிவாரண மாத்திரைகள் தொடர்ச்சியாக கடத்தப்பட்டு வருகிறது.

கடத்தலை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கியூ பிரிவு மற்றும் கடலோர பாதுகாப்பு படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று (2) தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரை பகுதியிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் 'சாரஸ்' என்ற அதிநவீன போதைப்பொருள் கடத்தப்படுவதாக கியூ பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதனைத்தொடர்ந்து கியூ பிரிவு ஆய்வாளர் விஜய் அனிதா தலைமையில் பொலிஸார் அங்கு தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். இப்போது அங்கிருந்த படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 58 கிலோ சாரஸ் என்ற அதிபோதை பொருள் கியூ பிரிவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தூத்துக்குடி சவேரியார் புரம் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் உட்பட 3 பேரை பிடித்து கியூ பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கியூ பிரிவு பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் கஞ்சாவை உருக்கி ஒரு கிலோ சாரஸ் உருவாக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அண்மைக்காலமாக தூத்துக்குடியிலிருந்து போதைப்பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்படுவது வழக்கமாக நடந்து கொண்டிருந்தாலும் தற்போதைய இந்த கடத்தல் மிகப்பெரிய அளவில் பார்க்கப்படுகிறது.

# முற்போக்கு தமிழ் தேசிய கட்சி சஜித்துக்கு ஆதரவு

(யாழ் . விசேட நிருபர்)



ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளதாக முற்போக்கு தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போதும் நாம் சஜித் பிரேமதாசவை ஆதரித்து இருந்தோம். அன்று தொடக்கம் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன், முற்போக்கு தமிழ் தேசிய கட்சியும் இணைந்து பயணிக்கிறது.

உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாக நாம் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதசாவிடம் முன் வைத்துள்ளோம்.பாட்டாளிமக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்த வேண்டும், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்படுத்தப்பட வேண்டும். இவற்றுக்கு எல்லாம் எம்மிடம் அரசியல் அதிகாரங்கள் காணப்பட்டாலே அவற்றினை நாம் மேம்படுத்த முடியும்.அதனால் பாட்டாளி மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் தேவை என பிரதானமாக கோரியுள்ளோம்.

எமது கோரிக்கைகளை சஜித் பிரேமதாச ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் எமது ஆதரவை நாம் அவருக்கு வெளிப்படையாக தெரிவித்துள்ளோம். இதேவேளை இலங்கை தமிழரசு கட்சியும் , சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்குவதாக நேற்றைய தினம் அறிவித்துள்ளார்கள். அதனை நாம் வரவேற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்து குடும்ப பெண் உயிரிழப்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)



செம்பியன் பற்று வடக்கு பகுதியில் மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்து படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த மேரிரோசாரி ஈஸ்வரபாதம் (வயது 63) என தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை(01) காலை தேவாலயத்துக்கு சென்று விட்டு மகனுடன் மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் அமர்ந்து சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளை மருதங்கேணி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# வடக்கையும் தெற்கையும் விளையாட்டில் இணைப்போம்!

(கரவெட்டி தினகரன் நிருபர்)



எதிர்காலத்தில் மலரவுள்ள சஜித் பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் வடக்கையும்தெற்கையும் விளையாட்டுத்துறையின் ஊடாக இணைக்கின்ற ஓர் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் காரியாலய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

நாம் இப்போது மிகவும் தீர்மானம் மிக்க தேர்தலொன்றை நோக்கி நகர்ந்து செல்கிறோம்.

இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பலம் வாய்ந்த இடத்தில் உள்ளது.

சஜித் பிரேமதாச தலைவரோடு 4 வருடங்களுக்கு முன்னர் இணைந்து கொண்டேன். சிறந்த தலைமைத்துவத்துக்கான வேலைத்திட்டம் அவரிடம் உள்ளது.

அதனால் தான் அவரோடு இணைந்து இந்த அரசியல் பயணத்தில் இணைந்துள்ளேன்.

ஒரு நாட்டை முன்நோக்கிகொண்டுசெல்ல சிறந்த தலைமைத்துவம் வேண்டும். அத்தோடு சிறந்த குழுவும் எம்மிடம் உள்ளது. சிறந்த தலைமைத்துவமும் குழுவும் இணையும் போது நாட்டை முன்னோக்கி செல்ல முடியும்.

எதிர்காலத்தில் வடக்கையும் தெற்கையும் விளையாட்டுத்துறை ஊடாக இணைக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம். வட மாகாண விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டத்திற்கு செல்வது மிகக் குறைவு. வடக்கு மாகாண விளையாட்டுத் துறையை மேம்படுத்தி வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களுடைய திறன்களை வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

இதற்காக வேலைத்திட்டங்களை சஜித் பிரேமதாசவின் தலைமையின் கீழ் முன்னெடுப்போம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# சஜித்துக்கு சமத்துவ கட்சி ஆதரவு




ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு சமத்துவக் கட்சி தீர்மானித்துள்ளது.

வடக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சஜித் பிரேமதாச நேற்றையதினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்தார். இதன் போதுகிளிநொச்சியில்அமைந்துள்ள சமத்துவக் கட்சி அலுவலகத்துக்கு சென்ற சஜித் பிரேமதாசவை சந்திரகுமார் வரவேற்றதுடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்தார்.

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல்; மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா, பண்டார வன்னியன் சதுக்கப்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 12:15 மணியளவில் எரிபொருள் நிரப்ப வருகை தந்த மூவர் அடங்கிய குழுவினர் அங்கு கடமையில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் (01.09) இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊழியரோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் திடீரென அவர்களில் ஒருவர் அங்கு வேறு கடமையில் இருந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல் நடத்தினார்.

இதன்போது போக்குவரத்து பொலிஸார் இருவர் சம்பவ இடத்தில் இருந்துள்ளனர். இந்நிலையில் தாக்குதல் நடத்தியவர்களை தடுப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த மற்றைய ஊழியர் சென்ற போது அவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு முச்சக்கர வண்டியில் பொலிஸார் வருகை தந்த போது தாக்குதல் நடத்திய மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்

(யாழ். விசேட நிருபர்)

கொரோனா தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் மாலை 4 மணியளவில் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது , மறைந்த ஊடகவியலாளரின் உருவப்படத்திற்கு யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கு.செல்வக்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஈகைச்சுடரினை யாழ்.தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் த.வினோஜித் ஏற்றிவைத்தார். அதனை தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த 2021 செப்டெம்பர் 2ம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.




# ஜே.வி.பியின் கலவரங்களை மறந்துவிட முடியாது; நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதியின் வெற்றி உறுதி

நமது நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கலவரங்களின் பின்னணியில் ஜே.வி.பி.யின் செயற்பாட்டை யாரும் மறந்துவிட கூடாது எனவும், 1970 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டு வரையும், கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாட்டுக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியிலும் ஜே.வி.பியினரே செயற்பட்டதாக நுவரெலியா மாவட்ட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான எஸ்.பி.திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.





நாட்டில் நடைபெறவுள்ள ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நுவரெலியா மாநகர சபை வாசிகசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசார கூட்டத்திலேயே அவர் ,

இந்த நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ஜேவிபியினர், மக்களின் சாதாரண போராட்டத்தை "அரகல" எனும் நாமத்தை சூட்டி அப்போராட்டத்தை பெரிதாக்கினர்.

நாட்டின் பொருளாதாரம்,வெளிநாட்டு உதவிகளுக்கு பாதகம் விளைவித்த இவர்களால் நமது நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டு, அரசியல் பிரச்சினையும் அரசு மாற்றமும் ஏற்பட்டது. இதன்போது நாட்டை பொறுப்பேற்கும்படி சஜித் பிரேமதாசவை அழைத்தபோது நாட்டை பொறுப்பேற்க அவர் பயந்தார். அனுரகுமார திஸாநாயக்கவை கேட்டபோது பாராளுமன்றத்தை கலைத்தால்தான் நாட்டை பொறுப்பேற்பதாக ஒதுங்கிக்கொண்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்து நாட்டை பொறுப்பேற்றார். எனவே, அனுபவம்,வெளிநாட்டு தொடர்பு,திறமை மற்றும் ஆளுமை கொண்டவர் என்ற வகையில் மீண்டும் அவரை ஆட்சியில் அமரவைக்க முடிவெடுத்து 35 கட்சிகள் அவருடன் கைகோர்த்துள்ளோம்.

இவரின் வெற்றியில் மாற்றமில்லை. நாட்டு மக்களும் இவரை கைவிடப்போவதில்லை. அந்த வகையில் நுவரெலியா மாவட்டத்தில் 60% க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி ஈட்டுவதில் எவ்வித மாற்று கருத்தும் இல்லை என தெரிவித்தார்.

ஆ.ரமேஸ்

# அரச ஊழியர்கள் தமது வாக்குகளை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)





தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில், அரச ஊழியர்கள் தமது வாக்குகளைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் எனவும் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாறக் கூடாது எனவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று (02) டயகம பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர்,

இரு வருடங்களுக்கு முன்னர் இந்த நாடு எவ்வாறு இருந்தது? வரிசை யுகம் தோற்றம் பெற்றது. நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பெரும் துயரங்களை எதிர்கொண்டனர். சிலர் பட்டினியில் கூட வாடினார்கள். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் வரிசை யுகத்துக்கு முடிவுகட்டி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவந்துள்ளார்.

மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார். அதற்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. வீட்டுப் பிரச்சினைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. கல்வி சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால்தான் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒரு வருட காலப் பகுதிக்குள் அவர் பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளார். எனவே, அவருக்கு இன்னும் ஐந்தாண்டுகள் வழங்கினால் நாடும், மக்களும் நிச்சயம் முன்னேறுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கணவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கர்ப்பிணி பெண்: பதுளையில் சம்பவம்

(ஊவா சுழற்சி நிருபர்)

பதுளையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் கர்ப்பிணி பெண்ணொருவர் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை ஹிந்தகொடை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (1) இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பதிவாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் தனது கணவனின் கட்டுத் துவக்கினால் இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில், சிகிச்சைப்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 35 வயதான கணவனை கைதுசெய்துள்ள பொலிஸார் அவரிடமிருந்து, கட்டுத்துவக்கு ஒன்று, கைக்குண்டு ஒன்று, எஸ்.ஜீ ரக தோட்டா ஐந்து, துவக்கு உதிரிப் பாகங்கள் மற்றும் கார் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்தனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாது,

குறித்த, சந்தேகநபர் சில காலம் இராணுவத்தில் சேவையாற்றி, பின்னர் பதுளை நகரிலுள்ள பொதி விநியோகிக்கும் நிறுவனமொன்றில் முகாமையாளராக கடமையாற்றி வருவதாகவும், அதே நிறுவனத்தில் வேலை செய்யும் பெண்ணொருவருடன் கள்ளத் தொடர்பில் இருந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்விடயம் குறித்த நபரின் மனைவிக்கு தெரியவந்துள்ள நிலையில், எழுந்த வாக்குவாதம் முற்றி துவக்கு சூட்டில் முடிவடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒன்றாக வெற்றி பெறுவோம்

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மாத்தளை மகளிர் அமைப்பின் கூட்டம்









(மாத்தளை சுழற்சி நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, நேற்று முன்தினம் (01) மாத்தளை ஹோட்டல் பயிற்சி பாடசாலை பிரதான மண்டபத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

"ஒன்றாக வெற்றி பெறுவோம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந் நிகழ்வை மாத்தளை மகளிர் அமைப்பின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் மாத்தளை மாவட்டத்திலிருந்து மாத்தளை, யட்டவத்த, இரத்தோட்டை, உக்குவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க, கொழும்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ரோசி சேனாநாயக்க, கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, லக் வனிதா மகளிர் அமைப்பின் தலைவி சாந்தினி கோங்கஹகே, மாத்தளை ஐ.தே.க கட்சி தேர்தல் தொகுதி அமைப்பாளர் உதித் அனுராதா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளையில்

# தபால் மூலம் வாக்களிக்க 21,666 விண்ணப்பங்கள்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு மாத்தளை மாவட்டத்தில் 21,666 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும், இவற்றுள் 498 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் மாத்தளை மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி மாவட்ட செயலகம், தேர்தல் அலுவலகம், பொலிஸ் நிலையங்களிலும் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் ஏனைய அரச அலுவலகங்களிலும் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக்களிக்க தவறியவர்கள் எதிர்வரும் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்டியில் மஞ்சள் கயிறு போராட்டம்

(அக்குறணை குறூப் நிருபர்)



ஜனாதிபதி தேர்தலில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கும் வரப்பிரசாதங்களை வழங்குவோருக்கும் வாக்களிக்க மாட்டோம் என தெரிவித்து கண்டியில் மஞ்சள் கயிறு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கண்டி மக்கள் சபை என்ற சிவில் அமைப்பினால் நடத்தப்பட்ட இப்போராட்டமானது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஊழல் மோசடிகளுக்க எதிராக பிரசார நடவடிக்கையின் ஒரு கட்டமாக பொது மக்களை அறிவுறுத்தி அவர்களது கையில் மஞ்சள் கயிறு ஒன்று கட்டப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 30 ஆம் திகதி கண்டி ஜோர்ஜ் ஈ.டி.சில்வா பூங்காவில் பாதசாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு மஞ்சள் கயிறுகள் அணிவிக்கப்பட்டன.

இப்போராட்டத்தில், கண்டியைச் சேர்ந்த சர்வமத அமைப்பு, தொழிற் சங்கங்கள் மற்றும் சட்டத்தரணிகள் உட்பட பல்வேறு சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பிறப்பு சான்றிதழுக்கு பதிலாக இறப்பு சான்றிதழ் : மக்கள் விசனம்



நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிறப்பு சான்றிதழ் பத்திரம் பெறுவதற்காக செல்லும் பொதுமக்களுக்கு இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக வழங்கப்படும் விண்ணப்ப படிவம் வழங்கப்படுவதனால் தாம் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியநிலையேற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விஷனம் வளியிட்டுள்ளனர்.

இந்நடவடிக்கை, ஒரு மாதத்திற்கும் மேலதிகமாக நடைபெற்று வருவதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா பிரதேச அலுவலகத்தில் வழங்கப்பட்ட பிறப்பு சான்றிதழ் விண்ணப்ப படிவத்தில் இறப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சிங்கள மொழியில் இறப்பு என குறிப்பிடப்பட்ட சொல்லை வெட்டி விட்டு அதற்குப் பதிலாக ஆங்கில மொழியில் birth என எழுதப்பட்டு காணப்படுகிறது. இதனால் தமிழ் மொழி மாத்திரம் தெரிந்தவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளதா தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அதிகாரியிடம் வினவியபோது இவ்வாறான நடவடிக்கை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.



மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கண்டி, அம்பதென்னையில் அமைந்துள்ள பலநோக்கு கட்டடத் தொகுதி, வாகன பராமரிப்பு மற்றும் சேவை நிலையங்களுக்கு நேரடி விஜயம் செய்து அதன் குறைபாடுகளைக் கேட்டறிந்தபோது...

படம் : அக்குறணை குறூப் நிருபர்

இரத்தினபுரியின் கலாசார பாரம்பரியங்களை

# மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களுக்கு இரத்தினபுரி இளைஞர்கள் பரிமாற்றம்



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களின் மூன்று நாள் கலாசார பரிமாற்ற நிகழ்வு இரத்தினபுரி மற்றும் குருவிட்ட பிரதேச செயலக பிரிவுகளின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றன.

இரத்தினபுரி மாவட்ட செயலகம், இரத்தினபுரி பிரதேச செயலகம், குருவிட்ட பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், இரத்தினபுரி மாட்டத்திலிருந்து 40 இளைஞர் யுவதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 40 இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுகளின்போது, இரத்தினபுரி சமன் தேவாலய பெரஹரா, இப்பிரதேச பௌத்த விஹாரைகள் இரத்தினக்கல் அகழ்வு, இப்பிரதேச வன வளங்கள், ஏனைய தொழிற்றுறைகள் மற்றும் கலாசார பாரம்பரியங்கள் போன்றவை பற்றி இரத்தினபுரி மாவட்ட இளைஞர் யுவதிகளால் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு தெளிவூட்டப்பட்டதுடன், மத கலாசார பாரம்பரியங்களும் இந்நிகழ்ச்சிகள் ஊடாக பரிமாற்றம் செய்யப்பட்டன.

# குளவி கொட்டுக்கு இலக்காகிய வெளிக்கள உத்தியோகத்தர்

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியாவில் குளவி கொட்டுக்கு இலக்காகிய வெளிக்களஉத்தியோகத்தர் ஒருவர் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

மவுஸ்சாக்கலை தோட்ட சீர்பாதம் பிரிவில் பணி புரிந்து வரும் 46 வயதுடைய எஸ்.தினேஸ் என்ற நபரே இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளார். இவர் நேற்று (02) மதியம் பணிக்குச் சென்று திரும்பும்போது, அப்பகுதியில் உள்ள மரம் ஒன்றிலிருந்த குளவிக் கூட்டை கழுகு ஒன்று தட்டி விட்டு சென்றதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளாக பாதிக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# மூவினங்களின் ஒற்றுமைக்கு மத்தியில் அரசொன்று உருவாக்கப்பட வேண்டும்

## அனுரகுமார திசாநாயக்கா தெரிவிப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

தமிழ், சிங்கள, முஸ்லிம் பேதங்களை மறந்து மூவினங்களும் ஒற்றுமைக்கு மத்தியிலேயே அரசொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் முதலில் அரசியல்வாதிகள் முன் உதாரணமாக இருப்பதன் மூலமாகவே நாட்டை கட்டயெழுப்ப முடியும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கா தெரிவித்தார்.

அக்குறணையில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சகல இனங்களும் ஒற்றுமையாக வாழும் சூழல் ஏற்படுத்தப்படும், அதற்கான புதிய அரசியல் அமைப்பு ஏற்படுத்தப்படும்.

மற்றவர்களுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு ஆட்சிக்கு வருவதன் மூலம் ஒற்றுமையை உருவாக்க முடியாது. தமிழ், சிங்கள, முஸ்லிம் பேதங்களை மறந்து மூவினங்களும் ஒற்றுமைக்கு மத்தியிலேதான் அரசொன்று உருவாக்கப்பட வேண்டும்.நாம் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி மாளிகை கொழும்பில் மட்டுமே இருக்கும். ஏனையவைகள் மாற்றபடும். சஜித் பிரேமதாசவுடன் இணைந்துகொண்டுள்ள பலர் எமது கதவுகளையும் தட்டினர். அவர்களுக்கு எமது கதவுகள் திறக்கப்படமாட்டாது. ஏனெனில் நாம் ஒரு கொள்கை ரீதியில் இயங்குபவர்கள்.

நாம் ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைத்து அதற்கேற்றவாறு பிரதி அமைச்சர்களையும் நியமிப்போம். எமது ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அமைச்சர்களுக்கோ அரச வீடுகளை வழங்க மாட்டோம். இலவசமாக மின்சாரம் வழங்க மாட்டோம். முதலில் நாம் முன் உதாரணமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 2025 ஆம் ஆண்டிலிருந்து அரச ஊழியர்களுக்கு 24 - 50 சதவீதம் வரையிலான சம்பள உயர்வு

- அலுவலக உதவியாளர்களுக்கு தரநிலை அடிப்படையில் 5450 13,980 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- சாரதிகளுக்கு 6960 16,340 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- சமுர்த்தி/அபிவிருத்தி/விவசாய ஆய்வு அதிகாரிகளுக்கு 8,34015,685ரூபாய் வரையில் சம்பளன அதிகரிப்பு
- முகாமைத்துவ உதவியாளர்களுக்கு 12,710 17,550 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 12,710 25,150 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- பொது சுகாதார பரிசோதகர்/குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கு 12,558 25,275ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- கதிரியக்கவியல்/ மருந்தாளர்களுக்கு 13,280 25,720 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- தாதியர்களுக்கு 13,725 26,165 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- அதிபர்களுக்கு 23,245 39,595 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- ஆசியர்களுக்கு 17,480 38,020 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பொலிஸ் அதிகாரிகளுக்கு 10,740 23,685 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- கிராம சேவகர்களுக்கு 11,340 23,575 ரூபாய் வரையில் சம்பள அதிகரிப்பு
- நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு 28,885 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பிரதிப் பணிப்பாளர்/பிரதி ஆணையாளர்களுக்கு 43,865 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- பிரதேச செயலாளர்/பணிப்பாளர்/ஆணையாளர்/ சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகளுக்கு 57,545 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- வைத்திய அதிகாரிகளுக்கு 35,560 53,075 ரூபாய் சம்பள அதிகரிப்பு
- வருடாந்த சம்பள அதிகரிப்பு இரட்டிப்பாக்கப்படும்

அரச கூட்டுத்தாபனம்/சபைகள்/நியதிச் சட்ட நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்கள்/முப்படையினருக்கு 2025 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

அரச ஊழியர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உதய.ஆர்.செனவிரத்ன தலைமையிலான நிபுணத்துவ குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி 2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 24 50 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளது.

அதன்படி அரச சேவையின் அலுவலக உதவியாளர் தரம் மூன்றிற்கு 5,450 ரூபாவினாலும், இரண்டாம் தரத்திற்கு 8,760 ரூபாவினாலும், தரம் ஒன்றிற்கு 10,950 ரூபாயினாலும் சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதோடு, அதன் உயர்தர சேவைகளுக்கு 13,980 ரூபாவினால் சம்பள அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

அதேபோல் சாரதி சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 6,960 ரூபாவினால் அதிகரிக்கப்படும். இரண்டாம் தரத்தின் சம்பளம் 9,990 ரூபாவினாலும், முதலாம் தரத்திற்கு 13,020 ரூபாவினாலும், விசேட தரத்திற்கு 16,340 ரூபாவினாலும் சம்பள அதிகரிப்பு கிடைக்கும்.

மூன்றாம் நிலை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூ.8,340 சம்பள உயர்வும், இரண்டாம் தரத்திற்கு ரூ.11,690 சம்பள உயர்வும், முதலாம் தரத்திற்கு ரூ.15,685 சம்பள உயர்வும் கிடைக்கும்.

முகாமைத்துவ சேவை அதிகாரி/முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு ரூ. 10,140 மற்றும் தரம் II இற்கு ரூ.13,490 உயர்த்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முதல் தர சம்பளம் 17,550 ரூபாயால் அதிகரிக்கப்படும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்று சம்பள உயர்வு 12,710 ரூபாவினாலும் இரண்டாம் தரத்திற்கு ரூ.17,820, முதல் தரத்திற்கு ரூ.25,150 வினாலும் அதிகரிக்கப்படும்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர் மூன்றாம் தரத்தின் சம்பளம் 12,885 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. இரண்டாம் தரத்திற்கு ரூ.17,945 சம்பள உயர்வும் முதலாம் தரத்திற்கு ரூ.25,275 சம்பள உயர்வும் கிடைக்கும்.

கதிரியக்க நிபுணர் மற்றும் மருந்தாளர் மூன்றாம் தரத்திற்கு ரூ.13,280 சம்பள அதிகரிப்பும், இரண்டாம் தரத்திற்கு ரூ.18,310 சம்பள உயர்வும் முதலாம் தரத்திற்கு ரூ.25,720 சம்பள உயர்வும் கிடைக்கும்.

மூன்றாம் தர தாதியர் உத்தியோகத்தரின் சம்பளம் 13,725 ரூபாயாலும், இரண்டாம் தரத்திற்கு ரூ.18,835 சம்பள அதிகரிப்பும், முதலாம் தரத்தினருக்கு ரூ.26,165 சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

அதிபர் சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 23,425 ரூபாவினாலும், இரண்டாம் தரத்தின் சம்பளம் 29,935 ரூபாவினாலும், மூன்றாம் தரத்திற்கு 39,595 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும்.

ஆசிரியர் சேவையில் உள்ள கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ.17,480 சம்பள உயர்வும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.19,055 அதிகரிப்பும், இரண்டாம் தரத்திற்கு ரூ.20,425, முதல் தரத்திற்கு 38,020 ரூபாயும் முன்மொழியப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சம்பள உயர்வாக ரூ.10,704 பெறுவார். பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சம்பள ரூ.13,210 வினாலும், சப்இன்ஸ்பெக்டர்களின் சம்பளம் ரூ.14,050 வினாலும் அதிகரிக்கப்படும். பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் ரூ.18,290, பிரதான பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் ரூ.23,685 அதிகரிக்கப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர் முதலாம் தர சம்பளம் 11,340 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது. அந்த சேவையின் இரண்டாம் தரத்திற்கு ரூ.14,690, முதலாம் தரத்தினருக்கு ரூ.18,750 சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. நிர்வாக கிராம அதிகாரியின் சம்பளம் ரூ.23,575 அதிகரிக்கும்.

உதவிச் செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர், உதவி ஆணையாளர் ஆகியோரின் சம்பளம் 28,885 ரூபாவினால் அதிகரிக்கப்படும். பிரதி பணிப்பாளர் ,பிரதி ஆணையாளர்களின் ஆரம்ப சம்பளம் 43,865 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையாளர், சிரேஷ்ட உதவி செயலாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 57,545 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஆரம்ப தர வைத்தியர்களின் சம்பளம் 35,560 ரூபாவினால் அதிகரிக்கப்படும். இரண்டாம் தர வைத்தியர்களின் சம்பளம் ரூ.39,575 ஆல் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் தர வைத்தியர்களுக்கான சம்பள அதிகரிப்பு 53,075 ரூபாவினாலும், மேலதிக செயலாளர் மற்றும் விசேட வைத்தியர்களின் சம்பளம் 70,200 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

உதவிச் செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 28,885 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிரதி ஆணையர்களின் அடிப்படைச் சம்பளம் 43,865 ரூபாயாவினாலும் பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையர், சிரேஷ்ட உதவிச் செயலர் பதவிகளுக்கான சம்பளம் ரூ.57,545 வினாலும் உயர்த்தப்படும்.

அத்துடன் ஆரம்ப நிலை வைத்தியர்களின் சம்பளம் 35,560 ரூபாவினாலும் இரண்டாம் நிலை வைத்தியர்களின் சம்பளம் 39,575 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் நிலை வைத்தியர்களுக்கு 53,075 ரூபாவும், மேலதிக செயலாளர் மற்றும் விசேட வைத்திய பதவிகளுக்கு 70,200 ரூபாவும் சம்பள உயர்வு வழங்கப்படும்.

அதே சமயம், அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கும் வருடாந்தம் சம்பள உயர்வுத் தொகையை இரட்டிப்பாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், 2025 ஜனவரி 01 முதல் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் சம்பளத்தை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

## 'ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான 05 வருடங்கள்'

# இலங்கையை பலமுள்ளதாகக் கட்டியெழுப்ப மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவேன்

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தோட்டப் பாடசாலைகளின் பாடவிதானங்கள் இலகுபடுத்தப்படும். விசேடமாக விஞ்ஞான பாடநெறிகளுக்குத் தேவையான வசதிகள் படிப்படியாகப் பெற்றுக்கொடுக்கப்படும்.

பெருந்தோட்டத் துறையின் சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாடு போன்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகள் எடுக்கப்படும். குறைந்த வருமானம் பெறுவோருக்கு அஸ்வெசும நலன்புரி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

சமூக மட்டங்கள் மற்றும் பல்வேறு சமூகக் குழுக்களைப் படிப்படியாக உயர்வான நிலைக்கு கொண்டு வருதல் முன்னேற்றத்திற்கான அடிப்படை ஆகும். அவதானத்திற்கு உட்பட்ட குழுக்கள் போன்றே அவ்வளவாக அவதானத்திற்கு உட்படாத குழுக்களும் எம்மத்தியில் உள்ளன. பொருளாதார அபிவிருத்திக்கு இந்த அனைவரதும் பங்களிப்பு தேவையாக உள்ளது. அவ்வாறே அபிவிருத்தியின் நன்மைகள் இந்த அனைத்து குழுக்களுக்கும் நியாயமான விதத்தில் பகிரப்படுதலும் அவசியமாகும். அப்போது தான் சமூகம் ஒளிர்விடும்.

**திருடர்களைப் பிடிக்கும் சட்டங்கள்:**

திருடர்களைப் பிடிப்போம், பிடிப்போம் என்று கூறிக்கொண்டு திரியும் அரசியல் தலைவர்கள் எவரும் அதற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சியோ அல்லது ஆர்வமோ காட்டவில்லை.

தெற்காசியாவின் ஊழல்கள் குறைந்த நாடாக எமது நாட்டை மாற்றியமைக்க இருக்கின்றோம். இதற்காக நாங்கள் பின்வரும் ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

1. ஊழல்களை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்.
2. வெளிப்படைத் தன்மையான எதிர்காலத்துக்கு நிறுவனங்களைப் பலப்படுத்துதல்.
3. களவாடப்பட்ட சொத்துக்களை மீளப் பெறுதல்.
4. சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பு வழங்கி செயல்படல்.

### தெற்காசியாவின் ஊழல்கள் குறைந்த நாடாக எமது நாட்டை மாற்றியமைக்க இருக்கின்றோம்

**இந்த வேலைத்திட்டத்தின் கீழ்**

★ 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

★ 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரை தேசிய ஊழல் எதிர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

★ கணக்காய்வுப் பணிகளை சக்தி வாய்ந்தவையாக மாற்றுவதற்குத் தேசிய கணக்காய்வுச் சட்டம் திருத்தப்படும்.

★ சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் கடற்பாடுகள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தல் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படும்.

★ நிதி மோசடி மற்றும் பணம் தூயதாக்கல் தொடர்பான சட்டதிட்டங்களை கடுமையாக்குதல்.

★ ஊழல் நடவடிக்கைகளை இல்லாதொழிக்கும் சட்டதிட்டங்கள் மற்றும் விசாரணைகள் வலுவாக்கப்படும்.

★ கம்பனிச் சட்டத்தைத் திருத்தி உரித்துடமை நன்மைகளுக்கான வரையறைகள், நிதி நடவடிக்கைகளுக்குரிய உலகளாவிய செயலணித் தரத்துக்கமைய தயாரிக்கப்படும்.

★ அரச பெறுகை நடைமுறைச் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும்.

★ வரிச் சலுகையினைப் பெறும் நிறுவனங்களின் பட்டியலைப் பகிரங்கப்படுத்துதல்.

★ தகவலுக்கான உரிமைச் சட்டம் மேலும் வலுவாக்கப்படும்.

**கௌரவமான மகளிர்:**

சிறுபான்மையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆயினும் எமது சமூகத்தில் பெரும்பான்மையான அதாவது 57 சதவீதமாகவுள்ள பெண்களின் உரிமைகளுக்காக நாம் உரியவாறு நடவடிக்கை எடுத்துள்ளோமா? அந்த வினா எம்முன் உள்ளது.

பெண்களுக்கு கௌரவம், பலம் மற்றும் சுயமரியாதை கிடைக்கக்கூடிய அமைப்பொன்றை சமுதாயம் முழுவதும் நாம் உருவாக்குவோம். அதற்குத் தேவையான சட்டங்கள் வகுக்கப்படும். ஏற்கனவே நாம் பெண்களை வலுவூட்டும்சட்டமொன்றை நிறைவேற்றியுள்ளோம்.

'பெண்களை வலுவூட்டும் சட்டத்திற்கு' ஏற்ப பெண்களின் உரிமைகளுக்காக புறம்பான ஒரு ஆணைக்குழுவை அமைப்போம்.

வறுமையில் வாடும் பெண்களுக்கு உதவுவதற்காக புதிய கொள்கையொன்று தயாரிக்கப்படும்.

நிகழ்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் நுண் கடன்கள் உட்பட ஏனைய கடன் சுமைகளிலிருந்து அவர்களை மீட்பதற்காக தற்போது நடைமுறையிலிருக்கும் வேலைத்திட்டத்தை மென்மேலும் விஸ்தரிக்கவுள்ளோம்.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆகக்கூடியது 10 இலட்சம் ரூபா வரை 3 சதவீத வட்டியில் சலுகைக் கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

வீட்டில், செல்லும்வழிகளில், தொழில்புரியுமிடம் போன்ற இடங்களில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கச்செய்து முறையான மற்றும் முழுமையான பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அலகொன்றை பேணிச்செல்வது உறுதிப்படுத்தப்படும்.

**தேசத்திற்காக பூக்கும் மலர்கள்:**

பிள்ளைகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதிலிருந்தும், துர்நடத்தையாளர்களிடமிருந்தும் மற்றும் பாலியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதிலிருந்தும் விடுவிப்பது போன்றவை தொடர்பாக தேவையான சட்டவிதிமுறைகள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் உருவாக்கப்படும்.

யுனெஸ்கோ அமைப்புடன் ஒன்றிணைந்து, பிள்ளைகளின் தனித்துவத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான புகைப்படங்கள் போன்றவற்றை இணையதளத்தில் இடுவதற்கு எதிரான சட்டவிதிகள் ஏற்கனவே வகுக்கப்பட்டு வருகின்றது. துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்காக மிகவும் பொருத்தமான பாதுகாப்பு முறையொன்றை உருவாக்குவதற்கு நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

**இளைஞர்கள் வசந்தம்:**

டிஜிட்டல் அறிவுடைய, வேகமான இளம் தலைமுறையினர் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான அறிவு மற்றும் தேர்ச்சிகளை நாம் பெற்றுக்கொடுப்போம்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வருமானத்தினை ஈட்டிக்கொள்ளும் இளம் தலைமுறையினருக்கு அதற்குத் தேவையான படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

அரசியல் துறையிலும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்குத் தேவையான பின்புலம் செய்துகொடுக்கப்படும். இளைஞர் பாராளுமன்ற ஆலோசனை அலுவலகம், அரசியல் கல்விக் கல்லூரி ஆகியவற்றை அமைப்பதன் மூலமாக புதிய தலைமுறை அரசியல்வாதிகள் அறிவு நிறைந்தவர்களாக மாற்றப்படுவார்கள்.

**சிரேஷ்ட பிரஜைகள்:**

தற்போது சமூகத்தில் வேகமான மற்றும் சிக்கல்கள் காரணமாக சிரேஷ்ட பிரஜைகளுக்கு உரிய பாதுகாப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பிள்ளைகளுக்குச் சிரமமேற்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. பெரியவர்கள் மாத்திரமல்ல பிள்ளைகளும் சொல்லமுடியாத அனாதரவான நிலைமைக்கு ஆளாகின்றனர்.



இதன் காரணமாக நவீன சகல வசதிகளையும் கொண்டமைந்த சிரேஷ்ட பிரஜைகள் பராமரிப்பு மத்திய நிலையங்களை நாடு முழுவதும் நிர்மாணிப்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்காக தேசியக் கொள்கை 2025 இல் திருத்தப்படும்.

சிரேஷ்ட பிரஜைகளுடைய சமூக, கலாசார வாழ்க்கையினை மேம்படுத்திக் கொள்வதற்காக பிரதேச செயலகங்கள் மற்றும் சமுதாய சபைகள் மூலம் பல்வேறு செயற்பாடுகள் ஒழுங்குசெய்யப்படும்.

வலது குறைந்த நபர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சம்மேளனத்தின் 4 ஆவது உறுப்புரைக்கமைய அவ்வாறான நபர்களின் அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை முழுமையாக உறுதிப்படுத்துவதற்கான புதிய சட்டம் 2025 இல் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படும்.

சைகை மொழி சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கும், விசேட தேவையுடைய நபர்களுக்கான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கான கட்டட பிரவேசக் கொள்கை காலத்துக்கேற்றவகையில் திருத்தப்படும். விசேட தொழில்வாய்ப்புக் கோட்டா ஒன்று அவர்களுக்காக ஒதுக்கப்படும்.

அரச சேவைக்கு சூரியோதயம்:

2025 இல் அரச ஊழியர்களின் சம்பளம் 24 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை அதிகரிக்கப்படும். ஆகக்குறைந்த சம்பளம் 30000 ரூபாவாக அதிகரிக்கப்படும். வாழ்க்கைச் செலவுப் படி 25000 வரை அதிகரிக்கப்படும்.

40 வயதுக்கு உட்பட்ட அரச ஊழியர்களின் சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு உதவும் பாடநெறிகளைத் தொடர்வதற்காக ஓராண்டு கால சம்பளத்துடன் லீவு வழங்கப்படும். அரச கொள்கைகள் மற்றும் நிர்வாக பல்கலைக்கழகம் ஒன்று தாபிக்கப்படும். திறமை அடிப்படையிலான பதவியுயர்வு முறை ஒன்று தயாரிக்கப்படும்.

எமது நாட்டுக்குத் தற்போது அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்வதில் பிரதான பங்கு வகிப்பது வெளிநாட்டில் பணி புரியும் தொழிற்படையினர் ஆகும். அவர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தைத் திருத்துவதற்குரிய பணிகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் புதிய சட்டத்தின் கீழ் வெளிநாட்டு ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டம், குழந்தை பராமரிப்பு மத்திய நிலையங்கள் போன்ற பல வசதிகள் கிடைக்கும்.

**முறைசாராத தொழிற்சந்தை:**

அநேகமானவர்கள் முறையற்ற தொழிற் சந்தையில் தொழில் புரிகின்றார்கள். முச்சக்கரவண்டி சாரதிகள், தனியார் பஸ் ஊழியர்கள், நாட்டாமைமார்கள், தெரபிஸ்டுகள், சுத்தம் செய்யும் சேவையாளர்கள் போன்ற பல துறைகள் இதனுள் அடங்கும். இத்தகைய இனைவருக்காகவும் பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு 2025 இல் அறிமுகப்படுத்தப்படும்.

அவர்கள் அனைவருக்கும் தொழில் கௌரவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக, தரமான பயிற்சிகள் வழங்கப்படும். பெரும்பாலான முச்சக்கர வண்டி சாரதிகள் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடன் மீளச்செலுத்துவதற்கு முடியாத நபர்கள் அவர்களின் கடன்களை மறுசீரமைப்பதற்காக அரச வங்கிகள் மூலம் வாய்ப்பு வழங்கப்படும். தனியார் வங்கிகளுடனும் கலந்துரையாடி இச் சலுகைகளை வழங்குவதற்கு நாம் நடடிவக்கை எடுப்போம்.

**நாட்டைப் பாதுகாத்தல்:**

முப்படைகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் (விசேட) சட்டம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டுக்கு பொருத்தமான வகையில் பாதுகாப்பு படையினரை நவீனமயப்படுத்துவதற்கான குழுவின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

### தேர்தல் விஞ்ஞாபனம்

முப்படையின் இராணுவத்தினருக்கு ஒரே தரம்– ஒரே ஓய்வூதியம் எனும் முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்படும்.இதன் மூலம் படைவீரர்களின் ஓய்வூதியங்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

**பொலிஸ் மறுமலர்ச்சி:**

நீதி நிர்வாகத்தின் அடிப்படை பாதுகாப்பு, பொறுப்புடன் கூடிய, இரவு பகல் பாராது செயலூக்கம் மிக்க, திறமையான,அச்சமற்ற மற்றும் நேர்மையான உத்தியோகத்தர்களைக் கொண்ட பொலிஸ் படை ஒன்றை அமைப்பதாகும்.பொலிஸ் உத்தியோகத்தர்களின் நிறுவனம் சார் மற்றும் அதற்குப் புறம்பான விடய அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பொலிஸ் பல்கலைக்கழகமொன்று நிறுவப்படும். அதன் மூலம் சேவையில் இருக்கும்போது பட்டம், பட்டப்பின் படிப்பினைப் பெற்றுக்கொள்வதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

ஒழுக்கசீலமுள்ள சமூகமொன்றை உருவாக்கும் பணியில் பொலிஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் உயர்ந்தபட்ச சேவையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பின்புலம் அமைக்கப்படும்.

**சிறைக்கைதிகளும் மனிதர்களே:**

பெரும்பாலான சிறைச்சாலைகளில் நெரிசல் நிலைமை காணப்படுகின்றது. இது சிறைக்கைதிகளின் உள மற்றும் உடல் ரீதியான சுகாதாரத்திற்கு பாதகமாக அமையும். இதனால் தொடர்ந்தும் கைதிகளை சிறந்த மனிதர்களாக மாற்றி சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன.எனவே நாம் சர்வதேச தரத்துக்கமைய புதிய சிறைச்சாலைகளை நிர்மாணிக்கவுள்ளோம்.

இதன் மூலம் சுகாதாரம்,துப்புரவேற்பாடு, உணவு மற்றும் நலன்புரி சேவைகள் மேம்படுத்தப்படும். இதன் மூலம் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை நல்வழிக்குட்படுத்தி சமூகத்துக்கு பயனுள்ளவர்களாக மாற்றும் வேலைத்திட்டம் பலப்படுத்தப்படும்.

**(மிகுதி நாளை)**

Observer ADZ | வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Badulla & Nuwaraeliya District

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

Badulla - 055 22 256 16
8196 - Advertising Office (Lake House), No. 14, Opposite Muthiyangana Clock Tower, Badulla.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**திருத்த இல. 01**

### விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் காலத்தை நீடிப்பதற்கான அறிவித்தல்

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|---|
| 1 | RDA/PD(W)/WP/VP/COL/2024/01 | பேஸ் லைன் வீதியில் கனத்த சந்தியிலிருந்து பொலிஸ் கராஜ் வரையில் வாகனத் தரிப்பிடக் கட்டணங்களைச் சேகரித்தல். |
| 2 | RDA/PD(W)/WP/VP/COL/2024/02 | காசல் வீதிக்கு அருகில் வாகனத் தரிப்பிடக் கட்டணங்களைச் சேகரித்தல். |

மேற்கூறிய திட்டங்களுங்கான 2024-08-13ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தலுக்கு மேலதிகமானது, இந்த விலைக்கோரலின் முடிவுறுத்தல் திகதி 2024 செப்டெம்பர் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி வரையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk & mohsl.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாணப் பணிப்பாளரின் அலுவலகம் (மேல் மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### கேள்வி அறிவித்தல்

### விற்பனைத் திகதி: 06.09.2024

**My No.: LD/S/T/456/2023/SLPA & LD/S/T/445/2022/CICT**

**Urea Prilled & Fertilizing Elements** ஆகியவற்றை அடக்கியுள்ளதாக கூறப்படும் தடையகற்றப்படாத பதினொரு (11) கொள்கலன்கள் பண்டாரநாயக்க வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.09.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு ஏலவிற்பனையில் விற்பனை செய்வதற்காக UCT மற்றும் CICT திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ளன.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் கீழான தேசிய உர செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள இறக்குமதி உரிமத்தைக் கொண்டுள்ள சாரார் மாத்திரமே (பதிவு பெற்ற கம்பனியினால் நியமனஞ் செய்யப்பட்ட நபரொருவர்/சாரார்) மேற்குறிப்பிட்டுள்ள கேள்விக்காக பதிவு செய்வதற்காக அனுமதிக்கப்படுவர். மேற்குறிப்பிட்டுள்ள பதிவு/ உரிமமானது இற்றைவரையாக்கப்பட்டிருப்பதுடன் 2024 ஆம் ஆண்டிற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அதன் பிரதியொன்று கேள்விக்கான பதிவு செய்யும்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் மற்றும் கேட் அனுமதிச்சீட்டுக்கள் ஆகியன 2024.09.03 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து 2024.09.04 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவையும் (அத்துடன் VAT மற்றும் SSCL) மற்றும் 200,000 ரூபாவையும் (ஒவ்வொரு அம்சத்திற்கான மீளளிக்கப்படும் கட்டணம்) செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளலாம் (அனைத்து இரு (2) அம்சங்களுக்கும் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு கேள்விதாரர் விரும்பினால் மேற்குறிப்பிட்டவாறு 400,000 ரூபாவை மொத்த மீளளிப்பு வைப்பாக செலுத்துதல் வேண்டும்)

விற்பனைக்காக பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்கள் உரித்தான திறந்தவெளிகளில் 2024.09.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியிலிருந்து பரீட்சிக்கப்படலாம்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**03.09.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

## NLDB
## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

### பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணைகளுக்காக தயாரிக்கப்பட்ட விலங்கு உணவை வழங்குவதற்காக 1986 இல. 15 விலங்குணவு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள விலங்குணவு உற்பத்தியாளர்களின் கீழ்க்காணும் கால எல்லையுடன் சம்பந்தப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தயாரிக்கப்பட்ட பசு உணவு - 2024 நவம்பர் 01 முதல் 2025 ஏப்ரல் 30 வரை

| பண்ணை | தேவைப்படும் அளவுகள் | | |
|---|---|---|---|
| | High yielding Feed (Milking cow)- (M.T) | General Feed - (Milking cow) - (M.T) | Calf Starter Feed (M.T) |
| ரிதியகம பண்ணைக்காக | 720 | 600 | 60 |
| போபத்தலாவ, டயகம, ரொசிடா மெனிக் பாலம் பண்ணைகளுக்கு | 618 | 492 | 20 |
| உலர் வலயம் மற்றும் தென்னை முக்கோண பண்ணைக்காக | - | 1417 | 78 |

விலங்குணவு தேவைப்படும் அளவு மாதிரிகள் (Specifications) மற்றும் கேள்வி நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களை அலுவலக (வேலை) நேரங்களில் கீழேயுள்ள முகவரியில் உள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல்கள் முகாமைத்துவத்திடம் வேண்டுதல் கடிதமொன்றை சமர்ப்பித்து ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத ரூ.5000.00 தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

2024 செப்டெம்பர் 23 பி.ப. 3.30 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், 2024 செப்டெம்பர் 24 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்படும்.

மேற்படி நேரம் முடிவடைந்தவுடன் கொழும்பு 05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட**
**கொழும்பு - 05,**
**தொ.பே.இல.**
**தலைமையகம் : 0112501701/2**
**வழங்கல் பிரிவு : 0117173989**
**மின்னஞ்சல் முகவரி : supplies.nldb@gmail.com**

## கல்வி அமைச்சு
### திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு
### இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

## வெற்றிடங்கள்

### பணிப்பாளர் - அதிபர் - (HM 2-1)

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவின் கீழ் உள்ள இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மோட்டார் பொறிமுறை/ இயந்திரவியல்/ மின்சாரப் பொறியியலாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

பொறியியல் துறையில் பட்டப் பின்படிப்பு (Masters') பட்டம் அல்லது கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் தொடர்புடைய ஏனைய ஏதாவது துறையில் முகாமைத்துவ மட்டத்தில் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் என்பதுடன் இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய பாடங்களைக் கற்பித்தல், மாணவர்களைக் கையாள்தல் மற்றும் பயிற்சியளிப்பதில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டிருத்தல் மற்றும் தொடர்புடைய கைத்தொழில் துறையில் அனுபவம்.

அல்லது

(ஆ) பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் கோப்பரேட் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் என்பதுடன் இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய பாடங்களைக் கற்பித்தல், மாணவர்களைக் கையாள்தல் மற்றும் பயிற்சியளிப்பதில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டிருத்தல் மற்றும் தொடர்புடைய கைத்தொழில் துறையில் அனுபவம்.

**உள்வாரி:**

சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் பிரதிப் பணிப்பாளர்/ பிரதி அதிபர் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவு** : முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், **HM 2-1 –** ரூபா 91,645 - 2700x12 - 124,045/- (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்)

**ஆட்சேர்க்கப்படும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம்

**வயதெல்லை** : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 45 வயதிற்குக் குறையாமலும் 57 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனைய நன்மைகள் :**

- அரசாங்கச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.
- ஊழியர்கள் தமது சம்பளத்தில் 8% தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 12% நிறுவனத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் என்பதுடன் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள் :**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- உள மற்றும் உடல் ரீதியாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் 03 வருட தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்/ அவள் அந்தக் காலப்பகுதியின் இறுதியில் காட்டும் திருப்திகரமான வினைத்திறன் மற்றும் நடத்தையின் பிரகாரம் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உள்வாரி விண்ணப்பதாரர்கள் 01 வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- மேற்கூறிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் இயைபுடைய பதவிகளின் ஆரம்ப சம்பள நிலையிலாகும்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் புகைப்படப் பிரதியை சுய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்
(இ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்
(ஈ) தேசிய அடையாள அட்டை

தற்போது அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவள்/அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறவினரல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் முழுமையான விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை தங்களாலேயே சான்றுபடுத்திய சான்றிதழ்களுடன் 2024-09-17ஆம் திகதிக்கு முன் செயலாளர், கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு, இல. 354/2, ''நிபுனதா பியச'', எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

ஆட்சேர்ப்பதற்கு எந்த விதத்திலாவது ஆதரவு தேடுதல் ஆட்சேர்ப்பதற்கான தகைமையீனமாகலாம்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு,**
**இல. 354/2, ''நிபுனதா பியச'',**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05**

## சிறு விளம்பரம்

### காணி/தோட்டம்

641

**வீடு சொத்து**
**கொழும்பு மாவட்டம்**
**விற்பனைக்கு**

மட்டக்குளி - முழுமையான இரு மாடி வீடு விற்பனைக்கு. நீர் மற்றும் மின்சாரம் வழிக் கட்டணம் வேறு வேறாகச் செலுத்தலாம். இரு குடும்பங்களுக்கும் உகந்தது. 02 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வசதியுண்டு. 075-4437105, 072-4448411. 058810

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## University College of Ratmalana
## University of Vocational Technology
Ministry of Education

# INVITATION FOR BIDS

01. The Chairman, Procurement Committee, invites sealed bid from eligible and qualified bidders for above tasks.

| Tender No | Tasks Description | Bid Security (Rs.) | Non-refundable Fee (Rs.) |
|---|---|---|---|
| UCRAT/NCB/CONSL/1-2024 | Renovation of Food Technology Laboratory | 150,000.00 | 4000.00 |

02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
03. The ICTAD registration required for main contractor:
Specialty - Building Construction, Grade - C 6, C 7 or C 8
04. Interested eligible Bidder may obtain further information from the Assistant Bursar Telephone Number – 011-2626295 University College of Ratmalana, No.01A, Station Road, Ratmalana, from 9.00 a.m. and 2.00 p.m. from **3rd September 2024** to **25th September 2024** during working days.
05. Complete set of bidding documents can be obtained from the Finance Division of the University College from **3rd September 2024** to **25th September 2024** from 9.00 a.m. to 2.00 p.m. during working days
06. Sealed bids clearly marked with the position on the top left corner of the envelop should be sent under Registered Post to the Chairman, Procurement Committee, University College of Ratmalana, or be deposited in the Tender Box provided at the Finance Division.
07. Bids will be closed at **2.00 p.m.** on **25th September 2024** and will be opened immediately thereafter. Bidder or his authorized representative (with letter of authorization) is allowed to be present at the time of opening of bids.
08. Pre-bid meeting **10th September 2024 2.00PM** in the **Auditorium** in University College of Ratmalana.
09. The Procurement Committee has the right to accept or reject any or all bids at any stage.

Chairman,
Procurement Committee,
University College of Ratmalana,
No. 1A, Station Road,
Ratmalana.

Tel: 0112626295
0112626297
Web: www.ucr.ac.lk

3rd September 2024

## மரணசாதனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கம்பஹா மாவட்டத்தின் கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் கதிரான வடக்கு 93A கிராம உத்தியோகத்தர் பிரிவில் கதிரான வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 511232 பிரிவு இல. 02, துண்டு இல. 0130 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 70, இம்புல்செவன, தேமன்ஹந்திய எனும் விலாசத்தைக் கொண்ட சியகுனகொஸ்கொடகே அன்டன் ஜோர்ஜ் அனில் பெர்ணான்டோ என்பவர் 02.01.2022 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் கட்டான பிராந்திய அலுவலகத்துக்கு 2024.10.02 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை இல. 44/03, அம்பாறை 12ம் வீதி, தே.அ.அ.இல - 197477410090 கொண்ட கனகசபை றூத்கீத்தாஞ்சலி ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை கனகசபை பாத்திமா றுஸ்மி என மாற்றி இனிமேல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரிவிக்கிறேன்.

**கனகசபை பாத்திமா றுஸ்மி**

## பொது அறிவித்தல்

2024 செப்டெம்பர் 10 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவிற்கமைவாக இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்: வேநொக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கூட்டிணைப்புத் திகதி: 2023.08.07
கம்பனி இலக்கம்:PV00281871
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: இல.: டி/127, கிறீன் பார்க் வவுலகல முணகம, ஹொரணை.
கம்பனியின் புதிய பெயர்:ஒடிசி ட்ரெயில் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனி செயலாளர்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## கட்டடங்கள் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### பொரளை, தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் கழிவுநீர் தொட்டியின் நிர்மாணம் (கொள்ளளவு: 395,000 லீட்டர்கள்) (ஒப்பந்த இல.: BD-0080sp01-ZWS/CT059/24)

1. மதிப்பிடப்பட்ட 45.0 மில்லியன் ரூபா செலவைக் கொண்ட, கீழ் விபரிக்கப்பட்டவாறு "பொரளை, தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் கழிவுநீர் தொட்டியின் நிர்மாணத்திற்கு (கொள்ளளவு: 395,000 லீட்டர்கள்)" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

   ஒப்பந்தக் காலம் 91 நாட்களாகும்.

2. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். 04/2016(iii) ஆம் இலக்க பொது நிதி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்தப் பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் பெறுமதி 50 மில். ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கும் வரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியான, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) C5 அல்லது C4 தரத்துக்காக கட்டட நிர்மாணத் துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

   "விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளில் உள்ள, இலங்கை பொது ஒப்பந்ததாரர்களின் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் அசல் சான்றிதழை (*PCA 03*) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் *PCA 03* சான்றிதழை சமர்ப்பிக்கப்படாதவரை எந்த ஒரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது".
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, டொரிங்டன் ஒழுங்கை, இல. 213, கட்டடங்கள் திணைக்களம், தலைமை பொறியியலாளர் (மேல் தெற்கு) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொடர்பு இலக்கங்களானது: தொலைபேசி: 011-2554691, தொலைநகல்: 011-2554690
5. மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டு ஆயிரம் ரூபாவை (ரூபா 12,000/-) செலுத்தி 2024.09.03 ஆம் திகதி தொடக்கம் 2024.09.24 ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை கொழும்பு 07, டொரிங்டன் ஒழுங்கை, இல. 213, கட்டடங்கள் திணைக்களம், தலைமை பொறியியலாளருக்கு (மேல் தெற்கு) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
6. விலைமனுக்களை 2024.09.25 ஆம் திகதி 10:00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், 2ஆவது மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பத்தரமுல்லை, "செத்சிறிபாய", 2ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்கள, ஒப்பந்தப் பிரிவில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதி அல்லது எந்த ஒரு நீடிக்கப்பட்ட காலத்தில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவை;
   - விலைமனு ஆவணத்தின் 09 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில்
   - கட்டடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - 675,000.00 ரூபா தொகை ஒன்றுக்காக
   - 2025 ஜனவரி 21 ஆம் திகதிவரை செல்லுபடியான
   - விலைமனு தரவின் 16.2 ITB உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி**
**கட்டடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**2ஆவது மாடி, "செத்சிறிபாய",**
**பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

## பெயர் மாற்றம்

மாத்தளை பி.செ.பி. கோட்டேகொட பலாபத் வெல. இல.20/3, சுலைமான் லெப்பே முஹம்மது நியாஸ் ஆகிய எனது பெயர் எனது பிறப்பு சான்றிதழ் தேசிய அடையாள அட்டைகளில் சுலைமான் லெப்பே முஹம்மது நிஹாஸ் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதால் எனது பெயரை சுலைமான் லெப்பே முஹம்மது நியாஸ் என தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் புதிய பெயரில் ஒப்பமிடுவேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிக்கிறேன்.

**சுலைமான் லெப்பே**
**முஹம்மது நியாஸ்**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை இலக்கம் 44/03, அம்பாறை 12ம் வீதியைச் சேர்ந்த தே.அ.அ.இல .: 731371237V கொண்ட கனகசபை ஜோச் நேசதுரை மதுராங்கன் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை கனகசபை ஜோச் நேசதுரை முகம்மட் சமர் அவ்வாஸ் என மாற்றிக் கொண்டு, சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**கனகசபை ஜோச் நேசதுரை**
**முகம்மட் கமர் அவ்வாஸ்**

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாவட்டம் நெடுந்தீவு பிரதேச செயலகப்பிரிவில் 13ஆம் வட்டாரம் நெடுந்தீவு கிழக்கு நெடுந்தீவு முகவரியைக் கொண்ட நடராசா விந்தன் கனகரட்ணம் தேசிய அடையாள அட்டை இலக்கம் (196815203855) ஆகிய நான் எனது ஞானஸ்நான (திருமுழுக்கு) பெயரினையும் உள்ளடக்கி நடராசா கெல்வின் விந்தன் கனகரட்ணம் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.
ந.கெல்வின் விந்தன் கனகரட்ணம்

## பொது அறிவித்தல்

2024 செப்டம்பர் 20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவிற்கமைவாக இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

**கம்பனியின் முன்னைய பெயர்:** நைவ் ப்ளான்டேஷன் (பீவீடி) எல்டிடீ
**கூட்டிணைப்புத் திகதி :** 2018.03.23
**கம்பனி இலக்கம் :** PV131031
**கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல.: 05 பிரிவின வீதி, பிங்வத்த, பாணந்துறை.
கம்பனியின் புதிய பெயர்: நெயிவ் ப்ளான்டேஷன் (பீவீடி எல்டி - **டீகம்பனி செயலாளர்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சுகாதார அமைச்சு
## இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு 10

### வைத்தியசாலையைச் சுற்றியுள்ள எல்லைச் சுவருக்கு நிறப்பூச்சு பூசுதல் மற்றும் திருத்தவேலைகள்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மற்றும் அடிப்படை மதிப்பீட்டுக் கிரயமாக (வரிகள் மற்றும் சில்லறைச் செலவுகள் இன்றி) 3.73 மில்லியன் ரூபாவைக் கொண்ட கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலையைச் சுற்றியுள்ள எல்லைச் சுவருக்கு நிறப்பூச்சு பூசுதல் மற்றும் திருத்தவேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரின் சார்பாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த வேலைகளில் அளவுப் பத்திரத்தில் (BOQ) விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலையைச் சுற்றியுள்ள எல்லைச் சுவருக்கு நிறப்பூச்சு பூசுதல் மற்றும் திருத்தவேலைகள் உட்பட செங்கள் வேலைகள், சாந்து பூசுதல் என்பன உள்ளடங்குகின்றன. நிர்மாணக் காலம் 84 நாட்களாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் (NCB) நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் அடங்காதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   **ICTAD பதிவுத் தேவைப்பாடு:**
   - **விசேடத்துவம் : கட்டிடம்**
   - **தரம் : C8 அல்லது C7**
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு 10, தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-2691111 மற்றும் மேற்கூறிய முகவரியில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணத்தை இலங்கை தேசிய கண் வைத்தியசாலை காசாளருக்குச் செலுத்தியதன் பின் 2024-09-03ஆம் திகதி முதல் (விலைமனுக்கள் வழங்கப்படும் நாள்) 2024-09-22ஆம் திகதி வரையில் (திகதி) மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-10, இலங்கை தேசிய கண் வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-09-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் 55,000.00 ரூபாவுக்கான (ஐம்பத்தையாயிரம் ரூபா மட்டும்) விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் 8 மற்றும் 9ஆம் பிரிவுகளுடன் திடமாக இணங்குதல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும்.
10. விலைமனுப் பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**இலங்கை தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 0112693911**

## இலங்கை புகையிரத சேவைகள்

### விலைமனுக் கோரல் (IFB)

### PROCUREMENT FOR THE SUPPLY OF 01 NO. OPTICAL EMISSION SPECTROMETER FOR METAL ANALYSIS SRS/F. 8051

1. இலங்கை புகையிரத சேவை சார்பாக திணைக்கள கொள்முதல் குழு (பாரிய), இரயில்வே தலைமையகம், த.பெ.இல.355, கொழும்பு, இலங்கை Procurement For The Supply Of 01 No. Optical Emission Spectrometer For Metal Analysis விநியோகத்திற்கான தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. இலங்கை புகையிரத சேவைக்கு பகர அதிகார ஆவணம் மூலம் அதிகாரம் பெற்ற அங்கீகாரம் பெற்ற முகவர் மூலம் தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. சர்வதேச போட்டி ஏலம் மூலம் ஏலம் நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதியுள்ள மனுதாரர்கள் கூடுதல் தகவல்களைப் பெற்று, விலைமனு ஆவணங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் **03.09.2024 முதல் 15.10.2024** வரையிலான வேலை நாட்களில் வார நாட்களில் காலை **9.00 மணி முதல் மாலை 3.00** மணி வரை சரிபார்க்கலாம்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரத கொள்முதல் உப திணைக்களம்,**
   **ஒல்கட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**

   | | |
   |---|---|
   | **தொலைபேசி இலக்கம்** | **: 94 (11) 2438078 அல்லது 94(11) 2436818** |
   | **தொலைநகல் இல.** | **: 94(11) 2432044** |
   | **மின்னஞ்சல்** | **: srs.slr@gmail.com** |
   | **இணையத்தளம்** | **: www.railway.gov.lk** |

4. விலைமனுதாரர்கள் தயாரிப்பில் 10 வருட அனுபவமும், இதே போன்ற இயந்திரங்களுக்கான ஏற்றுமதி சந்தையில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவமும் உள்ளவர்கள் மற்றும் ஒரே மாதிரியான உற்பத்திப் பணிகளுக்கு செல்லுபடியாகும் ISO 9001:2008 உள்ளவர்கள் தகுதியுடையவர்கள்.
5. ஆங்கில மொழியில் ஏல ஆவணங்களின் முழுமையான தொகுப்பை, பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்), புகையிரத கொள்முதல் துணைத் திணைக்களம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து ஆர்வமுள்ள மனுதாரர்கள் கொள்வனவு செய்ய முடியும். அல்லது **03.09.2024 முதல் 15.10.2024 வரை பிற்பகல் 3.00 மணி வரை** வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள். (இலங்கை நேரம்) திருப்பிச் செலுத்தப்படாத கொள்முதல் கட்டணமாக ரூ. **10,250.00** மட்டும் அல்லது பரிமாற்றக்கூடிய நாணயப் பெறமதியில் அதற்கு சமமான தொகை.
6. விலைமனுக்கள் **16.10.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன் கீழே உள்ள முகவரிக்கு வழங்கப்பட வேண்டும்.

   **தலைவர்,**
   **திணைக்கள கொள்முதல் குழு (பாரிய)**
   **இலங்கை புகையிரத சேவைகள்**
   **புகையிரத கொள்முதல் உப திணைக்களம்**
   **ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**

தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். **16.10.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு,** அறை எண். 01, 3வது மாடி, புகையிரத கொள்முதல் துணைத் திணைக்களம், த.பெ.இல 1347, ஒல்கட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் மனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு (பாரிய)**
**இலங்கை புகையிரத சேவை.**
**மேற்கோள் இல. SRS/F.8051.**

SELACINE

## மன்னிப்பு கோருதல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட 10665/24ஆம் இலக்க வழக்கில் மருந்துத் துண்டு இன்றி போதை வஸ்துவிற்காக பயன்படுத்தப்படும் PREGABALIN வகையான 10 வில்லைகளை தம்வசம் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கௌரவ நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 10,000.00 ரூபா அபராதத் தொகையை செலுத்தி முடித்த எம்பிலிப்பிட்டிய, புதிய நகரம், தேவால பன்சல வீதி, 74/5ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் பத்திரனகே தொன் கிஹார தில்ருக்ஷ ஆகிய நான் இதன் பிறகு இவ்வாறான தவறைச் செய்யமாட்டேன் எனவும் ஏற்பட்ட தவறிற்கு இலங்கை குடியரசின் பொதுமக்களிடம் மன்னிப்பைக் கோருகின்றேன்.

இப்படிக்கு,

**பத்திரனகே தொன் கிஹார தில்ருக்ஷ**

## மன்னிப்பு கோருதல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட 10667/24 ஆம் இலக்க வழக்கில் மருந்துத் துண்டு இன்றி போதை வஸ்துவிற்காக பயன்படுத்தப்படும் PREGABALIN வகையான 10 வில்லைகளை தம்வசம் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கௌரவ நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 10,000.00 ரூபா அபராதத் தொகையை செலுத்தி முடித்த எம்பிலிப்பிட்டிய, புதிய நகரம், செஞ்சூரியா வீதி, 315ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் பத்திரனகே பதிரன விதானகே ஷெஹான் காவிந்த மதுஷங்க ஆகிய நான் இதன் பிறகு இவ்வாறான தவறைச் செய்யமாட்டேன் எனவும் ஏற்பட்ட தவறிற்கு இலங்கை குடியரசின் பொதுமக்களிடம் மன்னிப்பைக் கோருகின்றேன்.

இப்படிக்கு,

**பத்திரனகே பதிரன விதானகே ஷெஹான் காவிந்த மதுஷங்க**

## மன்னிப்பு கோருதல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட 10668/24ஆம் இலக்க வழக்கில் மருந்துத் துண்டு இன்றி போதை வஸ்துவிற்காக பயன்படுத்தப்படும் PREGABALIN வகையான 10 வில்லைகளை தம்வசம் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு கௌரவ நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 10,000.00 ரூபா அபராதத் தொகையை செலுத்தி முடித்த எம்பிலிப்பிட்டிய, கொத்தலாவல சந்தி, 314/46ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் லொகு தடல்லகே சானுக லக்ஷான் நிம்நத எனும் நான் இதன் பிறகு இவ்வாறான தவறைச் செய்யமாட்டேன் எனவும் ஏற்பட்ட தவறிற்கு இலங்கை குடியரசின் பொதுமக்களிடம் மன்னிப்பைக் கோருகின்றேன்.
இப்படிக்கு,

**லொகு தடல்லகே சானுக லக்ஷான் நிம்நத**

## ஜேர்மன் - இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை கராப்பிட்டி காலி சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்வதற்கு கேள்விமனுகோரல்

2024.10.01 ஆம் திகதி தொடக்கம் 2025.09.30 ஆம் திகதி வரை காலி, கராப்பிட்டி ஜெர்மன் - இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்வதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. மீளளிக்கப்படாத ரூபா 3,000 வைப்புத் தொகை விண்ணப்பப் படிவக் கட்டணமாக அறவிடப்படும். 2024.09.04 ஆம் திகதி தொடக்கம் 2024.09.24 ஆம் திகதி வரை (சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை) பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து மஹமோதர போதனா வைத்தியசாலை கணக்குப் பிரிவில் இருந்து கேள்விமனு விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. விலைமனு விண்ணப்பத்தை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024/2025ஆம் ஆண்டுக்காக சிற்றுண்டிச்சாலை சேவை வழங்கல்" என்று குறிப்பிட்டு 2024.09.25 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, ஜெர்மன் - இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை, கராப்பிட்டி, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
4. விலைமனு ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறாக இட்டு இரு உறைகளையும் ஒற்றை உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்களை ஏற்பது நிறைவடையும் 2024.09.25 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அந்த இடத்தில் அவை திறக்கப்படுவதோடு, விலைமனுதாரர் அல்லது பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு அனுமதி அளிக்கப்படும்.
6. அரசின் ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்றவர்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்படமாட்டாது.
7. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை மற்றும் கேள்விமனுவை சமர்ப்பிப்பது தொடர்பில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.
8. மேலதிக விபரங்களுக்கு ஜெர்மன் - இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை கணக்காளரை அழைக்கவும். 0912222261

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**ஜெர்மன் - இலங்கை நட்புறவு மகளிர் வைத்தியசாலை**
**கராப்பிட்டி, காலி**

## பெறுகை அறிவித்தல்

### கொபெய்கனே பிரதேச சபை

2025 வருடத்திற்காக கொபெய்கனே பிரதேச சபையின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக 2024.09.03 முதல் 2024.09.24 அன்று மு.ப 10.00 மணி வரை என்னால் விலைமனு பொறுப்பேற்கப்படுவதுடன், 2024.09.24 அன்று மு.ப 10.30 மணிக்கு விலைமனு திறக்கப்படும்.

விலைமனு விண்ணப்பங்களை 2024.09.03 அன்று முதல் 2024.09.23 திகதி வரை கொபெய்கனே பிரதேச சபை அலுவலகத்தில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப 01.00 மணி வரையான காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 037-2293076 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஏ.எஸ்.எம். பிரணாந்து, செயளாலர்,**
**பிரதேச சபை, கொபெய்கனே.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## கேள்விக்கான அழைப்பு

### சுகாதார அமைச்சு

### போதனா வைத்தியசாலை - பதுளை

பதுளை போதான வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | வேலை விடயம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை (ரூ) |
|---|---|---|---|
| TH/BD/FT/03/2024 | ஒதுக்கப்படும் உணவுக் கழிவுகளை கொள்வனவு செய்வதற்காக புதிய ஒப்பந்தக்காரரை நியமித்துக் கொள்ளல் 2024 / 2024 | 1150.00 | 25,000 |

02. தேசிய போட்டி கேள்வி முறைமை (NCB) இன் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

03. கேள்விதாரர்களுக்கு தேவையாயின் கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் பெறுகைப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். இதுபற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு - 1103) அல்லது கீழ்க்காணும் வைத்தியசாலை இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

04. தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு ஒரு கேள்விக்கு மீளளிக்கப்படாத மேலே குறிப்பிடப்படும் கேள்வி ஆவணக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் நண்பகல் 12 வரை வைத்தியசாலையின் காசாளர் பிரிவில் செலுத்திய பின்னர் 2024.09.03 முதல் 2024.09.21 வரை தேவைப்படும் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு, வேண்டுதல் கடிதத்துடன் கம்பனிகள் பதிவு சான்றிதழின் அல்லது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

06. சகல கேள்வி ஆவணங்களும் இரு பிரதிகளைக் கொண்டிருப்பதுடன் அப்பிரதிகள் மூலப்பிரதி (Original) மற்றும் நகல் பிரதி (Duplicate) என கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

07. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.09.23 மு.ப. 10.30 இற்கு முன் போதனா வைத்தியசாலை பதுளை இற்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றே மு.ப. 10.30 இற்கு பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பதுளை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, பதுளை**
**தொலைபேசி இலக்கம் - 0552222261** **பெக்ஸ் : 055-2231205**
**மின்னஞ்சல் : info@thbadulla.health.gov.lk** **இணையதளம் : www.thbadulla.health.gov.lk**
**2024.08.31**

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

### பெருந்தெருக்கள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வரும் செயற்றிட்டத்திற்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் (மேல் மாகாணம்) அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | அவசரச் செலவுகள் இன்றி பொறியிய லாளரின் மதிப்பீடு (ரூ. மில்) | CIDA தரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/PD(WP)/TEN/KAL/2024/02 | அலுத்கம நகரில் பக்க வடிகாலமைப்பு மற்றும் நடை பாதையை நிர்மாணித்தல் (CGHW Road (A2)/59+950-61+000) First Stage (60+640-61+000/LHS) | 23 | C6 மற்றும் C5 | 200,000.00 | 91 |

2. கொழும்பு மாவட்டத்தில் அலுத்கம நகரத்தில் பக்க வடிகாலமைப்பு மற்றும் நடை பாதையை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள ஸ்லெப் மூடிகளை அப்புறப்படுத்துதல், பூர்வாங்க வேலைகள் என்பவை இந்த வேலைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3. ''விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலமாக நடத்தப்படுவதுடன் மேற்கொள்ளப்படவுள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்குக் (VAT மற்றும் ஏனைய வரிகள் இன்றி) குறைவாக இருப்பதனால் 04/2016(iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்".
4. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்படும் வெற்றிகரமான விலைமனுதாரர் தற்போதைய நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) பெருந்தெருக்கள் துறையில் மேற்கூறிய அட்டவணையில் உள்ள தரத்தில் தற்போது பதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-09-03ஆம் திகதி முதல் www.rda.gov.lk எனும் மின்னஞ்சல் ஊடாக விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   அ. மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்ல. தொலைபேசி: 011-2863916 மற்றும் தொலைநகல்: 011-2887623.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 செப்டெம்பர் 18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு களுத்துறை வடக்கு, ஸ்ரீ சுமங்கள வீதி (தெற்கு), வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான பொறியியலாளர் (களுத்துறை) அலுவலகத்தில் இடம்பெறும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-09-03ஆம் திகதி முதல் 2024-09-23ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, இல. 36, உடுமுல்ல வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   ஒவ்வொரு விலைக்கோரல் ஆவணத்திற்கும் 4,130.00 ரூபா (VAT சகிதம்) மீளளிக்கப்படாத கேள்வி கட்டணத்தை பின்வரும் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் செலுத்தலாம்.

   **அ. கணக்கின் பெயர் : மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**
   **ஆ. கணக்கிலக்கம் : 2323372**
   **இ. வங்கியின் பெயர் : இலங்கை வங்கி, பத்தரமுல்ல**

   1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், சித்திகரமான கேள்விதாரர்கள் அல்லது முகவர்கள் மாத்திரம் கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
8. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2025 ஜனவரி 07ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2024 டிசம்பர் 10ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
10. இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, (மேல் மாகாணம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (மேல் மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்ல.**







# இலங்கை வங்கி

### ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

### ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதியை நீடித்தல்

### கேள்விப்பத்திர இல: P/PROC/2024/289

2024.08.14 ஆம் திகதியன்று "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட

இலங்கை வங்கியின் தற்போதுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட (ஒருங்கிணைந்த - நிகழ்நிலை) தகவற் தொழில்நுட்ப அமைப்பின் காப்புத் தீர்வினை விரிவாக்குதல்

அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதி **2024.09.11** அன்று **1000** மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இது தொடர்பாக ஈடுபாடுள்ள ஏலதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கின்றோம்.

விலைகூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், **2024.09.10** ஆம் திகதி வரை கடமை தினங்களில் **0900** மணி முதல் **1500** மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலவிலை பிணையானது **2025.01.08** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர்**
**சொத்துகளும் சேகரிப்பும் பகுதி**
14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4263, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

1975 BOC CALL CENTRE www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### 2024ஆம் வருடத்தின் இறுதி காலாண்டிற்காக சமைக்கப்படாத உணவுகளை கொள்வனவு செய்தல்

### பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் - புத்தளம்

2024-10-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு புத்தளம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் உள்ள புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு சமைக்கப்படாத உணவுகளை வழங்குவதற்கு தகைமை வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விலைமனுக்கள் மற்றும் ஏனைய விபரங்களை 2024-09-03ஆம் திகதி முதல் 2024-09-18ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. விலைக்கோரல் மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பிணை வைப்பு விபரங்கள்

| நிறுவனம் | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் வைப்பு (ரூபா) | செயலாற்றுகை பிணை முறி (ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | ரொக்கப் பணமானால் (ரூபா) | வங்கிப் பிணை முறியானால் (ரூபா) |
| ஆதார வைத்தியசாலை புத்தளம் | 1,000.00 | 60,000.00 | 300,000.00 | 600,000.00 |

3. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் கடிதத்துடன் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. 02 பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட உங்களின் விலைக்கோரல் விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய இயைபுடைய ஆவணங்களைத் தாங்கி வரும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சமைக்கப்படாத உணவு வழங்குதல் - 2024 இறுதிக் காலாண்டு'' எனக் குறிப்பிட்டு 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து இந்த அலுவலகத்தின் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (மேலதிக விபரங்களுக்கான மின்னஞ்சல்: rdhs.puttalam.acc@gmail.com - தொலைபேசி: 032-2248855)

5. 2024-09-19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

6. இந்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**புத்தளம்.**

---

### மாநகர சபை குருநாகல்

## பெறுகை அறிவித்தல்

குருநாகல் மாநகர சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் விடயங்களுக்கான கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | பெயர் | குத்தகை காலம் (வருடம்) | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூ | குறைந்தபட்ச கேள்வி ரூ |
|---|---|---|---|---|---|
| 01 | போதிராஜ மாவத்த லேக் ஸ்டியோ நிறுவனத்துடன் இணைந்த பொது மலசலகூடம் அமைந்திருந்த காணியை தற்காலிக வியாபாரத்திற்காக குத்தகைக்கு விடல் | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 100,000.00 (மாதாந்தம்) |
| 02 | குருநாகல் வாவியில் சூரிய சக்தி பாவனையில் செயற்படும் வள்ளம் சேவை (02 வள்ளங்களுக்கு) இதற்னாக கேள்வி கோரல் | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 150,000.00 (மாதாந்தம்) |

| பெயர் | சதுர அடி அளவு | குத்தகை காலம் (வருடம்) | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூ | குறைந்த பட்ச கேள்வி (வெட் இன்றி) |
|---|---|---|---|---|---|
| MC PLAZA கடை அறை இல 01 - குத்தகைக்கு விடல் - தரை மாடி | 154.42 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 6,176,800.00 |
| MC PLAZA கடை அறை இல 02 - குத்தகைக்கு விடல் - தரை மாடி | 179.97 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 7,198,800.00 |
| ரஜபிஹில்ல பூங்கா உணவக கடை அறை இல 01 குத்தகைக்கு விடல் | 118.5 | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 100,000.00 (மாதாந்தம் வாடகை) |
| ரஜபிஹில்ல பூங்கா உணவக கடை அறை இல 02 குத்தகைக்கு விடல் | 118.5 | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 100,000.00 (மாதாந்தம் வாடகை) |
| மாளிகாபிட்டி பார்வையாளர் அரங்கு கிளை பாதை கடை அறை இல 01 குத்தகைக்கு விடல் | 283.60 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 4,260,000.00 |
| மாளிகாபிட்டி பார்வையாளர் அரங்கு கிளை பாதை கடை அறை இல 01 குத்தகைக்கு விடல் | 389.04 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 5,835,000.00 |

மேற்படி கேள்வி கோரலுக்காக கேள்வி ஆவணங்களை 2024.09.03 முதல் 2024.09.18 பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் குருநாகல் மாநகர சபை கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். உங்களது பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.09.19 பி.ப. 2.00 இற்கு முன்பு "மாநாகர ஆணையாளர், மாநகர சபை, குருநாகல் என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதம மாநகர கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். 2024.09.19 பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அதற்காக நீங்கள் நிறுவனத்தின் அதிகாரியொருவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**விபரங்களுக்கு**
**தொ.பே. இல : 037-4941869**
**மின்னஞ்சல் : ginumviyadam@gmail.com**
**பெக்ஸ் : 037 2228136**

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**குருநாகல்**
**2024.09.03**

# தொடரை இழந்த இலங்கைக்கு டெஸ்ட் சம்பியன்சிப்பில் சரிவு



இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 190 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 0–2 என இழந்ததோடு உலக டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலிலும் பின்னடைவை சந்தித்துள்ளது.

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று முன்தினம் 483 ஓட்ட வெற்றி இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை 86.4 ஓவர்களில் 292 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஆரம்ப வீரர் திமுத் கருணாரத்னவுடன் (55) மத்திய வரிசையில் தினேஷ் சந்திமால் (58) மற்றும் தனஞ்சய டி சில்வா (50) அரைச் சதம் பெற்றபோதும் இலங்கை அணியால் தோல்வியை தவிர்க்க முடியவில்லை. முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தில் சதம் பெற்ற கட் அட்கின்ஸன் பந்துவீச்சில் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

முன்னதாக இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 427 ஓட்டங்களை பெற்றதோடு இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் 196 ஓட்டங்களையே சேர்த்தது. தொடர்ந்து இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் 251 ஓட்டங்களை பெற்று இலங்கைக்கு சவாலான வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

கடந்த 2002 இற்குப் பின்னர் லோட்ஸில் இலங்கை அணி சந்திக்கும் முதல் தோல்வி இதுவாகும். இதற்கு முன்னர் இங்கு ஆடிய ஐந்து போட்டிகளை இலங்கை சமநிலையில் முடித்தது.

எனினும் 2016 லோட்ஸ் டெஸ்டை சமன் செய்த பின்னர் இங்கிலாந்து அணி இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக பெறும் ஏழாவது வெற்றி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தோல்வியை அடுத்து ஐ.சி.சி. உலக டெஸ்ட் புள்ளிப்பட்டியலில் இலங்கையின் 40 புள்ளி வீதம் 33.33 ஆக சரிவை சந்தித்து தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷுக்குப் பின்னால் ஏழாவது இடத்துக்கு பின் தங்கியுள்ளது. இதில் இங்கிலாந்து தொடர்ந்தும் நான்காவது இடத்தில் உள்ளது. இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (06) ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

## நுவனுக்கு 5ஆம் இடம்



பாரிஸில் நடைபெற்று வரும் பாராலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் டீ44 பிரிவில் இறுதிப் போட்டியில் பங்கேற்ற இலங்கையின் நுவன் இந்திக்க தனது சிறந்த காலத்தை பதிவு செய்தபோதும் ஐந்தாவது இடத்தையே பெற்றார்.

நேற்று முன்தினம் (01) நடைபெற்ற போட்டியில் இந்திக்க 11.67 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்தார். எனினும் அவர் போட்டியில் 5ஆவது இடத்தையே பெற்றார். இதில் தென்னாபிரிக்காவின் எம். மங்லொங்கே 11.12 விநாடிகளில் போட்டியை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றதோடு கியுபாவின் வை.விவஸ் (11.20 விநாடி) வெள்ளிப் பதக்கத்தையும், மலேசியாவின் ஈ. பெர்னாட் (11.58 விநாடி) வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இதேவேளை பாராலிம்பிக் போட்டியில் இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பான ஈட்டி எறிதல் வீரர் சமித் துலான் ஆண்களுக்கான எப்44 ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் இலங்கை நேரப்படி நேற்று இரவு பங்கேற்கவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. துலான் கடந்த முறை டோக்கியோவில் நடந்த பாராலிம்பிக்கில் இலக்காக வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.



## சர்வதேச செய்திகள்

# நெதன்யாகு அரசுக்கு எதிராக இஸ்ரேலில் பாரிய ஆர்ப்பாட்டம், பொது வேலைநிறுத்தம்

### காசா தாக்குதல், ஜெனின் முற்றுகை தொடர்ந்து நீடிப்பு

காசாவில் இருந்து பணயக்கைதிகள் சடலமாக மீட்கப்பட்டதை அடுத்து இஸ்ரேலிய அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் மற்றும் பொது வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சூழலில் காசாவில் 332 ஆவது நாளாகவும் இஸ்ரேல் நேற்று (02) சரமாரி தாக்குதல்களை நடத்தியதோடு மேற்குக் கரையின் ஜெனின் நகரில் ஆறாவது நாளாக இஸ்ரேலின் முற்றுகை நீடித்தது.

காசாவில் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றை உடன் செய்து கொள்வதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நேற்று இஸ்ரேலில் தேசிய அளவில் வேலை நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது.

இஸ்ரேலின் பலம்மிக்க தொழில் சங்கமான ஹிஸ்டார்டட் இந்த வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

இதனால் டெல் அவிவில் உள்ள பரபரப்பான பென்கூரியன் விமானநிலையத்தில் விமான போக்குவரத்துகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதோடு, ரயில் மற்றும் ஏனைய போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு காசாவில் சுரங்கப்பாதை ஒன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை ஆறு இஸ்ரேலிய பணயக்கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், அவர்களை இஸ்ரேலியப் படை அணுகுவதற்கு முன்னர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

இந்த சம்பவம் இஸ்ரேலில் அந்நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசு மீதான கோபத்தை அதிகரித்துள்ளது. பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஹமாஸ் அமைப்புடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதில் நெதன்யாகு இடையூறாக செயற்பட்டு வருவதாக பணயக்கைதிகளின் உறவினர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிறு இரவு பல நகரங்களிலும் ஆயிரக்கணக்கானோர் திரண்டு பாரிய ஆர்ப்பட்டங்களை நடத்தினர். ஹமாஸ் அமைப்புடன் போர் நிறுத்தம் ஒன்றை செய்து பணயக்கைதிகளை விடுவிக்குமாறு கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள், 'இப்போதே! இப்போதே!' என்று கோசம் எழுப்பினர்.

டெல் அவிவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பல வீதிகளையும் முடக்கியதோடு மேற்கு ஜெரூசலத்தில் நெதன்யாகுவின் அலுவலகத்திற்கு வெளியிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் பெரும்பாலும் அமைதியாக இடம்பெற்றபோதும் ஆங்காங்கே பொலிஸாருடன் மோதல்களும் ஏற்பட்டுள்ளன. டெல் அவிவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏழு இலட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றிருப்பதாக கூறப்படுகிறது. நேற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பல நகரங்களில் ஒன்று திரண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின்போது 250 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இவர்களில் தொடர்ந்து 100க்கும் அதிகமானவர்கள் உயிருடன் அல்லது மரணித்த நிலையில் ஹமாஸ் பிடியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

#### வாழ்வா சாவா திட்டம்

காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தைகள் கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் கடந்த பல மாதங்களாக விட்டுவிட்டு இடம்பெற்றபோதும் இதுவரை எந்த முன்னேற்றம் காணப்படவில்லை. கடைசியாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்வைத்த போர் நிறுத்தத் திட்டத்தில் இஸ்ரேல் புதிய நிபந்தனைகளை கொண்டுவந்ததால் உடன்பாடு ஒன்றை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

'இஸ்ரேலிய பணயக்கைதிகள் கொல்லப்பட்டதற்கு நெதன்யாகுவே பொறுப்பேற்க வேண்டும். நெதன்யாகு மற்றும் உடன்படிக்கை இரண்டில் ஒன்றை இஸ்ரேலியர்கள் தேர்வு



செய்ய வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் காசாவின் எகிப்து எல்லையான பிலடெல்பியா மற்றும் வடக்கு மற்றும் தெற்கு காசாவை பிரிக்கும் நெட்சரிம் தாழ்வாரங்களில் இஸ்ரேல் தொடர்ந்து நிலைகொள்வதில் உறுதியாக இருப்பது தற்போது பேச்சுவார்த்தையில் ஏற்பட்டிருக்கு இழுபறிக்கு காரணமாகும்.

எனினும் காசாவில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வாபஸ் பெறாதவரை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்போவதில்லை என்று கட்டாரைத் தளமாகக் கொண்ட ஹமாஸ் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் கலீல் அல் ஹய்யா கடந்த ஞாயிற்றுக்கிழமை அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு மீண்டும் ஒருமுறை உறுதி செய்தார்.

பணயக்கைதிகளின் மரணத்திற்கு இஸ்ரேல் போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாததே காரணம் என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே உடன்படிக்கை ஒன்றை எட்டுவது அல்லது கைவிடுவதற்காக இறுதியான திட்டம் ஒன்றை இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு வழங்க அமெரிக்கா, மத்தியஸ்தத்தில் ஈடுபடும் எகிப்து மற்றும் கட்டாருடம் ஆலோசித்து வருவதாக வொசிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பைடன் நிர்வாகத்தின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டியே அமெரிக்க பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை ஏற்க இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தவறினால், அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தை முயற்சியின் முடிவாக இது அமையும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

'இப்படி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது. ஒரு கட்டத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று அந்த அதிகாரி குறிப்பிட்டதாக வொசிங்டன் போஸ்ட் தெரிவித்தது.

#### முடியாத ஜெனின் முற்றுகை

காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்காக தற்காலிக போர் நிறுத்தம் கடைப்பிக்கப்பட்டு வருகின்றபோதும் அங்கு தொடர்ந்து மோதல்கள் மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடித்து வருகின்றன.

மத்திய காசாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட 10 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தில் முதல் நாளில் 87,000 சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் தெரிவித்தது.

இந்நிலையில் இரண்டாவது நாளாக நேற்றும் தடுப்பு மருந்துகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தடுப்பு மருந்து வழங்கும் பகுதிகளில் காலை முதல் மாலை வரை மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிப்பட்டபோதும் ஏனைய பகுதிகளில் மோதல் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாமில் இருந்து வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

பொதுமக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றொரு பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்து 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரில் உள்ள சபாத் பாடசாலை மீது கடந்த ஞாயிறன்று இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

'இஸ்ரேலிய குண்டுவீச்சின் தீவிரம் காரணமாக உடல்கள் சிதறிக் காணப்படுகின்றன' என்று பார்த்தவர்கள் அனடொலு செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

காசாவில் 11 மாதங்களை நெருக்கும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 40,700 ஐ தாண்டி இருப்பதோடு மேலும் 94,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

காசா போருக்கு மத்தியில் மேற்குக் கரையிலும் இஸ்ரேலியப் படை 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் ஜெனின் நகரில் இஸ்ரேலின் முற்றுகை தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதன்போது அங்குள்ள பலஸ்தீன போராளிகளுடன் மோதல்களும் இடம்பெற்று வருகின்றன.

அங்கு வீடு வீடாக சோதனை செய்து வரும் இஸ்ரேலியப் படை வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை புல்டோசர் கொண்டு அழித்து வருகிறது. கடந்த புதன்கிழமை மேற்குக் கரையில் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இதுவரை 29 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதில் ஜெனினில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு துல்கர்ம் மற்றும் டுவாஸில் தலா நால்வரும் ஹெப்ரோனில் மூவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் பதற்றம் நீடிப்பதோடு இந்தக் காலப்பகுதியில் குறைந்து 681 பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய இராணுவம் மற்றும் குடியேறிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 154 சிறுவர்கள், 11 பெண்கள் மற்றும் இஸ்ரேலிய தடுப்புக்காவலில் இருந்த 24 பலஸ்தீன கைதிகளும் அடங்குவர்.

அதேபோன்று 5,600க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் காயமடைந்திருப்பதோடு குறைந்தது 10,400 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ரஷ்யாவின் உளவு திமிங்கிலம் இறந்த நிலையில் கண்டுபிடிப்பு



உளவு பார்ப்பதற்காக ரஷ்யாவால் பயிற்சி அளிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட திமிங்கிலம் நோர்வேயில் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹிவல்டிமிர் என்று அழைக்கப்பட்ட அந்த பெலுகா வகைத் திமிங்கிலம் முதன்முறையாக 2019ஆம் ஆண்டு நோர்வேயில் கரைக்கு அப்பால் கண்டறியப்பட்டது. அப்போது அதில் விசித்திரமான கருவி பொருத்தப்பட்டிருந்தது. அதில் 'செயின்ட் பீட்டர்ஸ்பர்க் கருவி' என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தத் திமிங்கிலம் தப்பியிருக்கலாம் என்றும் அதற்கு ரஷ்யக் கடற்படை பயிற்சி அளித்திருக்கலாம் என்றும் நோர்வே அதிகாரிகள் கூறினர்.

இந்த நிலையில் இந்தத் திமிங்கிலத்தின் நடவடிக்கைகளை பல ஆண்டுகளாக கண்காணித்து வந்த மரின் மைட் அமைப்பு கடந்த சனிக்கிழமை (31) திமிங்கிலத்தின் உடலை கண்டுபிடித்துள்ளது. அது எதனால் இறந்தது என்பது தெரியவில்லை. அதன் உடலில் எந்தக் காயங்களும் தென்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அதற்குச் சுமார் 15 வயதுதான் இருக்கும் என்று கணிக்கப்பட்டது.

## தற்கொலை செய்ய பாதசாரி மீது குதித்து இருவரும் பலி



ஜப்பானின் யொகொஹாமா நகரில் பெண் ஒருவர் தற்கொலை செய்வதற்காக உயர்ந்த கட்டடம் ஒன்றில் இருந்து குதித்தபோது பாதசாரி மீது விழுந்து அந்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

பாடசாலை மாணவியான 17 வயதுப் பெண் கூட்ட நெரிசல் மிக்க வர்த்தக மைய கட்டடம் ஒன்றில் இருந்து குதித்தபோது, தமது நண்பிகளுடன் வீதியில் சென்றுகொண்டிருந்த 32 வயது பெண் மீது விழுந்துள்ளார். கடந்த சனிக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருவரும் மருத்துவமனைக்கு உடன் அழைத்துச் செய்யப்பட்டபோதும் அவர்கள் உயிர்தப்பவில்லை. இதே போன்று 2020 ஆம் ஆண்டு ஜப்பானில் 17 வயது இளைஞர் ஒருவர் தற்கொலை செய்ய மாடியில் இருந்து குதித்தபோதும் 19 வயது மாணவி ஒருவர் மீது விழுந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கும் செப்டெம்பர் 1 ஆம் திகதிக்கு வேறு எந்த நாட்களை விடவும் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஆண்டில் பாடசாலை பிரச்சினைகளுடன் தொடர்புபட்டு ஜப்பானில் 513 சிறுவர்கள் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

## பாக். தலிபான் குழுக்களுக்கு இடையில் மோதல்: ஐவர் பலி



பாகிஸ்தான் தலிபானின் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கடும் மோதலில் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் ஐவர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோத தலிபானின் கண்டபுர் மற்றும் மர்வட் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலிலேயே இந்த ஐவர் பலியாகியுள்ளனர்.

வங்கிகளுக்கு வேன்களில் எடுத்துச் செல்லும் பணத்தை கொள்ளையடித்து பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இம்மோதலுக்கு காரணமாக அமைந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்தோடு இம்மோதலில் பயங்கரவாத செயற்பாடுகள் பலவற்றுடன் சம்பந்தப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த இருவர்; கொல்லப்பட்டதாக பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் குழுக்களின் சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவென நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2025ஆம் வருடத்திற்கான மருந்துகளை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை விபரங்கள் | | விலை மனுக்கள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| Q106(25DR)/24 | **Drugs used in the treatment of Infections – 1** (Azithromycin 500mg tab. ,Cefixime 200mg tab. , Cefuroxime 500mg tab. , Clarithromycin 250mg tab. , Clarithromycin 500mg tab. , Clindamycin 300mg caps.) | Lot | |
| Q107(25DR)/24 | **Drugs used in the treatment of Infections – 2** (Ciprofloxacin 250mg tab. , Ciprofloxacin 500mg tab. , Co - Amoxyclave 625mg tab. , Doxycycline 100mg caps. , Erythromycin 250mg tab. , Levofloxacin 500mg tab.) | Lot | |
| Q108(25DR)/24 | **Drugs used in the treatment of Infections – 3** (Aciclovir 250mg inj. , Amikacin 500mg inj. ,Clarithromycin 500mg inj. , Gentamicin Sulphate 80mg / 2ml inj.) | Lot | |
| Q109(25DR)/24 | **Drugs used in the treatment of Infections – 4** (Ciprofloxacin 200mg / 100ml inj. , Clindamycin 300mg inj. , Levofloxacin 500mg inj. , Vancomycin 500mg inj.) | Lot | |
| Q110(25DR)/24 | **Drugs used in the treatment of Infections – 9** (Colistimethate Sodium 1 MU inj.) | Lot | |
| Q111(25DR)/24 | **Accessories for Diagnostic Instruments -1** (Blood Glucose Monitor Test Strips for Adults) | Lot | 19.09.2024 |
| Q112(25DR)/24 | **Accessories for Diagnostic Instruments -2** (Blood Glucose Monitor Test Strips for Neonates) | Lot | |
| Q113(25DR)/24 | **Drugs Affecting Nutrition & Blood – 1** (Ascorbic Acid (Vit. C) 100mg Tab. , Calcium Carbonate Chewable 500mg Tab. , Ferrous Fumarate + Zs04 + Folic Acid + Vit B12 Cap. , Multi vitamin + Zinc + Mineral - Tab. , Oral Rehydration Salt (Jeevanee) - 1L , Sodium bicarbonate 600mg Tab. , Tocopherol Acetate (Vitamin E) 200mg Cap. , Vitamin B1 + Vitamin B6 + Vitamin B12 Tab. , Vitamin D 1000IU Tab. , Vitamin D 2000IU Tab.) | Lot | |
| Q114(25DR)/24 | **Drugs Affecting Nutrition & Blood – 2** (Calcium Gluconate 10% - 10ml inj. , Potassium Chloride 14% - 10ml inj. , Magnesium Sulphate 50% - 10ml inj. , Total Parenteral Nutrient Emulsion for injection , Iron Sucrose 100mg / 5ml inj.) | Lot | |
| Q115(25DR)/24 | **Drugs Affecting Nutrition & Blood – 3** (Dextrose 25% - 25ml inj. , Dextrose 50% - 50ml inj. , Thiamine 100mg / 1ml inj. , Sodium Bicarbonate 8.4% - 50ml inj. , Vitamin B12 - 10ml inj.) | Lot | |
| Q116(25DR)/24 | **Drugs Acting on the Eye** (Balanced Salt Solution (bag) - 500ml, Balanced Salt Solution (bottle) - 500ml , Fluorescein Sodium 10% - 5ml inj. , Methylcellulose Visco Elastic Solution - 3ml , Phenylephrine &Tropicamide Eye Drops - 5ml) | Lot | |
| Q117(25DR)/24 | **Antidotes** (Acetylcysteine 2g/10ml inj. ,Flumazenil Anexate 0.5mg/5ml inj. , Anti SnakeVenoum Serum 10ml inj.) | Lot | |
| Q118(25DR)/24 | **Drugs used in the treatment of Musculoskeletal System & Joint Diseases – 1** (Allopurinol 100mg tab. , Celecoxib 200mg caps. , Mefenamic Acid 500mg tab. , Diclofenac Sodium Suppositories 50mg , Methyprednisolone 40mg inj.) | Lot | |
| Q119(25DR)/24 | **Drugs used in the treatment of Urinary Tract Disorders & Gastrointestinal System** (Tamsulosin 0.4mg Caps. , Finasteride 5mg Tab. , Domperidone 10mg Tab. , Esomeprazole 20mg Tab. ,Esomeprazole 40mg Tab. , Mosapride 5mg Tab. , Pantoprazole 20mg Tab. , Pantoprazole 40mg Tab.) | Lot | |
| Q120(25DR)/24 | **Drugs used in the treatment of Cardiovascular System – 1** (Adenosine 6mg/2ml inj. ,Amiodarone HCL 150mg/3ml inj. , Isoprenaline HCL 2mg/1ml inj.) | Lot | 19.09.2024 |
| Q121(25DR)/24 | **Drugs used in the treatment of Cardiovascular System – 2** (Milrinone Lactate 10mg / 10ml inj. ,Papavarin HCL 60mg inj. , Phenylephrine 10mg / ml inj. , Sodium Nitroprusside 50mg inj. , Vasopressin 20IU/1ml inj.) | Lot | |
| Q122(25DR)/24 | **Drugs used in the treatment of Central Nervous System – 2** (Haloperidol 5mg/1ml inj. , Levetitacetam 500mg inj. , Paracetamol 10mg / ml - 100ml inj.) | Lot | |
| Q123(25DR)/24 | **Drugs used in the treatment of Central Nervous System – 3** (Ondansetrone 2mg/1ml inj. - 4ml) | Lot | |
| Q124(25DR)/24 | **Drugs used in the treatment of Gastrointestinal System – 2** (Lactulose syrup - 120ml , Liquid Paraffin with Magnesium Hydroxide Syrup - 225ml , Sodium Alginate + Sodium Bicarbonate + Calcium Carbonate Syrup - 200ml) | Lot | |
| Q125(25DR)/24 | **Drugs used in Anesthesia – 4** (Propofol 1% 200mg /20ml inj. , Propofol 1% 500mg /50ml inj.) | Lot | |

முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை வைத்தியசாலையின் வழங்கல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது பின்வரும் இணையதள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இணைப்பு: https://sjgh.health.gov.lk/tenders.php. மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலையின் வழங்கல்கள் அதிகாரி - மருத்துவம் அவர்களைத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 0112778624, 0112778610 - நீடிப்பு 3143

02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களில் மற்றும் தரப்பட்டுள்ள விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம் அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் மேற்கூறிய திகதியில் மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



# சுகாதார அமைச்சு

## Supply, Delivery, Installation, Commissioning & Maintenance of 05 Nos. C-Arm X-ray Machines

### ஒப்பந்த இல. BES/PG/Plan/2024/10

1. கீழே குறிப்பிடப்பட்ட மருத்துவ சாதனங்களின் வழங்கலுக்கான முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடியிலுள்ள சுகாதார அமைச்சின் பெறுகைக் குழு **"A"** தலைவரினால் கீழே தரப்பட்டுள்ள முடிவுறுத்தல் திகதியில் மு.ப. 10.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | உருப்படி | கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி | | முடிவுறுத்தல் திகதி | MOH அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) (மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | | |
| 1 | 05 Nos. C-Arm X-ray Machines | 2024-09-03 | 2024-09-23 | 2024-09-24 | 35,000.00 | 370 |

2. இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏகநியமனம் பெற்ற பிரதிநிதியாக/ அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலைகூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

3. முத்திரை பொறிக்கப்பட்ட முழுமையான நகல் பிரதி சகிதம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) எந்தவொரு ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

(தொ. இல. 011-2112713, 2112715 - தொலைநகல்: 011-2112745)

4. கேள்வியின் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் கொழும்பு - 10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும்.

5. கேள்வி ஆவணங்களை கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. சகல கேள்விதாரர்களினாலும் 5,550,000.00 ரூபாவிற்கான கேள்விப் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பிணை முறியானது முடிவுறுத்தல் திகதியிலிருந்து 2025-01-20ஆம் திகதி (119 நாட்கள்) வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது கொழும்பு-10, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, சுகாதார அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 011-2112713.

8. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-09-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், சுகாதார அமைச்சு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் / DDG அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்வனவுக் குழு "A"**
**சுகாதார அமைச்சு,**
**02ஆம் மாடி, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### மருந்துகளை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகளை வழங்குவதற்காக 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|---|
| Q101(25DR)/24 | **Drugs used in the treatment of Infections - 6** (Ceftriaxone 1g inj. , Cefuroxime 750mg inj.) | Lot | 3500.00 | |
| Q102(25DR)/24 | **Drugs used in the treatment of Infections - 7** (Teicoplanin 200mg inj. , Teicoplanin 400mg inj.) | Lot | 3500.00 | |
| Q103(25DR)/24 | **Drugs used in the treatment of Infections - 8** (Amoxicillin & Clavulanic Acid 1.2g inj.) | Lot | 3500.00 | |
| Q104(25DR)/24 | **Drugs used in the treatment of Infections - 11** (Piperacillin With Tazobactum 4.5g inj.) | Lot | 3500.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான ஒரு விண்ணப்பம்

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தல்

(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் ஒரு புகைப்படப்பிரதி

02. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2024-09-04ஆம் திகதி முதல் 2024-09-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**மேலதிக தகவல் : தொடர்பிலக்கம்: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு 3141**

**தொலைநகல்: 011-2778624**

**மின்னஞ்சல்: somedical@sjghsrilanka.lk**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**




வாரமஞ்சரி

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Katargama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT





Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want







- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368

E-mail adzsuo@gmail.com

# கேள்வி அறிவித்தல் - 2025

## பிரதேச சபை – அங்குணகொலபெலஸ்ஸ

அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபைக்கு சொந்தமான கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலத்தில் வரி அறவிடும் உரிமை, அறுவடையை பெறும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் என்னால் ஏற்கப்படும்.

| வரிசை இல. | விபரம் | குறைந்தபட்ச விலைமனு ரூபா சதம் | கேள்விமனு படிவக் கட்டணம் ரூபா சதம் | கேள்விமனு பிணை தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | அங்குணகொலபெலஸ்ஸ பொதுச் சந்தை | 9,555,945.00 | 5,000.00 | 50,000.00 |
| 02 | அங்குணகொலபெலஸ்ஸ மீன் கடை | 2,068,500.00 | 2,000.00 | 30,000.00 |
| 03 | தெபொக்காவ வாரச் சந்தை | 645,750.00 | 2,000.00 | 25,000.00 |
| 04 | அங்குணகொலபெலஸ்ஸ நகருக்கு வரும் சுற்றுலா வர்த்தக வாகனங்களிடம் இருந்து வரி அறவிடுதல் | 393,750.00 | 1,000.00 | 10,000.00 |
| 05 | அங்குணகொலபெலஸ்ஸ பொது கழிப்பறை | 26,355.00 | 250.00 | 1,000.00 |
| 06 | தலாவ நூலக காணியில் தெங்கு அறுவடை | 3,202.50 | 100.00 | 500.00 |
| 07 | கசாகல நூலகக் காணியில் தெங்கு அறுவடை | 2,362.76 | 100.00 | 500.00 |

கேள்விமனு வழங்கல் :-2024.09.04 அன்று மு.ப. 10.00 தொடக்கம் 2024.09.18 அன்று பி.ப. 03.00 வரை

கேள்விமனுக்களை ஏற்பது :-2024.09.19 அன்று மு.ப. 10.30 வரை

கேள்விமனுக்களை திறப்பது :-2024.09.19 அன்று மு.ப. 11.00

கேள்விமனுக்களை பெறுவது

I. வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளல் அல்லது

II. கேள்விமனு படிவக் கட்டணம் மற்றும் கேள்விமனு பிணை தொகை இரண்டினதும் பெறுமதியைக் கொண்ட காசுக் கட்டளை ஒன்றை (Money Order) அங்குணகொலபெலஸ்ஸ தபால் அலுவலகத்தில் மாற்ற முடியுமான வகையில் “செயலாளர், அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபை” பெயருக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு**

**தொலைபேசி இலக்கம் :- 047-2228275**
**தொலைநகல் :- 047-2229022**
**இணையதளம் :- www.angunakolapelessa.ps.gov.lk**
**மின்னஞ்சல் :- angupelessaps@gmail.com**
**Facebook :- Angunakolapelessa pradeshiya sabawa**

**2024.09.02 ஆம் திகதி அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபை அலுவலகத்தில்.**

**செயலாளர்,**
**அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச சபை.**

# பெறுகை அறிவித்தல்

## கல்பிட்டிய பிரதேச சபை

மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல் சம்பந்தமாக (Container Box) கல்பிட்டிய பிரதேச சபையினால் 2024.08.08ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் காலம் நீடிக்கப்படுகிறது.

அதன் பிரகாரம், கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.09.12 பி.ப. 12.30 வரை இடம்பெறுவதுடன், அன்றே பி.ப. 1.00 இற்கு பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு**

01. வழங்கல் அதிகாரி - 077-9743694
02. தொழில்நுட்ப அதிகாரி - 074-3590886
03. அலுவலகம் - 032-2260274/5
04. மின்னஞ்சல் - kalpitiyaps@gmail.com

**மங்கள ராமநாயக்க**
**செயலாளர்**
**கல்பிட்டிய பிரதேச சபை**
**2024.08.30**


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
## இலங்கை மதுவரித் திணைக்களம்

# கேள்விமனுக்கோரல் - (IFB)

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 60 மேசைக் கணினிகளையும் (DESKTOP COMPUTERS) 46 தடையற்ற மின் வழங்கல்களையும் (UPS) வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை**

1. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சார்பில், திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் தேசிய போட்டிக் கேள்விமனு நடைமுறையைப் பயன்படுத்தி இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு 60 மேசைக் கணினிகளையும் (DESKTOP COMPUTERS) 46 தடையற்ற மின் வழங்கல்களையும் (UPS) வழங்குவதற்கும் நிறுவுவதற்குமான பெறுகை அறிவித்தலுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன. தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் கேள்விமனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான கேள்வி மனுதாரர்கள் இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் **அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்கீட்டுப் பிரிவின் பிரதம கணக்காளரிடமிருந்து** மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், கேள்விமனுக்கோரல் ஆவணங்களை **2024.09.03** ஆம் திகதி முதல் வார நாட்களில் (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை) பார்வையிடலாம். தொலைபேசி இலக்கம் : **011-2045073**

3. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், **வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன்** மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துமூல வேண்டுகோளொன்றை **2024 செப்ரெம்பர் 23 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்து **இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 4 ஆம் மாடியில் உள்ள கணக்கீட்டுப் பிரிவிற்கு** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா ஏழாயிரத்து ஐநூறு (ரூ.7,500/-)** இனைச் செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. **2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு** இல.353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தில் **கேள்விமனுவுக்கு முந்தைய கூட்டம்** நடைபெறும்.

5. அனைத்து கேள்விமனுதாரர்களும் தங்களுடைய கேள்விமனுக்களை அசல் மற்றும் நகல் பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் ஒவ்வொன்றிலும் கையொப்பமிடப்பட்டு **“அசல் மற்றும் நகல்”** பிரதிகளை வெவ்வேறாக குறிப்பிட்டு தனித்தனியான கடித உறைகளில் இட வேண்டும். பின்னர் அவற்றை இன்னொரு கடித உறையிலிட்டு திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு **2024.09.24** ஆம் திகதி **மு.ப. 10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இத்திணைக்களத்தை வந்தடையக் கூடிய விதத்தில் அனுப்ப வேண்டும். அல்லது இல 353, கோட்டை வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள மதுவரி திணைக்களத்தின் நான்காம் மாடியிலுள்ள கணக்குப் பிரிவில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுக்கள் சேகரிக்கும் பெட்டியில் **2024.09.24 ஆம் திகதி மு.ப. 10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இட வேண்டும்.
தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். வேறு முறைகளில் அல்லது இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. மனுதாரர்கள் அனைத்து தொகுதியிலும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியில் விண்ணப்பிக்க முடியும், இருப்பினும் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி மனுப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

7. அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வங்கி உத்தரவாத படிவத்தின் வடிவிலான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான **“மனுப்பாதுகாப்புடன்”** அனுப்பப்பட வேண்டும். மனுப்பாதுகாப்பானது கேள்விமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருக்க வேண்டும். **(2025.01.21 வரை)**

| தொகுதி இல | விடயம் | மனுப்பாதுகாப்பு தொகை (ரூ) |
|---|---|---|
| A | 60 மேசைக் கணினிகள் | 300,000.00 |
| B | 46 தடையற்ற மின் வழங்கல்கள் (UPS) | 15,000.00 |

8. கேள்விமனுக்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதியிலிருந்து **91** நாட்களிற்கு செல்லுபடியானதாக வேண்டும். **(2024.12.24 வரை)**

9. கேள்விமனுக்கள், அவற்றை சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடைந்தவுடனேயே மேலே பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்கள் மற்றும்/அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. கேள்விமனுக்களை தயாரிப்பது அல்லது வழங்குவது தொடர்பாக மனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல 353, கோட்டை வீதி, இராஜகிரிய.**
**2024.09.03**


SELACINE


CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் (வடமத்திய மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

**CASP** - வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் **2024/2025** மகா நுண் நீர்ப்பாசன முறைமைக்காக 15 எண்ணிக்கையான 1 **AC** தெளிக்கும் நீர்ப்பாசன முறைமை (லொட் 1), 50 எண்ணிக்கையான மரக்கறி/ மிளகாய்க்கான உரமிடுதல் சகிதமான 1/4 சொட்டு நீர்ப்பாசன முறைமை (லொட் 2), 50 எண்ணிக்கையான **Rain Hose** முறைமைகளின் பெறுகை.
ஒப்பந்த இலக்கம்: **LK-MOA-432258-GO-RFB-NCP**

| வேலையின் விபரம் | விலைக்கோரல் பிணை முறியின் தொகை மற்றும் செல்லுபடித் திகதி | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|
| (லொட் 1) CASP - வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா நுண் நீர்ப்பாசன முறைமைக்காக 15 எண்ணிக்கையான 1 AC தெளிக்கும் நீர்ப்பாசன முறைமையின் பெறுகை | ரூபா 90,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | ரூபா 5000.00 |
| (லொட் 2) CASP - வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா நுண் நீர்ப்பாசன முறைமைக்காக 50 எண்ணிக்கையான மரக்கறி/ மிளகாய்க்கான உரமிடுதல் சகிதமான 1/4 சொட்டு நீர்ப்பாசன முறைமையின் பெறுகை | ரூபா 200,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | |

வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா Agronomic Interventions திட்டத்திற்காக 40 எண்ணிக்கையான High land roller Seeders (லொட் 1), 50 எண்ணிக்கையான Inter cultivator (லொட் 2), 50 எண்ணிக்கையான Eclectic fence individual (லொட் 3) மற்றும் 25 எண்ணிக்கையான Solar water pump-2" (லொட் 4) என்பவற்றின் பெறுகை
ஒப்பந்த இலக்கம்: LK-MOA-432250-GO-RFB-NCP

| வேலையின் விபரம் | விலைக்கோரல் பிணை முறியின் தொகை மற்றும் செல்லுபடித் திகதி | மீளளிக்கப்படாத கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|
| (லொட் 1) வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா Agronomic Interventions திட்டத்திற்காக 40 எண்ணிக்கையான High land roller Seeders என்பதன் பெறுகை | ரூபா 30,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | ரூபா 7000.00 |
| (லொட் 2) வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா Agronomic Interventions திட்டத்திற்காக 50 எண்ணிக்கையான Inter cultivator என்பதன் பெறுகை | ரூபா 45,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | |
| (லொட் 3) வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா Agronomic Interventions திட்டத்திற்காக 50 எண்ணிக்கையான Eclectic fence individual என்பதன் பெறுகை | ரூபா 35,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | |
| (லொட் 4) வடமத்திய மாகாணம் 11 எண்ணிக்கையான அடுக்கைகளில் 2024/2025 மகா Agronomic Interventions திட்டத்திற்காக 25 எண்ணிக்கையான Solar water pump-2" என்பதன் பெறுகை | ரூபா 262,000.00 2025 ஜனவரி 23ஆம் திகதி வரை | |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.

4. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள குறிப்பிடப்பட்ட துறை மற்றும் தரத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். உலக வங்கி கொள்முதல் விதிமுறைகளின் பிரிவு III உட்பிரிவு 3.23 ஏற்ப ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் (SOE) அல்லது நிறுவனங்கள் மட்டுமே போட்டியிடுவதற்கு அல்லது ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கு தகுதியுடையவையாகும்.

5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அநுராதபுரம், இல. 393/6, லேக் வீதி, நிலை 1, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (வடமத்திய மாகாணம்), பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2054434) மற்றும் அதே இடத்தில் 2024 செப்டெம்பர் 03ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறையானது 2024 செப்டெம்பர் 03ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

8. விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், இல. 393/6, லேக் வீதி, நிலை 1, அனுராதபுரம் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

9. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 செப்டெம்பர் 13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அநுராதபுரம், இல. 393/6, லேக் வீதி, நிலை 1, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (வடமத்திய மாகாணம்), பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு (வடமத்திய மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வடமத்திய மாகாணம்),**
**இல. 393/6, லேக் வீதி, நிலை 1,**
**அநுராதபுரம்.**
**2024-09-03ஆம் திகதி.**


SELACINE

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

Best way to fulfil your Future Dreams

Affordable & Attractive Packages for YOU.

077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

# பெறுகை அறிவித்தல்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு தென் மாகாண சபை

மாகாண நிலையான அபிவிருத்தி திட்டமிடல் 2024 மற்றும் உலக வங்கி செயற்றிட்டம் 2024இன் கீழ் செயற்படுத்தப்படும் கீழ்க்காணும் வேலை ஆலோசனைகளுக்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து, தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | செயற்றிட்ட இலக்கம் | பாடசாலை | வேலை விபரம் | மானிய மூலாதாரம் | தேவைப்படும் CIDA பதிவு | மீளளிக்கப் படாத பிணை வைப்புக்கள் (ரூ) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | G/C/24/07 | கா/ கராகொட தர்மராஜ க.வி | 60X20 மதில் 80X20 பாடசாலைக் கட்டிடங்கள் இரண்டு பழுதுபார்த்தல் | உலக வங்கி | C7 , C6 | 2,500.00 | 50,000.00 | 5 |
| 02 | G /C/24/14 | கா/ பனாகடுவ அமரசிங்க க.வி | 80X20 கட்டிடம் பழுது பார்த்தல் | உலக வங்கி | C8,C7 | 1,500.00 | 25,000.00 | 2.5 |
| 03 | G/C/24/18 | கா/ ரதனசிரி ரோயல் கல்லூரி | 100X20 கட்டிடம் பழுது பார்த்தல் | உலக வங்கி | C8 , C7 | 2,500.00 | 36,000.00 | 3.5 |
| 04 | G/C/24/19 | கா/ ராஜபக்ஷ ம.வி | புதிய விளையாட்டரங்கின் கூரையை பழுது பார்த்தல் | உலக வங்கி | C8 , C7 | 2,000.00 | 23,600.00 | 2.3 |
| 05 | G/C/24/20 | கா/ வல்ல பகல க.வி | 100X2 கட்டிடத்தின் கூரையை பழுது பார்த்தல் | உலக வங்கி | C8,C7 | 2,500.00 | 30,000.00 | 3.1 |
| 06 | G /C/24/22 | பக்கச் சுவரை பழுதுபார்த்தல் | பக்கச் சுவரை பழுது பார்த்தல் | மாகாண நிலையான | C8 , C7 | 2,500.00 | 32,000.00 | 3.2 |
| 07 | G /C/24/23 | கா/ தளபத்தே கம அநகரிக தர்மபால ம.வி | 40X20 கட்டிட நிர்மாணம் | மாகாண நிலையான | C7,C6 | 3,000.00 | 45,000.00 | 4.5 |
| 08 | H/C/24/11 | ஹ/ ஹொரேவெல ம.வி | 80X20 கட்டிடத்தின் கூரை மற்றும் சுவர் பழுதுபார்த்தல் | உலக வங்கி | C8 , C7 | 2,000.00 | 26,000.00 | 2.5 |
| 09 | H /C/24/12 | ஹ/ மஹகல வெவ க.வி | 90X25 இருமாடி கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலைகள்) | மாகாண நிலையான | C7 , C6 | 3,500.00 | 61,000.00 | 6.0 |
| 10 | H/C/24/13 | ஹ/ கலகம மாவி | 60X25 இருமாடி கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலைகள்) | மாகாண நிலையான | C8 , C7 | 3,000.00 | 39,000.00 | 3.8 |
| 11 | H /C/24/14 | ஹ/ கூட்டுறவு கிராம க.வி | தற்போதுள்ள அலுவலக கட்டிடம் விரிவுபடுத்தல் (1ம் கட்டம்) | மாகாண நிலையான | C8 , C7 | 2,000.00 | 25,000.00 | 2.4 |
| 12 | H /C/24/15 | ஹ/ அளுபொத்டெனிய | 90X25 இருமாடி கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலைகள்) | மாகாண நிலையான | C8 , C7 | 2,000.00 | 27,000.00 | 2.6 |
| 13 | H /C/24/16 | ஹ/ வல்கம் முல்ல ம.வி | 110X25 இருமாடி கட்டிட நிர்மாணம் (மிகுதி வேலைகள்) | மாகாண நிலையான | C7 , C6 | 3,500.00 | 64,000.00 | 6.3 |
| 14 | H /C/24/17 | ஹ/ அபயபுர க.வி | இல.3 உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்த்தல் | மாகாண நிலையான | C8 , C7 | 3,000.00 | 39,000.00 | 3.8 |
| 15 | H /C/24/18 | ஹ/ குருகோஅடல்ல வீரசிங்ஹ க.வி | பிரதான மண்டபம் புதுப்பித்தல் | மாகாண நிலையான | C8 , C7 | 3,000.00 | 42,000.00 | 4.1 |
| 16 | M /C/24/19 | மார/ திக்வெல்ல வடக்கு க.வி | 60X20 கட்டிடப் புதுப்பித்தல் | உலக வங்கி | C8 , C7 | 2,500.00 | 35,000.00 | 3.4 |
| 17 | M /C/24/20 | மார/ கொரபுருவான ம.வி | 40X20 கட்டிடப் புதுப்பித்தல் (மிகுதி வேலைகள்) | உலக வங்கி | C8 , C7 | 3,000.00 | 43,000.00 | 4.2 |
| 18 | M /C/24/21 | மார/ ஹத்தொட்டுவ க.வி | பக்கச் சுவர் நிர்மாணித்தல் | மாகாண நிலையான | C8 , C7 | 1,500.00 | 22,000.00 | 2.1 |
| 19 | M /C/24/23 | மார/ கெக்கனதுர விஜயபா க.வி | 100X20 கட்டிடத்தின் கூரையை பழுது பார்த்தல் | மாகாண நிலையான | C8 , C7 | 2,500.00 | 34,000.00 | 3.3 |
| 20 | M /C/24/25 | மார/ வில்பிட்ட க.வி | 120X20 வகுப்பறை கட்டிடத்தின் கூரையை பழுதுபார்த்தல் | உலக வங்கி | C8 , C7 | 3,000.00 | 39,000.00 | 3.8 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் பிரகாரம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுள்ள சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிர்மாணத்துறை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்படி வகுதியில் பதிவு செய்யப்பெற்றிருத்தல் வேண்டும்.

03. அரச நிதிச்சுற்றறிக்கை இலக்கம் 03/2020 மற்றும் 2020.10.09 ஆம் திகதிய, 03/2020(1) மற்றும் 2021.01.11 ஆம் திகதிய மற்றும் ரூபா மில்லியன் 50 இற்குக் குறைவான செயற்றிட்டங்களிற்கான அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 04/2016 (ii) மற்றும் 2019.05.08ஆம் திகதிய மற்றும் இல. 04/2016 (iii) மற்றும் 2021.02.18 ஆம் திகதிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் செல்லுபடியாகுமென்பதுடன், மாகாண முன்னுரிமை மற்றும் விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக, விலைமனுக்களின் பரிசீலனையின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2024.09.02 முதல் 2024.09.20 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய, கல்வி அமைச்சின் (தரைமாடியில்) இதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களிற்காக, அமைச்சின் இந்த இலக்கத்தை வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். 091-2030700.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024.09.23 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "செயலாளர், தென்மாகாண கல்வி அமைச்சு, தக்ஷினபாய, லபுதுவ, காலி" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் கொண்டுவந்து பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் முடியும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விகள் திறத்தல் 2024.09.23 அன்று பி.ப.2.30 இற்கு தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரின் தலைமையில் அமைச்சில் விலைமனுத் திறத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்து இருக்கலாம்.

07. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி இலங்கையிலுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்டதும், 2024.09.23 முதல் 2024.01.06 வரை செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப் பிணையமொன்று, அல்லது கல்வி அமைச்சின் கணக்கு இலக்கத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கி வரைவுகளாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுப்பிணையங்கள் நிராகரிக்கப்படும்.

08. விலைமனுக்களின் செல்லுபடிக்காலம் 77 நாட்களாகும்.

09. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட விலைமனுக்கள், இரண்டு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவ்விலைமனுக்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் செலோடேப் ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதன் மூலப்பிரதியில் "மூலப்பிரதி" எனவும், நகல் பிரதியில் "நகல்பிரதி" எனவும் குறிப்பிடுதல் வேண்டும். அவற்றை தனித்தனி உறைகளில் உள்ளிட்டு முத்திரையிட்டு, அவ் இரு உறைகளையும் ஒருறையில் சேர்த்து அதனை முத்திரையிட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், குறித்த களப்பரிசீலனை மேற்கொள்வது முக்கியம் என்பதனால், களப்பரிசீலனையின் பின்னர் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

11. குறைபாடுகளுடன் கூடிய விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பிணைத்தொகையானது, அரசுடைமையாக்கப்படும். இப்பெறுகை தொடர்பாக, பெறுகைக்குழுவின் தீர்மானம், இறுதித்தீர்மானமாகும் என்பதனை கவனித்தல் வேண்டும்.

**ரஞ்ஜித் யாப்பா**
**பெறுகைக்குழுத் தலைவர்**
**தென் மாகாண கல்வி அமைச்சு, முதலாம் மாடி, தக்ஷினபாய,**
**லபுதுவ - காலி**

**2024.09.02**
**தொ.பே.இல. 0912030700 மின்னஞ்சல் : acc.moesp@gmail.com**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சிறைச்சாலைகள் திணைக்களத்திற்காக சீருடை துணைப்பொருட்கள் வழங்கலின் பெறுகை - 2024

### பெறுகை இல.: SS/04/03/AC./2024

01. 2024 - சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சீருடை துணைப்பொருட்களின் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் இருந்து சிறைச்சாலைகள் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2024.09.26 ஆம் திகதி 10.30 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

02. 2024.09.25 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, 150, சிறைச்சாலைகள் தலைமையகம், வழங்கல் மற்றும் சேவைகள் பிரிவு, சிறைச்சாலைகள் ஆணையாளர் (வழங்கல்கள் மற்றும் சேவைகள்) இடமிருந்து விலைமனு ஆவணங்களை பெறலாம். மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவை செலுத்தி ஆங்கில மொழியில் உள்ள விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியை விலைமனுதாரர்களால் பெறலாம். தேசிய போட்டிரீதியான விலைமனு அடிப்படையில் இந்தப் பெறுகை செயற்படுத்தப்படும்.

| பிரிவு இல. | விபரம் | அளவு | மீளளிக்கப் படாத ரொக்கப்பண வைப்பு (ரூபா) |
|---|---|---|---|
| A | **Peak Caps** | 02 | |
| | CGP/ACGP | 05 | |
| | CP | 02 | |
| | SSP | 06 | |
| | SP | 30 | |
| | ASP/ ASP (SPEAT Force) | 504 | |
| | Jailor/ Jailor (SPEAT Force) Industrial Forman | 17 | |
| | Sargent/Guard & other ranks | 5,150 | |
| B | **Belts** | 02 | |
| | CGP/ACGP | 05 | |
| | CP | 38 | |
| | SSP/ SP/ASP | 504 | |
| | Jailor | 270 | |
| | Sargent /Guard (SPEAT Force) Sargent /Guard 1 | 4,897 | |
| C | **Lenyards** | 02 | |
| | CGP/ACGP | 43 | |
| | CP/SSP/SP/ASP/ ASP(SF) | 488 | |
| | Jailor | 16 | |
| | Jailor (SF) | 4,897 | |
| | Sargent /Guard & Other ranks Sargent/Guard & Other ranks(SF) | 270 | |
| D | **Cap Badges** | | |
| | CGP/ACGP | 02 | |
| | CP | 05 | |
| | SSP/SP/ASP | 38 | |
| | Jailor | 504 | ரூபா 12,500/- |
| | Sargent/ Guard & Other ranks | 5,167 | |
| E | **Belt Badges** | | |
| | Sargent/ Guard(M) | 4,078 | |
| | Sargent/ Guard(F) | 494 | |
| | Other ranks | 325 | |
| F | **Buttons** | | |
| | Small | 35,394 | |
| | Large | 22,113 | |
| G | **Stars** | | |
| | SSP/SP/Jailor | 2,096 | |
| H | **Bars & Stripes** | | |
| | Jailor Bar | 26 | |
| | Sargent 3 Strips | 619 | |
| | Guards 2 Strips | 4,223 | |
| | Guards 1 Strips | | |
| I | **Shoulder Badges & Other Badges** | | |
| | Badges | 5,716 | |
| | Shoulder Badges in Pairs | 38 | |
| | Shoulder State Badges in Pairs IF/IS/VI /AI Badges in Pairs MD | 85 | |
| | Badges | 240 | |
| J | **Button attachment Rings** | | |
| | Rings | 57,507 | |
| K | **Collar Tags in Pairs (Gorget Patches)** | | |
| | CGP/ACGP | 02 | |
| | CP | 05 | |
| | SSP/SP | 08 | |

**03. மாதிரி தயாரிப்பு**

பிரிவுக்கு தொடர்புடைய பெறுகை ஆவணங்கள் மற்றும் விலைமனு பிணைமுறிகளுடன் சேர்த்து சரியாக பொதியிடப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட மாதிரிகளை, பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன் கொழும்பு, பேஸ்லைன் வீதி, சிறைச்சாலை தலைமையக, திணைக்கள பெறுகைக் குழு, தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

**04. வர்த்தகப் பதிவு மற்றும் பிரிவுகளுக்கான கூறுவிலை**

4.1 விலைமனு ஆவணங்களுடன் சேர்த்து வர்த்தகப் பதிவு சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

4.2 அனைத்துப் பிரிவுகள் அல்லது பிரிவுகளின் தேர்வு செய்யப்பட்ட இலக்கங்களுக்கு விலைமனுதாரர் கூறுவிலையிடலாம். ஒவ்வொரு பிரிவுக்காகவும் வெவ்வேறாக கூறுவிலையிடுவதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர். தேர்வு செய்யப்பட்ட பிரிவில் அனைத்து உருப்படிகளுக்காகவும் விலைமனுதாரர்கள் கூறுவிலையிடல் வேண்டும்.

**05. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு**

1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் விலைமனுதாரர் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**06. விலைமனு ஆவணங்களை வழங்கல்**

விலைமனு ஆவணங்கள் தமது நிறுவன முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை விடுக்கும் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் அதிகாரம்பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

**07. விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது**

விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம் என்பதோடு சிறைச்சாலைகள் தலைமையகத்தின் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பிரிவில் மேலதிக விபரங்களை பெற முடியும் (தொலைபேசி 011-4677178/ 011-7930616/ 011-4677177).

**08. விலைமனு இறுதித் திகதி**

விலைமனுக்களை 2024.09.26 ஆம் திகதி 10.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சிறைச்சாலைகள் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது வழங்கல்கள் மற்றும் சேவைகள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு ஆவணங்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சிறைச்சாலைகள் திணைக்களத்திற்காக சீருடை துணைப்பொருட்களின் வழங்கல் – 2024'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**09. விலைமனு திறப்பது**

மின்னணு விலைமனு ஏற்கப்படாது. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2024.09.26 ஆம் திகதி 10.30 மணிக்கு மூடப்படுவதோடு மூடப்பட்ட பின்னர் கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இல. 150, சிறைச்சாலைகள் தலைமையகத்தின் கேட்போர்கூடத்தில் உடன் திறக்கப்படும் (தே.அ.அ. உடன் செல்லுபடியான அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்).

**10. விலைமனு செல்லுபடிக் காலம்**

விலைமனு 2024.09.26 ஆம் திகதி தொடக்கம் 2024.11.07 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**11. விலைமனு பிணை மற்றும் விலைமனு பிணை செல்லுபடிக் காலம்**

அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு நிபந்தனையற்ற விலைமனு பிணை பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனு பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாத வடிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதோடு அது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் எழுத்து மூல முதல் கோரிக்கையில் பணமாக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணை 2024.09.26 ஆம் திகதி தொடக்கம் 2024.12.15 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

| இல. | விபரம் | விலைமனு பிணை தொகை (ரூபா) |
|---|---|---|
| A. | Peak Caps | ரூபா 300,000/- |
| B. | Belts | ரூபா 85,000/- |
| C. | Lenyards | ரூபா 60,000/- |
| D. | Cap Badges | ரூபா 40,000/- |
| E. | Belt Badges | ரூபா 35,000/- |
| F. | Buttons (Large & Small) | ரூபா 42,000/- |
| G. | Stars | ரூபா 7,000/- |
| H. | Bars & Stripes | ரூபா 16,000/- |
| I. | Shoulder Badges & other Badges | ரூபா 33,000/- |
| J. | Button Attachment Rings | ரூபா 7,000/- |
| K. | Collar Tags (Gorget Patches) | ரூபா 1,000/- |

**12. கட்டாயமானது**

விலைமனுவுடன் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக மாதிரியை (இல. 01) முன்வைத்தல் வேண்டும்.

**13. செயல்திறன் பிணை**

அனைத்து தேர்வு செய்யப்பட்ட விலைமனுதாரர்களும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் வேண்டும் என்பதோடு மொத்த ஒப்பந்த விலையின் 10% பெறுமதியான நிபந்தனையற்ற செயல்திறன் பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். செயல்திறன் பிணையானது 2024.10.16 ஆம் திகதி தொடக்கம் 2026.01.14 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**14. விநியோகக் காலம்**

விநியோகக் காலம் கொள்வனவு கோரல் திகதியில் இருந்து 60 நாட்களுக்குள்

**15. பின் தொழில்நுட்ப மதிப்பீடு**

15.1. சிறைச்சாலை தலைமையகத்தில் களஞ்சியங்களுக்கு பொருட்களின் முழு அளவும் கிடைக்கப்பெற்ற பின்; எடுகோளாக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் TEC மூலம் கட்புலனாக சோதிக்கப்படும்.

**16. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது**

எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது மற்றும் விலைமனு செயற்பாட்டை இரத்துச் செய்வது மற்றும் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த ஒரு நேரத்திலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழு தலைவர் வசமானது.

**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**சிறைச்சாலைகள் தலைமையகம்,**
**இல. 150, பேஸ்லைன் வீதி,**
**கொழும்பு 09**
**2024.09.03**

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON Lake House Branch Acc. No. 000000377

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

### இலங்கை வங்கியின் வட மத்திய மாகாணத்திற்கு இரண்டு நலன்புரி வாகனங்களை வழங்குதல்

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்திற்கு இரண்டு (02) நலன்புரி வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்க ஏலவிலைகள் கூறப்படுகின்றன.

**இவ் விலைகூறல் இல் பங்கெடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்**

- வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், பயணியர் போக்குவரத்து உயர்கூரை வாகனங்களாகவும், 14 பயணிகள் வசதியாக இருக்கக்கூடிய வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.
- பயணியர் போக்குவரத்து வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- வாகனங்கள், இரட்டைக் குளிரூட்டி வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- முன்மொழியப்படும் வாகனங்கள், 2014 அல்லது அதற்குப் பிந்திய ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டவைகளாகக் காணப்படல் வேண்டும்.
- வாகனங்கள், பயணியருடன் முழுமையாகப் காப்புறுதி செய்யப்பட்டதாகக் காணப்படல் வேண்டும்.
- ஏலவிலை கூறுபவர் உரிய மாவட்டங்களின் அடிப்படையில் வாகனங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வாகனங்களின் பராமரிப்பு / சாரதிகளின் ஊதியம் / காப்புறுதி மற்றும் எரிபொருள் கட்டணங்கள் என்பன வாகனங்களின் உரிமையாளரால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.
- நிறுவனத்தின் தேவைகளுக்கமைய வாகன உரிமையாளரினால் வாகனங்களை வழங்குவதற்கு வசதியாக இருக்க வேண்டும்.
- உரிமையாளர் ஒரே வசதிகளைக் கொண்ட மேலதிக வாகனங்களைக் கொண்டிருக்க வேண்டியதுடன், வசதிக்கமைய வாகனங்களை வழங்கக்கூடியதாக இருப்பதுடன், ஒழுக்கமான சாரதிகளையும் வழங்க வேண்டும்.

உரிய விண்ணப்பமானது, அநுராதபுரம், வட மத்திய மாகாண அலுவலகம், இலங்கை வங்கி, செயற்பாட்டு முகாமையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படக்கூடியதுடன், ஒப்பந்தக்கட்டணம் ரூபா 1500/- உடன் ஏலவிலை கூறல்களை மேற்கூறப்பட்ட முகவரியில் காணப்படும் ஏலவிலை கோரல் பெட்டியினுள் **2024.09.18** அன்று காலை **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு செயற்பாட்டு முகாமையாளர், தொலைபேசி இல. **025 223 5680 / 025 223 5685** ஊடாக வார நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**செயற்பாட்டு முகாமையாளர்,**
(வட மத்திய மாகாணம்),
இலங்கை வங்கி,
வட மத்திய மாகாண அலுவலகம், அநுராதபுரம்.
தொலைபேசி இல. 025 223 5680

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கேள்வி அறிவித்தல்

## வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலை

### மேல் மாகாண சுகாதாரத் திணைக்களம்

### உணவக கேள்வி கோரல் - 2024/2025

2024/2025 ஒருவருட கால எல்லைக்கு வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் உணவக சேவையை நடத்திச் செல்வதற்கு அவற்றில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற நபர்கள் கேள்வி ஆவணங்களை கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 விண்ணப்பப்படிவக் கட்டணத்தை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன், தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2024.09.02 முதல் 2024.09.18 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரியிடம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இங்கு காசு செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு, அவ் உறைகளை தனி உறையில் இட்டு சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் "2024.˙.2025 ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல்" என்று குறிப்பிட்டு 2024.09.19 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, ஆதார வைத்தியசாலை, வத்துபிட்டிவல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இவ் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. கேள்விகளை ஏற்றல் முடிவடைந்தவுடன் அவ்வேளையிலேயே கேள்வி திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்க அனுமதியளிக்கப்படும்.
4. குறித்த கேள்விகள் ஏற்றல் அல்லது நிராகரிக்கும் உரிமை இப் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**மருத்துவர் கே.எஸ்.பீ. சில்வா,**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை**
**வத்துபிட்டிவல**
**தொ.பே.இல. 033 - 2280261 / 033 2280262**
**2024.09.02**

The Housewives' companion
Classifieds on
Daily News

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (இசுஅஅ)
(SLTDA)

### SLTDA இன் அமுலாக்கல் பணிமனைக்காக 3 எண்ணிக்கையான அலுவலர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக சேவை வழங்குநரொருவரை வாடகைக்கு அமர்த்துதல்

Contract No.: SLTDA/HR&PM/S/NCB/Enforcement/2024/47

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு (IFB)

1. **இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் அமுலாக்கல் பணிமனைக்காக 3 எண்ணிக்கையான அலுவலர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக** சேவை வழங்குநரொருவரை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் வியாபார பதிவைக் கொண்டிருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான தகுதித்தன்மை தகைமைத்திறனுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.
3. **2024 செப்டெம்பர் 3 இலிருந்து 2024 செப்டெம்பர் 18 வரையும் https://www.sltda.gov.lk/en/tender** என்பதை பார்வையிட்டு ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். மேலதிக விபரங்களுக்கு இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிருடன் (தொலைபேசி: 0112426800 நீடிப்பு 305/303/277) தொடர்பு கொள்ளலாம்.
4. **முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்கள் 2024 செப்டெம்பர் 19 அன்று பி.ப. 2 மணிக்கு கிடைக்கும் வகையில்** பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு-3 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். **(கேள்விகள் 2024 செப்டெம்பர் 19 அன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படும். "Hiring of a Service Provider to obtain Services of 3 Nos. of officers for Enforcement Unit of SLTDA" என்ற சொற்கள் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.**
5. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படுமென்பதுடன் கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே பெறுகைப் பிரிவில் (4 ஆம் மாடி, இசுஅஅ, இல. 80, காலி வீதி, கொழும்பு-3) என்ற முகவரியில் சமுகமளித்திருக்கும் கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கேள்விகள் அவைகளை மூடும் திகதியிலிருந்து **90 நாட்களுக்கு** செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் **(2024 டிசம்பர் 19 வரையும்)**
7. சுற்றுலாத்துறை அமைச்சு அல்லது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதாவது நிறுவனமொன்றின் ஊழியரொருவருடன் நெருக்கமான குடும்ப உறவைக் கொண்டுள்ள ஊழியரொருவர் அல்லது நிறுவனம் அல்லது நிறுவனமொன்றின் மற்றும்/அல்லது தனிநபரொருவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை இழந்து விடுவார்.
8. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், SLTDA ஆனது எந்தவொரு கேள்வியையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் கேள்விகளின் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பாக எந்தவொரு தெரிவு செய்யப்படும் கேள்விதாரருக்கேற்படும் ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

# விலைமனுகோரல்

## மாவட்ட செயலகம் – புத்தளம்

### புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விலைமனு இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் பெறுமதி) ரூபா | சீடா பதிவு இல. | மீள் செலுத்தப்படாத விலைமனு வைப்புத் தொகை ரூபா. | விலைமனு பிணைப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | PU/PR/CO/24/66 | ஹல்பன்வில முதல் வலஹாபிட்டிய வரையிலான வீதி புனரமைப்பு. | 17.7 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (வீதிகள்) | ரூபா.10,000.00 | ரூபா.200,000.00 |
| 02 | PU/PR/CO/24/67 | சிரம்பியடிய வீதியின் புனரமைப்பு (கட்டம் - 01) | 21.7 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (வீதிகள்) | ரூபா.10,000.00 | ரூபா.220,000.00 |
| 03 | PU/PR/CO/24/68 | போகஹ சந்தியிலிருந்து ரம்பகநாயகம ஊடாக கிரிமெட்டியாவ வரையான வீதியை புனரமைத்தல். | 23.4 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (வீதிகள்) | ரூபா.10,000.00 | ரூபா.250,000.00 |
| 04 | PU/PR/CO/24/69 | கிவுல இலக்கம் 01 மெல்வத்தை வீதி புனரமைப்பு. | 19.4 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (வீதிகள்) | ரூபா.10,000.00 | ரூபா.200,000.00 |
| 05 | PU/PR/CO/24/670 | தம்மன்னாகம மதுரகம ஊடாக அடபானவில்லுவ வீதி புனரமைப்பு. | 21.7 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (வீதிகள்) | ரூபா.10,000.00 | ரூபா.220,000.00 |
| 06 | PU/PR/CO/24/71 | பொத்துவில்லு மற்றும் நாகவில்லு பகுதிகளை இணைக்கும் வீதியில் பாலம் நிர்மாணம். | 15.1 மில்லியன் | C-7, C-6 மற்றும் C-5 மட்டும் (பாலங்கள்) | ரூபா.10,000.00 | ரூபா.200,000.00 |

02. மேற்கூறப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2024.09.03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 2024.09.24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்டப் செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் மாவட்ட செயலக பெறுகை பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுவினை விலைமனு வழிகாட்டற் கோவையில் இல. 19ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என தொகுதி இரண்டாக பூர்த்திசெய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப் பக்கமேல் மூலையில் உரிய விலை மனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2024.09.25 ஆம் திகதியான புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர் /தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை, முதலாம் மாடி, கணக்கு கிளை, மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது முதலாம் மாடி, கணக்கு கிளையில் உள்ள மாவட்ட செயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப. 2.00 மணி நிறைவடைந்ததும் விலைமனுப்பத்திரம் மாவட்ட செயலகப் பெறுகை பிரிவினால் திறக்கப்படும்.

04. தகைமையான நிறுவனத்தினை தெரிவு செய்வதில் நிறுவனத்தின் பதிவு மற்றும் அனுபவங்கள் உட்பட்ட அனைத்து விடயங்களும் கவனத்திற்கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

05. விலைமனு மதிப்பிடலின் போது வடமேல் மாகாணத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 5% முன்னுரிமை வழங்கப்படும்.

06. விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2024.09.13 ஆந் திகதியன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படும்.

07. விலைமனு திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதியுண்டு.

08. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் 032-2265234 என்ற தொலைபேசி வழியினூடாகபெற்றுக் கொள்ளலாம்.

2024.09.03

**எச்.எம்.எஸ். பி. ஹேரத்**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**தவிசாளர் - திணைக்கள பெறுகை சபை**
**நிர்வாக மாவட்டம், புத்தளம்**

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (இசுஅஅ)

### (SLTDA) செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் 4 எண்ணிக்கையான மோட்டார் கார்கள் மற்றும் 1 எண்ணிக்கையான டபிள் கெப் ஆகியவற்றை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு வாடகைக்கு அமர்த்துதல்

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு (IFB)

1. செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் 4 எண்ணிக்கையான மோட்டார் கார்கள் மற்றும் 1 எண்ணிக்கையான டபிள் கெப் ஆகியவற்றை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் வியாபார பதிவைக் கொண்டிருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான தகுதித்தன்மை தகைமைத்திறனுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.
3. 2024 செப்டம்பர் 3 இலிருந்து 2024 செப்டம்பர் 24 வரையும் **sltdaproc@srilanka.travel/ anushas@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவு துண்டுடன் மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைக்கு இசைவாக ஆங்கில மொழியிலுள்ள முழுமையான கேள்விக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
4. மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவான 3500 இலங்கை ரூபாவானது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியின் கூட்டிணைவு கிளையில் வரவு வைக்கப்படல் வேண்டும். (குறிப்பு: ரொக்கப் பண துண்டில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என வரவு வைப்பவரின் விபரங்கள் மற்றும் வரவிற்கான நோக்கம் ஆகியவற்றை தயவு செய்து குறிப்பிடுவதுடன் மேற்கூறப்பட்டுள்ள மூலப்பிரதி ரொக்கப்பண வரவுத்துண்டையும் கேள்விக்கோரலுடன் சமர்ப்பித்தல் வேண்டும். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்)
5. 2024 செப்டம்பர் 25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்கள் மற்றும் அதனது நகல்பிரதிகள் ஆகியன கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு-3 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். (கேள்விகள் 2024 செப்டம்பர் 25 அன்று பி.ப. 2 மணிக்கு திறக்கப்படும்) '**Hiring of 4 Nos. of Motor Cars and 1No. Double Cab for SLTDA on Operational Lease Basis**' என்ற சொற்கள் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
6. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படுமென்பதுடன் கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே பெறுகைப் பிரிவில் (4 ஆம் மாடி, இசுஅஅ, இல. 80, காலி வீதி, கொழும்பு-3) என்ற முகவரியில் சமுகமளித்திருக்கும் கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2024 டிசம்பர் 25 வரையும்)
8. அனைத்து கேள்விகளும் 250,000 இலங்கை ரூபா கேள்விப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பிணையானது 2025 ஜனவரி 25 வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம் மற்றும் அதன் பின்னரான வர்த்தமானி அறிவித்தல்களுக்கமைவாக(பிசிஏ-3 படிவம்) பதிவுச் சான்றிதழொன்று அனைத்து கேள்விக்கோரல்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. சுற்றுலாத்துறை அமைச்சு அல்லது இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் அல்லது அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதாவது நிறுவனமொன்றின் ஊழியரொருவருடன் நெருக்கமான குடும்ப உறவைக் கொண்டுள்ள ஊழியரொருவர் அல்லது நிறுவனம் அல்லது நிறுவனமொன்றின் மற்றும்/அல்லது தனிநபரொருவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை இழந்து விடுவார்.
11. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், SLTDA ஆனது எந்தவொரு கேள்வியையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் கேள்விகளின் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பாக எந்தவொரு தெரிவு செய்யப்படும் கேள்விதாரருக்கேற்படும் ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

| Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words) | | |
|---|---|---|
| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

Daily News Classifieds, the Housewives' companion

# தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்ட கல்வி முறையே நாட்டுக்கு அவசியம்

## பட்டதாரிகளை உருவாக்குவதால் மாத்திரம் பயனில்லை!

இலங்கை கல்விக்கு முக்கியத்துவமளித்து வரும் ஒரு நாடாகும். 20 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மனித தலைமையை உருவாக்குவதில் கல்வி முக்கிய முதலீடாக இருந்து வருகிறது. தொழில்நுட்ப புதுமைகளிலும், பொருளாதார வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் கொண்டு வருவதற்கு கல்வி உந்துசக்தியாக உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் ல்வி அதற்கும் மேலாக தொழிற்கல்வி, முறைசாராக் கல்வி என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இக்கல்வி முறையானது இலங்கையின் பொருளாதாரத்தை வளப்படுத்த இன்றுவரை எதுவித பாரியளவு பங்களிப்பையும் செய்யவில்லை என்பதே உண்மை.

ஆசியாவிலே அதிக கல்வி கற்றவர்கள் 92% கொண்ட நாடாக இருந்தும் தொழில் ரீதியான முன்னேற்றம் இலங்கையில் இல்லை. ஆரம்பக் கல்வியிலேயே பிள்ளைகளை பரீட்சைக்கு தயார்செய்யத் தொடங்குகின்றார்களே தவிர, திறன்கள் மற்றும் திறமைகளை பிள்ளைகள் இனங்கான எமது கல்வி இடமளிக்கவில்லை.

நாட்டின் முன்னேற்றத்திற்கு பொருளாதார தொழில்துறை, கைத்தொழில், தொழிநுட்பத் துறைகளின் பங்கு முக்கியமானது. ஏனைய வளர்ந்து வரும் நாடுகள் தொழினுட்பத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை போல இலங்கை கொடுக்கவில்லை என்பதே நிதர்சனம்.

அவ்வாறான தொழிநுட்ப ரீதியான கல்வியை தற்போது அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த முயன்றாலும், அதனை கற்பிக்கும் திறன் கொண்ட ஆசிரியர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறையுண்டு. ஏனெனில் எம் நாட்டில் வரலாறு மற்றும் சமய பாடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவிற்கு நவீன கல்வி முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. இது தற்கால இலங்கை கல்வியிலுள்ள பிரச்சினையாகும்.

இதன் காரணமாக வேலையற்றோர் வீதமும் அதிகரித்துள்ளதுடன், ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைகழகக் கல்வி வரை இலவச கல்வியினை வழங்கி அரசாங்கமே பட்டதாரிகளை அதிகம் உருவாக்குவதனால் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. பட்டதாரிகளும் அரசு வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கும் பொழுது வேலையற்றோர் வீதமும் அதிகரித்துள்ளது.

சிறு வட்டத்துக்குள் சுருங்கிவிடும் கல்விமுறையே இங்கு காணப்படுகிறது. இதனால் படித்தவர்களை விட படிக்காதவர்களே சம்பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. சுமார் 9000 பட்டதாரிகள் ஆண்டுதோறும் இப்பிரச்சினையை எதிர்நோக்குவதோடு, வேலையில்லா பட்டதாரிகளின் போராட்டங்களும் வலுப்பெற்று கொண்டேதான் செல்கின்றன.



மேலும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவரும் பல்கலைக்கழக அனுமதியை பெறுவதில்லை. 0.82% மட்டுமே அனுமதியை பெறுகின்றனர். Z புள்ளிகளை அடிப்படையாக வைத்தே புள்ளிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் முழுத் தகுதியுடைய பணியாளர்களை தொழிற்துறையில் எதிர்பார்ப்பது சாத்தியமற்றது.

அடுத்ததாக இலங்கை கல்வி முறையின் முக்கிய விமர்சனம் பாடத்திட்டம் காலாவதியாகும். இதற்கு எடுத்துக்காட்டாக இன்றை உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த கணனி நிரலாக்கம் நிதியியல் கல்வி அறிவு மற்றும் தொழில் முனைவு போன்ற பாடங்கள் தற்போது பாடத்தில் சேர்க்கப்படவில்லை. அதற்கு மற்றுமொரு காரணம் வளப்பற்றாக்குறையாகும் இதனால் மாணவர்கள் கற்கவும் ஆசிரியர்கள் கற்பிக்கவும் சிரமப்படுகின்றார்கள்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கல்வி செயன்முறை மிகவும் தாமதமாவே உள்ளது. பொதுவாக ஒரு மாணவன் அவனது உயர்கல்வியை முடிக்க 24 வயதாகிறது. இதற்கிடையில் குடும்ப நெருக்கடி, வருமான பிரச்சினை என்பன இளைய சமுதாயத்தினரை சோர்வடைய செய்வதாக உள்ளது. இவை அனைத்தும் இறுதியில் வேலைவாய்ப்பிற்கான கேள்விக்குறியாக எழுந்து நிற்கிறது

இவ்வகையில் சிறந்த கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வேலையின்மைக்கு 50% தீர்வினைக் காண முடியும். உலகின் சிறந்த கல்விமுறையைக் கொண்ட நாடான பின்லாந்து கல்விமுறையானது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் இவ்வாறான சிக்கல்நிலைமைகள் ஏற்பட வாய்ப்பில்லை. பின்லாந்தில் தனியார் துறையினருக்கு இடமில்லை. பரீட்சைகள் நடைபெறுவதில்லை. எனினும் சிறந்த பாடசாலை முறை காணப்படுவதோடு சிறந்த வகுப்பறைப்பண்பும் காணப்படுகின்றது. உதாரணமாக 7 வயதில் பாடசாலை சேர்ந்து 3 வருட நேரடிக்கல்வி கற்பிக்கப்படுகின்றது உலகளாவிய தேர்வுகளில் பங்குகொள்ளல், வகுப்பு மாணவர் சராசரி எண்ணிக்கை 20 ஆகக் காணப்படல் என்பவற்றோடு இங்கு தொழில்வாண்மை மிக்க சிறப்பான ஆசிரியர் குழாம் காணப்படுகின்றது.

கல்வியில் உள்ள தற்காலப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு எமது நாட்டு வளங்களை பூரணமாக வகையில் பயன்படுத்தும் தொழில் வாய்ப்பிற்கு ஈடுகொடுக்க கூடிய வகையிலும் தொழில்நுட்ப அறிவோடும் சர்வதேசக் கல்வி முறைகளோடு போட்டியிட கூடிய வகையிலும் கல்விமுறைகள் கொள்கைகளை மற்றும் தீர்மானிப்பதனூடாக நிச்சயம் சிறந்த ஓர் நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

**சங்கர் திலகவதி**
2ம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி
கல்வி பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

# தென்கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் அதிகரிக்கும் யானை - மனித மோதல்கள்!

இலங்கையில் யானை_மனிதன் முரண்பாடுகள் காலத்திற்கு காலம் அதிகரித்துச் செல்கின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் இந்த நிலை உச்சத்தை அடைந்துள்ளது. இறுதியாக முன்னெடுக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டு தரவுகளின்படி யானை_மனித மோதல்கள் காரணமாக 200 யானைகளும் 48 மனிதர்களும் கொல்லப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

அதேபோன்று இலங்கையில் 5200 இற்கும் மேற்பட்ட யானைகள் வாழ்வதாகவும் அறியமுடிகின்றது. ஆசிய நாடுகளிலுள்ள யானைகளில் இலங்கையில் 10_20 சதவீதமான யானைகள் காணப்படுவதாக பிரகாஷ், விஜயரத்தின மற்றும் பென்னார்ன்டோ ஆகியோரின் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.



நிலவளத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான போட்டித் தன்மை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. அத்தோடு யானைகள் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வதனால் அவை மனிதன் மீதான பயத்தையும் இழந்துள்ளன. இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு யானைகளையும் மனிதர்களையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது அவசியம் ஆகும்.

அம்பாறை மாவட்ட கரையோரத்தில் அதிகம் யானை_ மனித மோதல் பதிவாகும் பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. காடுகள் உருவாக்கத்தில் பாரிய பங்களிப்பினை செய்யும் யானைகளை பற்றிய சில சுவாரசியமான தகவல்களும் காணப்படுகின்றன. அந்தவகையில் உலகில் இரண்டாவது மிகப்பெரிய உயிரினமான யானைகள் நாளொன்றிற்கு

## இலங்கையில் சுமார் 5200 யானைகள்

100 தொடக்கம் 150 கிலோ உணவையும் 150 தொடக்கம் 200 லீட்டர் வரையான நீரினையும் உட்கொள்வதோடு சுமார் 20 கி.மீ வரை நடக்கக்கூடிய ஆற்றலும் உடையதாகும்.

அதிக ஞாபகசக்தி மற்றும் மோப்பசக்தி கொண்ட இதனால் அதனைச் சுற்றி நான்கு கிலோமீட்டர் ஆரையில் உள்ள யானைக் கூட்டத்தையோ யானையையோ கூட அடையாளம் காணக்கூடிய திறனையும் கொண்டுள்ளது. குறிப்பாக குடியிருப்பு பிரதேசங்களுக்கு வருகை தரும் யானைகளை சுகல, உதானி என பிரிக்கப்படுகின்றது. அதிலும் உதான யானைகளே மனிதனுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியன. உதானி வகையான யானைகள் கோபம் கொண்டதும் தனிமையில் உணவு தேடக் கூடியது ஆகும்.

காடுகள் மீதான மனித ஆக்கிரமிப்புகள் , உணவுத் தட்டுப்பாடு, வரட்சி போன்ற காரணங்களினால் உணவு, நீர் போன்றவற்றினை தேடி குடியிருப்பு பிரதேசங்களுக்குள் யானைகள் வருகின்றன.

யானைகளுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச் சூடு, தாடை வெடிவைத்தல்(ஹக்கபடாஸ்) போன்ற செயற்பாடுகளினால் யானைகளுக்கு காயங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உயிர்தப்பும் யானைகளுக்கு வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் மிருக வைத்தியர்களின் உதவியுடன் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

தென்கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் ஏற்படும் யானை_ மனித முரண்பாடுகள் பற்றி வன ஜீவராசிகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்தியத்தின் வனத்துறை அதிகாரியான சிபான் அவர்களுடன் கலந்துரையாடப்பட்ட போது, தென்கிழக்கின் கல்முனை முதல் பொத்துவில் வரையான பகுதிகளில் அண்மைக்காலமாக யானை_ மனித முரண்பாடுகள் அதிகரித்துள்ள சூழலை காண முடிவதாகக் கூறினார்.

குறிப்பாக சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி, நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் பயிர்ச்செய்கை பிரதேசங்களிலும் பொத்துவில் காடுகளை அண்டியுள்ள குடியிருப்பு பிரதேசங்களிலும் இந்நிலை அதிகரித்துள்ளது. நாடுளாவிய ரீதியில் பதிவான யானை_ மனித மோதல்களில் இறந்தவர்களில் அதிகமானோர் விவசாயிகள் மற்றும் யானைகள் பயணிக்கும் கடவைகளின் மூலமாக பயணித்தோர் ஆவர். மதுபோதையில் இருந்தவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கின் குடியிருப்பு பெருக்கங்கள், நகரமயமாக்கல் மூலமாகவும் யானைகளின் நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கழிவுகளை காடுகளை அண்டிய எல்லை பிரதேசங்களில் கொட்டுவதனால் அங்கு காணப்படும் உணவு, பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை யானைகள் தங்களது உணவாக எடுத்துக் கொள்கின்றன. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் கொண்ட யானைகளுக்கு வயிற்று நோய்கள் ஏற்பட்டு பாரிய ஆபத்துக்களையும் சந்திக்கின்றன. குப்பைகளை கொட்டும் இடங்களில் மீள்சுழற்சி முறையை ஏற்படுத்துதல் அல்லது குறித்த இடங்களை சுற்றி யானை வேலிகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமானது.

யானை_ மனித முரண்பாட்டை இழிவளவாக்குவதற்காக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கூட்டங்களை ஒரு வருடத்திற்கு இரண்டு முறையாவது வன ஜீவராசிகள் திணைக்களம் ஏற்பாடு செய்கின்றது. அதேபோன்று யானை வேலிகள் அமைக்கும் போது சில புதிய தொழில்நுட்பங்களை கையாள்வதற்கான வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன. யானைகளை விரட்டுவதற்காக விவசாயிகள் மத்தியில் வெடிகள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இவ்வாறான சில நடைமுறைகள் மூலமாக யானை_ மனித மோதலை குறைப்பதற்காக வன ஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

**ஹம்தா லதீப்**
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# இலங்கையின் கல்விமுறையில் மாணவர் எதிர்நோக்கும் சவால்!




உலகளவில் மனிதன் சமுகத்தில் உயர்வாக மதிக்கப்படவும், போற்றப்படவும் முக்கிய காரணமான கல்வி வளரச்சியை மேம்படுத்துவதில் எமது நாடான இலங்கையானது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இருப்பினும் எமது சவால்மிகு கல்விகொள்கை மற்றும் திட்டமிடல் நடைமுறையானது மாணவர் வாழ்க்கையை பாதிக்கச் செய்வது எமது கல்வியின் முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றாகும்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி உலகில் அதிகம் படித்தவர்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தில் உள்ளது. அதன்படி கனடாவில் 59.96 சதவீதம் படித்தவர்கள் உள்ளனர். சீனா 52.68 சதவீதம் கல்வி அறிவுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

பின்லாந்து,இந்தோனேசியா,பிரான்ஸ் போன்ற சிறந்த கல்விக் கொள்கைகளை கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் கல்வி, கலைத்திட்டம் என்பன பல்வேறு சிக்கல்களை கொண்டு காணப்படுகின்றன.இதனாலேயே இலங்கை இன்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பட்டியலிலும் உள்ளது.

இலங்கையின் தற்காலக் கல்வியானது பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டுள்ளதுடன், நாட்டின் எதிர்கால தலைவர்களாக கருதப்படும் இளம் சமுதாய மாணவர்களின் வாழ்கையில் பாதிப்பை செலுத்தி வருகின்றது. கொவிட் தொற்றினை தொடர்ந்து பாதிக்கப்பட்ட எமது நாட்டின் பொருளாதாரம் மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியது. அத்தோடு ஆசிரியர் சங்க சுகவீன விடுமுறை, தொழிற்சங்க போராட்டங்களால் கல்வி மீதான ஆர்வம் மற்றும் நம்பிக்கை சீர்குலைந்துள்ளது.

**ஆசிரியர் சங்கத்தினரின் சுகவீன விடுமுறை உட்பட ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டங்களால் கல்வி மீதான ஆர்வம் மற்றும் நம்பிக்கை மாணவர்கள் மத்தியில் குறைகிறது!**

கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களும் அதிகரித்த பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை போன்ற பல்வேறு காரணிகளால் தனது நம்பிக்கையை தளரவிட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடுகள் நோக்கி செல்லும் நிலைமையும் உள்ளது. பாடசாலை இடைவிலகல் போன்ற சிக்கல்களும் உள்ளன.இன்று இலங்கையில் கலைதிட்டமானது காலத்திற்குகாலம் சீர்திருத்தப்பட்டு தொழிற்கல்வி, வாழ்நாள் நீடித்த கல்வி,தொலைகல்வி என பல்வோறு கல்வியை திட்டமிடுகின்ற போதிலும் அவற்றை பாடசாலைகளில் முறையாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலம் வழங்கப்படுதல் என்பது குறைவாகவே உள்ளது.

மாணவர்களிடையே தேடி கற்றல், சுயகற்றல், தொழில்நுட்ப அறிவு, நுண்ணறிவு என்பதும் மட்டுப்படுத்தபட்டதாகவே காணப்படுகின்றது. சாதாரண தர பரீட்சைகளின் பின்னரே தனக்கென ஓர் துறையை தேர்ந்தெடுக்க வேண்டியநிலை கொண்ட இலங்கை கல்விமுறையானது பெரும்பாலான மாணவர்களின் துரநோக்கை பின்தள்ள செய்கின்றது. இதனாலேயே இன்று வணிக தொழிநுட்ப துறைகளை தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது.

மாணவர்கள் பல்கலைக்கழக உயர்கல்விக்குத் தெரிவு செய்யப்படுகின்ற போது தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவு போதாமையால் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.இவற்றுக்கு மேலதிகமான கல்வியில் காலதாமதம் என்பதும் இன்றைய கல்வியில் ஓர் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இணையவழி கற்றலால் மாணவர்களின் தொடர்பாடல் திறன், எழுதும் திறன், தலைமைத்துவப் பண்பு என்பன குறைவடைந்து கொண்டே செல்வதோடு உளரீதியான பாதிப்புகளை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட வரலாற்றைக் கொண்டதாகவும் எமது ஜனநாயக நாட்டின் சமூக விருத்திக்கும் சமூக பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் அவசியமான எமது நாட்டின் கல்வியானது தற்காலத்தில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகிறது.

இவ்வாறாக இலங்கை கல்வி எதிர்நோக்கும் கல்வி சிக்கல்களை முறையாக திட்டமிட்டு தீர்ப்பு வழங்குவதன் வாயிலாக எதிர்கால தலைவர்களாகிய மாணவ சமூகத்தை முறையாக கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்தி அடைய செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அபிவிருத்தியின் முக்கிய அளவுகோலான கல்வியில் ஏற்படுத்தும் மாற்றமே உலகளாவிய ரீதியில் ஒரு நாட்டினை அடையாளப்படுத்த செய்யும். எனவே சிக்கலில்லாத கல்விக் கொள்கைகளை உருவாக்கி எதிர்காலத்தை கட்டியெழுப்புவது அவசியம்.

**க. இளையரசி**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி, பிள்ளைநலத்துறை
கிழக்கு பல்கலைகழகம்